# 5

# வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

*மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைந்து போனமை, செலாவணி வீதங்களின் பாரிய தேய்வு, மற்றும் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறை போன்றவற்றிற்கு மத்தியில் கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களுடன் 2022இல் இலங்கையில் வெளிநாட்டுத் துறை முன்னொருபோதுமில்லாத சவால்களை எதிர்நோக்கியது. உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் தோற்றம்பெற்ற திரவத்தன்மையின் கடுமையான பற்றாக்குறை ஏனையவற்றிற்கிடையே, பெற்றோலியம், சமையல் எரிவாயு, மருந்துப்பொருட்கள், மற்றும் வளமாக்கி போன்ற அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளுக்கு தடைகளை ஏற்படுத்தி, அதன்மூலம் சமூகப் பதற்றங்கள் உயர்வடைந்து நிச்சயமற்ற அரசியல் நிலைமைகளுக்குக் காரணமாகியது. விடாப்பிடியான எதிர்மறைக் கசிவுத் தாக்கங்களைத் தடுப்பதற்கு நாணயக் கொள்கையின் கடுமையான இறுக்கமடைதல், 2022 ஏப்பிறல் நடுப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு செய்வதனை இடைக்காலமொன்றிற்கு இடைநிறுத்துதல், குறிப்பிட்ட இறக்குமதிகள் மற்றும் கொடுப்பனவு நியதிகளை தற்காலிகமாக இடைநிறுத்துதல், தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிகள், மற்றும் மூலதனப் பாய்ச்சலின் முகாமைத்துவ வழிமுறைகள் மீதான எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை விதித்தல் என்பனவற்றை உள்ளடக்கிய முக்கியமான கொள்கைத் தலையீடு தேவைப்படுத்தப்பட்டது. 2022 ஏப்பிறலில் இலங்கை பொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. 2022 செத்தெம்பரில் பணியாளர் மட்ட உடன்படிக்கை அடையப்பட்டு, 2023 மாச்சில், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் ஒப்புதல் பெறப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதியிடலைப் பெற்றுக்கொள்ளுவதன் ஒரு பகுதியாக பொதுப் படுகடன் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதை இலக்காகக்கொண்டு, பொதுப் படுகடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் வழிமுறைகளை முன்னெடுத்தது. வெளிநாட்டு நிதியிடல் உட்பாய்ச்சல்கள் மற்றும் உயர்ந்தளவிலான நியாயமற்ற கொடுகடன் தரமிடல்கள் குறைவடைந்தமைக்கு மத்தியிலும் தற்காலிக இடைநிறுத்தல்களினால் தொடர்ச்சியான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் பாதிக்கப்படாத அதேவேளையில், அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதிக்கு வசதியளிக்கும் பொருட்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை எடுப்பனவு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. கொடுகடன் தொடர்களின் மூலமும் பல்புடை அபிவிருத்திப் பங்காளர்களின் மூலமும் நட்பு நாடுகளிலிருந்து நிதியுதவியும் கிடைக்கத்தக்கதாகவிருந்ததுடன் அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்கும் உதவியது. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் ஏற்பட்ட கடுமையான அழுத்தங்களை கருத்திற்கொண்டு, 2022 மாச்சு தொடக்கத்தில், செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கமொன்று நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்டது. எனினும், அதன் பின்னரான மிதக்கும் செலாவணி வீதம், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் பாதகமான சந்தை மனோபாவங்கள் போன்றவற்றின் காரணமாக செலாவணி வீதத்தில் பாரிய தேய்வொன்றை தோற்றுவித்தது. மத்திய வங்கி 2022 மே நடுப்பகுதியிலிருந்து நடுவீதத்தினையும் மாறுபடும் அளவினையும் வெளியிட்டமையின் மூலம் உடன் செலாவணி வீதத்தின் மீது சந்தை வழிகாட்டலை வழங்கத் தொடங்கியமை ஒரு நாளுக்குள்ளேயான கணிசமான தளம்பல்களிலிருந்து செலாவணி வீதத்தினை உறுதிப்படுத்துவதற்கு உதவியது.*

*வெளிநாட்டுத் துறையில் அழுத்தங்களை முகாமைத்துவம் செய்வதற்கு தேவைப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தகக் கொள்கைகள், செலாவணி வீதத்தில் ஏற்பட்ட கடுமையான தேய்வு மற்றும் இறுக்கமான நாணய மற்றும் இறை நிலைமைகள் என்பனவற்றினால் கடுமையாக குறைவடைந்த இறக்குமதி செலவினத்துடன் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட பாரிய சுருக்கத்தினால் வழிவகுக்கப்பட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2022இல் குறிப்பிடத்தக்களவில் மிதமடைந்தது. அதேவேளை, ஏனையவற்றிற்கிடையே, ஆடைகள் உள்ளிட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தூண்டப்பட்டு வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகள் அதிகரித்தன. சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பணிகள் கணக்கிலுள்ள வர்த்தகத்தின் மிகை ஓரளவிற்கு அதிகரித்தவேளையில், ஏனைய அனைத்துப் பணிகள் துணை துறை வகைகளுக்குமான உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022இன் பின்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டவேளையில், முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2021 உடன் ஒப்பிடுகையில், சிறிதளவு மிதமடைந்தது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் மிதமானதாகக் காணப்பட்டது.*

*2022இல் பதிவுசெய்யப்பட்ட வரலாற்றிலேயே மிக உயர்ந்த பெறுமானத்தேய்வினைத் தொடர்ந்து, இலங்கை ரூபா 2023இன் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க உயர்வினைக் காட்டியதன் மூலம் பாரியளவிலான மிகைப்படுத்தப்பட்ட நிலைமைகள் ஓரளவிற்குச் சரிசெய்யப்பட்டன. இவ்வுயர்விற்கு, முக்கியமாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட ஏற்பாட்டை இறுதிப்படுத்துவதை நோக்கிய மேம்பட்ட சந்தை மனோபாவங்கள், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகளில் மேம்பாடுகள், மற்றும் மத்திய வங்கிக்கு உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணியை கட்டாய விற்க வேண்டும் என்ற தேவைப்பாடுகளை தளர்த்தல் அதனைத்தொடர்ந்து நீக்குதல் போன்றவை ஆதரவளித்தன. எதிர்பார்க்கப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாடு மற்றும் தளர்த்தப்படுகின்ற சென்மதி நிலுவை அழுத்தங்கள் என்பவற்றுடன், பொருட்கள் மற்றும் பணிகளின் வர்த்தகம் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டுத் துறை நடவடிக்கையானது எதிர்வரும்காலத்தில் இயல்புநிலையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதியை நிலையான வகையில் முன்னேற்றமடையச் செய்ய உதவுவதுடன் இதன்மூலம், எதிர்வரும்காலத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதை வசதிப்படுத்தும். மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் படிப்படியான உருவாக்கம் மற்றும் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு, அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான மேலதிக நிதியிடலைப் பெறுதல், அத்துடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட*

5

### அட்டவணை 5.1
### சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை


| விடயம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூ. மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2021 (அ) | 2022 (ஆ) | 2021 (அ) | 2022 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-3,284** | **-1,453** | **-656,314** | **-316,154** |
| **வர்த்தக நிலுவை** | **-8,139** | **-5,185** | **-1,617,274** | **-1,502,420** |
| ஏற்றுமதிகள் | 12,499 | 13,106 | 2,486,943 | 4,234,913 |
| இறக்குமதிகள் | 20,637 | 18,291 | 4,104,218 | 5,737,333 |
| **பணிகள் (தேறிய)** | **1,586** | **2,110** | **316,424** | **644,934** |
| பெறுகைகள் | 2,475 | 3,062 | 493,320 | 952,999 |
| கொடுப்பனவுகள் | 889 | 953 | 176,896 | 308,066 |
| **முதலாந்தர வருமானம் (தேறிய)** | **-1,959** | **-1,874** | **-390,158** | **-618,071** |
| பெறுகைகள் | 116 | 249 | 22,965 | 84,209 |
| கொடுப்பனவுகள் | 2,075 | 2,124 | 413,122 | 702,280 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **5,228** | **3,496** | **1,034,694** | **1,159,404** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 5,498 | 3,793 | 1,088,388 | 1,253,677 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,491 | 3,789 | 1,087,188 | 1,252,504 |
| அரசாங்க மாற்றல்கள் | 6 | 3 | 1,200 | 1,173 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 270 | 296 | 53,694 | 94,272 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **25** | **19** | **5,009** | **6,123** |
| மூலதன கணக்கு: வரவு | 50 | 38 | 9,850 | 11,909 |
| மூலதன கணக்கு: செலவு | 24 | 19 | 4,841 | 5,786 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-3,259** | **-1,433** | **-651,305** | **-310,030** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-4,211** | **-1,946** | **-844,973** | **-538,153** |
| **நேரடி முதலீடு: சொத்துக்கள்** | **17** | **15** | **3,468** | **4,892** |
| **நேரடி முதலீடு: பொறுப்புகள்** | **592** | **898** | **117,894** | **309,142** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: சொத்துக்கள்** | **-** | **-** | **-** | **-** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு: பொறுப்புக்கள்** | **-1,547** | **355** | **-305,900** | **168,647** |
| பங்கு மூலதனம் | -232 | 137 | -46,061 | 30,342 |
| படுகடன் பிணையங்கள் | -1,315 | 218 | -259,838 | 138,305 |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு: சொத்துக்கள்** | **387** | **1,302** | **77,454** | **390,162** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 306 | 514 | 62,761 | 152,168 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 257 | 282 | 51,199 | 89,293 |
| ஏனைய பெறத்தக்க கணக்குகள் | -176 | 506 | -36,506 | 148,700 |
| **ஏனைய முதலீடு: பொறுப்புகள்** | **3,053** | **776** | **615,978** | **183,589** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 4,016 | 272 | 810,195 | -9,248 |
| கடன்கள் | -1,503 | -92 | -299,296 | 51,432 |
| மத்திய வங்கி | -57 | -140 | -11,377 | -48,316 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -2,152 | -1,645 | -429,506 | -495,847 |
| மத்திய அரசாங்கம் | 873 | 1,679 | 174,382 | 580,605 |
| ஏனைய துறைகள் | -167 | 13 | -32,795 | 14,989 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -426 | -895 | -87,405 | -279,812 |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | 180 | 1,492 | 34,713 | 421,218 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 787 | - | 157,771 | - |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **-2,517** | **-1,234** | **-497,923** | **-271,828** |
| நாணய தங்கம் | -212 | -152 | -42,734 | -38,820 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 123 | -118 | 24,635 | -41,965 |
| ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை | - | -58 | - | -20,980 |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | -2,428 | -906 | -479,823 | -170,064 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 1,536 | -895 | 300,122 | -166,305 |
| பிணையங்கள் | -3,967 | -11 | -780,435 | -3,691 |
| ஏனைய கோரல்கள் | 3 | ... | 490 | -69 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **-952** | **-513** | **-193,669** | **-228,122** |
| **திரண்ட நிலுவை (இ)** | **-3,967** | **-2,806** | **-745,312** | **-1,087,831** |
| **மொ.உ.உ. இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | -9.2 | -6.7 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் (தேறிய) | -7.4 | -4.0 | | |
| நடைமுறை கணக்கு மீதி | -3.7 | -1.9 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய) | -3.7 | -1.9 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.12 பார்க்குக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


வரைபடம் 5.1

## வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்




5

வரைபடம் 5.2
சென்மதி நிலுவை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*நிதிய வசதியின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல் மற்றும் கிட்டியகாலத்தில் படுகடன் மறுசீரமைப்பு செயன்முறையை நிறைவுசெய்தல் என்பன முதலீட்டாளர் நம்பிக்கையை வலுப்படுத்துமெனவும் நாட்டினுடைய பன்னாட்டு தரப்படுத்தல்களை முன்னேற்றுமெனவும் எதிர்பார்க்கப்படுவதுடன் இதன்மூலம், எதிர்வரும் காலத்தில், வெளிநாட்டுத்துறையின் உறுதிப்பாடு மேலும் வலுவடையும்.*

## 5.2 நடைமுறைக் கணக்கு நிலுவை

**வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமை, பணிகளிலுள்ள வர்த்தகத்தின் மீட்சி, முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவில் மிதமடைந்தமை மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு மிகை சுருக்கமடைந்தமை போன்றவற்றுடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் சுருக்கமடைந்தது.** வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் விரிவடைந்தமை மற்றும் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் சுருக்கமடைந்தமை என்பனவற்றுடன் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை பெருமளவிற்கு சுருக்கமடைந்தது. இது, ஏனையவற்றிற்கிடையில், கடுமையான சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் பொருளாதார நடவடிக்கை மிதமடைந்தமை மற்றும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகள் போன்றவற்றின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையினால் நன்மையளிக்கப்பட்டு ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, முக்கியமாக ஆடைகள், பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற வகைகளில் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதே மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டவேளையில், நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட கணிசமான சுருக்கத்தினால் தூண்டப்பட்டு வணிகப்பொருள் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தது. வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையின் முன்னொருபோதுமில்லாத பற்றாக்குறைக்கு மத்தியில் அத்தியாவசிய இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு வழிமுறைகளும் அதேபோன்று பொருளாதார நடவடிக்கையின் சுருக்கத்துடன் இணைந்து இறக்குமதிக்கான கேள்வி குறைவடைந்தமையும் செலாவணி வீதம் கடுமையாக தேய்வடைந்தமையினைத் தொடர்ந்து இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமையும் இறக்குமதிகள் குறைவடைந்தமைக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. ஒருங்கிணைவாக, உள்நாட்டு வழங்கல்பக்க இடையூறுகள் படிப்படியாக மறைந்து போனமை மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான கரிசனைகள் தளர்வுற்றமையுடன் உலகளாவிய பயண நடவடிக்கைகள் கணிசமானளவிற்கு அதிகரிக்கத் தொடங்கியமை என்பனவற்றின் முக்கிய காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மீட்சியடைந்து பணிகள் கணக்கு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. எனினும், வான் மற்றும் கடல் சரக்கு போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறைக்கான பணிகளின் உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிகள் கணக்கிலுள்ள அனைத்து ஏனைய துறைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் கணிசமானளவிற்கு குறைவடைந்து காணப்பட்டன. முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களின் சிறிய அதிகரிப்புக்கு மத்தியில் வங்கிகளின் உயர்வடைந்த பன்னாட்டு வட்டி வீதங்கள் மற்றும் வெளிநாட்டுச் சொத்து நிலைமைகள் என்பனவற்றின் விளைவாக வங்கித்தொழிற்துறைக்கு உயர்வடைந்த வட்டி உட்பாய்ச்சல்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சிறிதளவில் மிதமடைந்தது. இருப்பினும், இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2022இன் பின்னரைப்பகுதியில் மீளெழுச்சியுற்றதெனினும் 2021 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு குறைந்தளவு மட்டத்தினையே பதிவுசெய்தது. ஒட்டுமொத்தமாக, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2021இன் ஐ.அ.டொலர் 3,284 மில்லியனுடன் ஒப்பிடுகையில் (மொ.உ.உற்பத்தியில் 3.7 சதவீதம்) 2022இல் ஐ.அ.டொலர் 1,453 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியில் -1.9 சதவீதம்) சுருக்கமடைந்தது.

### 5.2.1 வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு வர்த்தக நிலுவை

**வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2010இற்குப் பின்னர் 2022இல் குறைந்தளவில் பதிவுசெய்யப்பட்டமையானது, 2022இற்கான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் ஏற்பட்ட**

அட்டவணை 5.2
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2021 (அ) | | | 2022 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **14,974** | **21,526** | **-6,552** | **16,169** | **19,244** | **-3,075** |
| **பொருட்கள்** | **12,499** | **20,637** | **-8,139** | **13,106** | **18,291** | **-5,185** |
| பொது வணிகம் | 12,499 | 20,636 | -8,138 | 13,106 | 18,289 | -5,183 |
| நாணயமல்லா தங்கம் | - | 1 | -1 | - | 2 | -2 |
| **பணிகள்** | **2,475** | **889** | **1,586** | **3,062** | **953** | **2,110** |
| போக்குவரத்து | 608 | 256 | 352 | 676 | 333 | 343 |
| கடல்வழி போக்குவரத்து | 450 | 150 | 300 | 410 | 137 | 272 |
| சரக்குத் தொகுதி | 450 | 150 | 300 | 410 | 137 | 272 |
| வான்வழி போக்குவரத்து | 158 | 106 | 52 | 266 | 195 | 71 |
| பயணிகள் | 108 | 89 | 19 | 221 | 180 | 41 |
| சரக்குத் தொகுதி | 50 | 17 | 33 | 46 | 15 | 30 |
| பயணம் (இ) | 507 | 239 | 268 | 1,136 | 244 | 893 |
| கட்டுமானம் | 10 | 11 | -1 | 9 | 11 | -2 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 20 | 37 | -17 | 19 | 36 | -18 |
| நிதியியல் பணிகள் | 95 | 102 | -7 | 92 | 96 | -5 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 1,201 | 171 | 1,030 | 1,097 | 161 | 936 |
| தொலைத்தொடர்புகள் | 32 | 31 | 2 | 31 | 28 | 3 |
| கணனி பணிகள் | 1,168 | 140 | 1,028 | 1,066 | 133 | 933 |
| ஏனைய வியாபார பணிகள் | 16 | 17 | -1 | 15 | 16 | -1 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் வே.எ.கு. | 19 | 57 | -38 | 18 | 56 | -38 |
| **முதலாந்தர வருமானம்** | **116** | **2,075** | **-1,959** | **249** | **2,124** | **-1,874** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 30 | 74 | -43 | 30 | 69 | -39 |
| முதலீட்டு வருமானம் | 86 | 2,002 | -1,916 | 220 | 2,055 | -1,836 |
| நேரடி முதலீடு | 16 | 567 | -551 | 15 | 532 | -517 |
| பங்கு இலாபங்கள் | 12 | 278 | -266 | 12 | 418 | -407 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | 4 | 289 | -285 | 3 | 114 | -111 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 830 | -830 | - | 784 | -784 |
| பங்கு மூலதனம் | - | 25 | -25 | - | 29 | -29 |
| வட்டி | - | 805 | -805 | - | 755 | -755 |
| குறுங்காலம் | - | ... | ... | - | 1 | -1 |
| நீண்டகாலம் | - | 805 | -805 | - | 754 | -754 |
| ஏனைய முதலீடு | 43 | 605 | -562 | 200 | 738 | -538 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 27 | - | 27 | 5 | - | 5 |
| **இரண்டாந்தர வருமானம்** | **5,498** | **270** | **5,228** | **3,793** | **296** | **3,496** |
| பொது அரசாங்கம் | 6 | - | 6 | 3 | - | 3 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 5,491 | 270 | 5,221 | 3,789 | 296 | 3,493 |
| **நடைமுறை கணக்கு** | **20,587** | **23,871** | **-3,284** | **20,211** | **21,664** | **-1,453** |
| **மூலதன கணக்கு** | **50** | **24** | **25** | **38** | **19** | **19** |
| மூலதன மாற்றல்கள் | 50 | 24 | 25 | 38 | 19 | 19 |
| பொது அரசாங்கம் | 11 | - | 11 | 6 | - | 6 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 38 | 24 | 14 | 32 | 19 | 13 |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு** | **20,637** | **23,896** | **-3,259** | **20,249** | **21,682** | **-1,433** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் போக்குவரத்துப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

**வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது.** வர்த்தகப் பற்றாக்குறை 2021இன் ஐ.அ.டொலர் 8,139 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 5,185 மில்லியனுக்கு குறைவடைந்தமைக்கு, வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகிய இரண்டும் காரணங்களாக அமைந்தன. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மைக் கட்டுப்பாடுகள், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா பாரியளவிற்கு தேய்வடைந்தமையின் தாக்கம், உயர்வடைந்த பணவீக்கத்திற்கு மத்தியில் வட்டி வீதங்கள் உயர்வடைந்தமை மற்றும் உண்மை வருமானம் தேய்வடைந்தமை போன்றவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில், தனியார் துறைக்கான கொடுகடனில் காணப்பட்ட பாரியளவு வீழ்ச்சிக்கு மத்தியில் குறைவடைந்த நடவடிக்கை மற்றும் கூட்டுக் கேள்வி நிலைமைகள், மற்றும் சென்மதி நிலுவை அழுத்தங்களின் காரணமாக இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கான நிருவாக வழிமுறைகள் என்பன உள்ளடங்கலாக பல்வேறுப்பட்ட காரணிகள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இறக்குமதிச் செலவினங்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. செலாவணி வீதத்தின் குறிப்பிடத்தக்க தேய்வு ஏற்றுமதியாளர்களுக்கான ரூபா வருமானத்தினை அதிகரித்தமை, ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளின் இறக்குமதிக்கு முன்னுரிமையளித்தமை, உலகளாவிய சந்தையில் காணப்பட்ட உயர்ந்த பண்ட விலைகள், ஆண்டின் முதலரைப்பகுதியில் ஆடை போன்ற முக்கிய ஏற்றுமதிப்பொருட்களுக்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வி, மற்றும் சில ஏற்றுமதி நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நிருவாக வழிமுறைகள் என்பன ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குப் பங்களித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2021இன் 9.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 6.7 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.


5

## ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம், வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### ஏற்றுமதிச் செயலாற்றம்

**அதிகரித்துச் செல்லும் உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சவால்களுக்கு மத்தியில், சாதகமான செலாவணி வீதம், இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளுக்கு நிதியளிக்கும்போது ஏற்றுமதி கைத்தொழில்களுக்கு முன்னுரிமையளித்தமை, மற்றும் உலகளாவிய பண்ட விலைகளின் உயர்வு என்பனவற்றால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டு வணிகப்பொருள் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை பதிவுசெய்து, 2022இல் ஐ.அ.டொலர் 13 பில்லியன் கொண்ட மட்டத்தினை விஞ்சிக் காணப்பட்டது.** இதற்கமைய, வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021இன் ஐ.அ.டொலர் 12,499 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 13,106 மில்லியனை அடைந்து 4.9 சதவீதம் கொண்ட

வரைபடம் 5.3
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை
(ஐ.அ.டொ. பில்லியன்)





*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வளர்ச்சியைப் பதிவுசெய்தது. வேளாண்மை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தவேளை கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் இரண்டினதும் வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இம்முன்னேற்றத்திற்குப் பங்களித்திருந்தது. செலாவணி வீதத்தில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வு மற்றும் உலகளாவிய சந்தையில் குறிப்பாக, 2022இன் பெரும்பாலான காலப்பகுதியில் ஆடைகளுக்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வி, இரத்தினக்கற்களின் ஏற்றுமதியுடன் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்தி வலுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், மற்றும் பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்களின் அதிகரித்த ஏற்றுமதிகள் என்பன கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. உலகளாவிய நடவடிக்கைகள், குறிப்பாக இலங்கையின் பாரிய ஏற்றுமதிச் சந்தைகளின் நடவடிக்கைகள், குறைவடைந்தமையின் காரணமாக உலகளாவிய கேள்வி குறைவடைந்தமைக்கு மத்தியில் 2022 செத்தெம்பரிலிருந்து ஏற்றுமதி வருவாய்களின் மிதமான தன்மையொன்று அனைத்து முக்கிய ஏற்றுமதித் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. ஏற்றுமதிச் சுட்டெண்களின் அசைவுகள் எடுத்துக்காட்டுகின்றவாறு, அளவுகள் மற்றும் விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பு ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏற்றுமதி வருவாய்கள் 2021இன் 14.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 17.0 சதவீதத்திற்கு மேம்பட்டன.

**மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 80 சதவீதப் பங்கிற்குப் பங்களிப்பாளராக விளங்கும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2021இன் ஐ.அ.டொலர் 9,702 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 10,465 மில்லியனுக்கு 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** 2022இன் பிற்பகுதியில் வருவாய்களில் மிதமான தன்மைகள் காணப்பட்டமைக்கு மத்தியிலும் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகள், முன்னணி ஏற்றுமதி வருவாய் ஈட்டுநராகத் தொடர்ந்தும் விளங்கி, மொத்த ஏற்றுமதிகளில் 45 சதவீதத்திற்கும் அதிகமானளவிற்கு வகைகூறின. இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், மற்றும் பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் (முக்கியமாகப் பொறிகள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள்) என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2022இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தன. நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் அளவு சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியவேளையில் உயர்ந்த மசகெண்ணெய் விலைகளின் காரணமாக ஏற்பட்ட விலைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. கொவிட்-19 இடர்நேர்வுகள் குறைவடைந்தமைக்கு மத்தியில் வீட்டுத்துறையினரின் கையுறைகளுக்கான கேள்வி குறைவடைந்தமையின் காரணமாக 2022இல் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்து 2021இன் மட்டத்திற்கு கீழாக ஐ.அ.டொலர் 1 பில்லியனைப் பதிவுசெய்தது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை (முக்கியமாக விலங்கு அல்லது மரக்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய்) ஏற்றுமதிகளிலும் வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன.

**போதுமான வளமாக்கி கிடைக்காமையின் காரணமாக ஏற்பட்ட காலங்கடந்த தாக்கத்தின் முக்கிய விளைவாக 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 5.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த சுருக்கத்துடன் வேளாண்மை ஏற்றுமதிகளின் வருவாய்களில் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது.** சராசரி விலைகளில் அதிகரிப்பு காணப்பட்டபோதும் அளவுகளில் ஏற்பட்ட பாரிய குறைப்பு காரணமாக தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த அளவுகள் (முக்கியமாக மிளகு மற்றும் கராம்பு) மற்றும் குறைவடைந்த விலைகள் (கறுவா) இரண்டினதும் காரணமாக வாசனைத்திரவியங்கள் குறைந்த ஏற்றுமதி

வரைபடம் 5.4
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2021 | | 2022 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,729.5** | **21.8** | **2,568.0** | **19.6** | **-161.5** | **-5.9** | **-26.6** |
| தேயிலை | 1,324.4 | 10.6 | 1,258.8 | 9.6 | -65.6 | -5.0 | -10.8 |
| தெங்கு | 425.2 | 3.4 | 400.3 | 3.1 | -25.0 | -5.9 | -4.1 |
| வாசனைத் திரவியங்கள் | 454.8 | 3.6 | 368.7 | 2.8 | -86.0 | -18.9 | -14.2 |
| கடலுணவு | 274.1 | 2.2 | 269.0 | 2.1 | -5.1 | -1.8 | -0.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 148.8 | 1.2 | 178.8 | 1.4 | 30.0 | 20.2 | 4.9 |
| இறப்பர் | 42.2 | 0.3 | 41.4 | 0.3 | -0.8 | -1.8 | -0.1 |
| மரக்கறிகள் | 28.5 | 0.2 | 26.7 | 0.2 | -1.9 | -6.6 | -0.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 31.6 | 0.3 | 24.4 | 0.2 | -7.2 | -22.8 | -1.2 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,702.0** | **77.6** | **10,465.3** | **79.8** | **763.3** | **7.9** | **125.6** |
| புடவைகளும் ஆடைகளும் | 5,435.1 | 43.5 | 5,952.0 | 45.4 | 516.9 | 9.5 | 85.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 1,050.4 | 8.4 | 977.0 | 7.5 | -73.4 | -7.0 | -12.1 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 500.9 | 4.0 | 580.9 | 4.4 | 80.1 | 16.0 | 13.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 506.4 | 4.1 | 568.0 | 4.3 | 61.6 | 12.2 | 10.1 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 586.9 | 4.7 | 519.5 | 4.0 | -67.4 | -11.5 | -11.1 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 276.7 | 2.2 | 450.6 | 3.4 | 173.9 | 62.8 | 28.6 |
| இரசாயன உற்பத்திகள் | 223.2 | 1.8 | 223.5 | 1.7 | 0.3 | 0.1 | 0.1 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 156.4 | 1.3 | 176.7 | 1.3 | 20.3 | 13.0 | 3.3 |
| விலங்குத் தீன் | 149.4 | 1.2 | 170.5 | 1.3 | 21.1 | 14.1 | 3.5 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 129.9 | 1.0 | 136.9 | 1.0 | 7.0 | 5.4 | 1.2 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 686.8 | 5.5 | 709.6 | 5.4 | 22.8 | 3.3 | 3.8 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **44.5** | **0.4** | **50.0** | **0.4** | **5.5** | **12.3** | **0.9** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **22.6** | **0.2** | **23.2** | **0.2** | **0.6** | **2.6** | **0.1** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **12,498.6** | **100.0** | **13,106.4** | **100.0** | **607.9** | **4.9** | **100.0** |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவின் பிற காரணிகளுக்காக சரிசெய்யப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



வருவாய்களைப் பதிவுசெய்தன. தெங்குடன் தொடர்பான உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த உள்ளீட்டு ஏற்றுமதி விலைகளே காரணமாகும். எனினும், 2022ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிட்ட உற்பத்திகளின் உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான பாக்கு ஏற்றுமதிகள் மற்றும் எள்ளின் ஏற்றுமதிகள் அதிகரித்தமையானது சிறுவேளாண்மை ஏற்றுமதித் துறையின் இவ்வளர்ச்சிக்கு வழியமைந்தது.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 50 மில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் அதிகரித்தன.** கனிப்பொருள் ஏற்றுமதிகளின் கீழ் காணப்பட்ட பெரும்பாலும் அனைத்துத் துணைத் துறைகளும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தவேளையில் ரைட்ரேனியம் தாதுக்களிலிருந்தான வருவாய்கள் இம்முன்னேற்றத்திற்கு முக்கியமாகப் பங்களித்திருந்தன. இலங்கையின் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 2022இன் மொத்த ஏற்றுமதிகளில் 0.4 சதவீதம் கொண்ட சிறிய பங்கொன்றிற்கு வகைகூறின.

## இறக்குமதிச் செயலாற்றம்

**குறிப்பிடத்தக்க சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அருந்தல் தன்மை, குறைவடைந்த கேள்வி நிலைமைகள், செலாவணி வீதத்தின் பாரிய தேய்வு மற்றும் இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கான நிருவாக வழிமுறைகள் என்பனவற்றின் தாக்கத்தினை பிரதிபலித்து உலகளாவிய எண்ணெய் விலைகள் உயர்வடைந்தபோதிலும் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது.** முதலீட்டுப்பொருட்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால்


தூண்டப்பட்டு இறக்குமதிகள் மீதான செலவினம் 2021இன் ஐ.அ.டொலர் 20,637 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 18,291 மில்லியனுக்கு 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிலவிய திரவத்தன்மைக் கட்டுபாடுகள், குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள், மற்றும் செலாவணி வீதங்களின் கடுமையான தேய்வினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உள்நாட்டு விலைகள் அதிகரித்தமை, அரசாங்கத்தினாலும் (குறிப்பிட்ட இறக்குமதிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, பல்வேறுபட்ட கொடுப்பனவு நிதியங்களின் கீழான குறிப்பிட்ட இறக்குமதிகள் இடைநிறுத்தப்பட்டமை, இறக்குமதி உரிமத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமை, குறிப்பிட்ட பொருட்கள் மீதான இறக்குமதி வரிகள் அதிகரிக்கப்பட்டமை போன்றவை உட்பட) மத்திய வங்கியினாலும் (குறிப்பிட்ட பொருட்கள் மீது அளவு வைப்புத் தேவைப்பாடுகள் மற்றும் இறுக்கமான நாணய மற்றும் கொடுகடன் நிபந்தனைகள் பேணப்பட்டமை உட்பட) நடைமுறைப்படுத்தப்பட்ட நிருவாக வழிமுறைகள் என்பனவற்றைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. எனினும், பெற்றோலிய எண்ணெய் உட்பட, உலகளாவிய சந்தையில் பண்ட விலைகள் 2022இல் தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமையானது முக்கியமாக எண்ணெய் இறக்குமதிகளால் தூண்டப்பட்டு இடைநிலைப்பொருட்கள் மீதான உயர்ந்த செலவினத்திற்கு வழியமைத்தது. நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2022இன் பிற்பகுதியில் உயர்வடைந்து செல்லும் போக்கினைக் காட்டியமையானது அரசாங்கத்தினால் குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையின் தாக்கத்தினையும் இறக்குமதிகளுக்கான பருவகாலக் கேள்வியையும் எடுத்துக்காட்டியது. இறக்குமதி அளவு மற்றும் அலகிற்கான பெறுமதி ஆகிய சுட்டெண்களின் அசைவுகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, கடந்த ஆண்டிலும் பார்க்க 2022இல் அலகுப் பெறுமதியின் அதிகரிப்பிற்கு மத்தியிலும் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமை குறைந்த அளவுகளில் பிரதிபலித்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதிச் செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2021இன் 23.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 23.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**உயர்ந்த உலகளாவிய உணவுப் பண்டங்களின் விலைகளுக்கு மத்தியிலும் குறைந்த இறக்குமதி அளவுகளின் விளைவாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.5 சதவீத மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது.** தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் (அரிசி மற்றும் கோதுமை மா போன்ற), குடிபானங்கள் மற்றும் வாசனைத்திரவியங்கள் தவிர்ந்த மிக முக்கியமான உணவு வகைகளின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 2022இல் தேங்காயெண்ணெயின் இறக்குமதி அளவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியும் 2021இல் காணப்பட்ட உயர்ந்த புள்ளிவிபரத் தளமும் எண்ணெய் மற்றும் கொழுப்பின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2022இல் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. மேலும், சராசரி இறக்குமதி விலைகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டமைக்கிடையிலும் குறைந்த இறக்குமதி அளவுகளால் தூண்டப்பட்டு 2022இல் பாற்பண்ணை உற்பத்திகள், பருப்பு வகை மற்றும் சீனி என்பன மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தது. மாறாக, வளமாக்கிப் பற்றாக்குறையின் பாதிப்பினால் உள்நாட்டு அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் 2021இனைவிட 2022இல் ஏறத்தாழ 300 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் மற்றும் **தொலைத்தொடர்பூட்டல் சாதனங்களின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியினால் வழிவகுக்கப்பட்டு, உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,205 மில்லியனுக்கு 44.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.** 2021இல் கொவிட்-19 நோய்த்தடுப்பு மருந்துகள் மீதான உயர்ந்த செலவினத்தின் புள்ளிவிபரவியல் தளத் தாக்கத்தினை பகுதியளவில் பிரதிபலித்து மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. மேலும், ஏனையவற்றிற்கிடையில், 2022 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அவசரமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளையும் வங்கித்தொழில் முறைமையில் காணப்பட்ட கடுமையான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினையும் பிரதிபலித்து, உணவல்லா நுகர்வுப்பொருட்கள் வகையின் கீழான அனைத்து ஏனைய துணைத் துறைகளும் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தன.

முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் **2022இல் ஐ.அ.டொலர் 3,030 மில்லியனுக்கு 32.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2010இற்குப் பின்னரான**

வரைபடம் 5.5
இறக்குமதிகளின் உள்ளடக்கம்




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2021 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2021 பங்கு % | 2022 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2022 (அ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,848.7** | **18.6** | **2,813.0** | **15.4** | **-1,035.7** | **-26.9** | **44.1** |
| உணவும் குடிபானங்களும் | 1,666.5 | 8.1 | 1,607.9 | 8.8 | -58.6 | -3.5 | 2.5 |
| அரிசி | 73.0 | 0.4 | 292.5 | 1.6 | 219.4 | 300.5 | -9.4 |
| சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் | 288.8 | 1.4 | 257.8 | 1.4 | -31.0 | -10.7 | 1.3 |
| பால் உற்பத்திகள் | 317.7 | 1.5 | 225.3 | 1.2 | -92.4 | -29.1 | 3.9 |
| பருப்புவகை | 143.0 | 0.7 | 116.9 | 0.6 | -26.1 | -18.2 | 1.1 |
| தேங்காய் எண்ணெய் | 166.1 | 0.8 | 27.2 | 0.1 | -138.9 | -83.6 | 5.9 |
| ஏனையவை | 677.8 | 3.3 | 688.3 | 3.8 | 10.4 | 1.5 | -0.4 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 2,182.2 | 10.6 | 1,205.1 | 6.6 | -977.1 | -44.8 | 41.6 |
| மருத்துவ மற்றும் மருந்தாங்கல் பொருட்கள் | 882.5 | 4.3 | 533.4 | 2.9 | -349.1 | -39.6 | 14.9 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 221.3 | 1.1 | 215.6 | 1.2 | -5.7 | -2.6 | 0.2 |
| வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள் | 161.2 | 0.8 | 116.3 | 0.6 | -45.0 | -27.9 | 1.9 |
| வீட்டுப் பாவனை உபகரணங்கள் | 257.1 | 1.2 | 85.5 | 0.5 | -171.6 | -66.7 | 7.3 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 382.9 | 1.9 | 69.0 | 0.4 | -313.9 | -82.0 | 13.4 |
| ஏனையவை | 277.2 | 1.3 | 185.4 | 1.0 | -91.8 | -33.1 | 3.9 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **12,308.9** | **59.6** | **12,438.8** | **68.0** | **129.8** | **1.1** | **-5.5** |
| எரிபொருள் | 3,742.9 | 18.1 | 4,896.8 | 26.8 | 1,153.9 | 30.8 | -49.2 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 3,066.9 | 14.9 | 3,065.2 | 16.8 | -1.8 | -0.1 | 0.1 |
| இரசாயன உற்பத்திகள் | 1,074.4 | 5.2 | 966.2 | 5.3 | -108.2 | -10.1 | 4.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 765.7 | 3.7 | 650.8 | 3.6 | -114.9 | -15.0 | 4.9 |
| தாள், அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 468.9 | 2.3 | 465.9 | 2.5 | -3.0 | -0.6 | 0.1 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 400.7 | 1.9 | 334.7 | 1.8 | -66.0 | -16.5 | 2.8 |
| அடிப்படை உலோகங்கள் | 866.4 | 4.2 | 323.2 | 1.8 | -543.3 | -62.7 | 23.2 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,922.9 | 9.3 | 1,736.0 | 9.5 | -186.9 | -9.7 | 8.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,462.7** | **21.6** | **3,030.5** | **16.6** | **-1,432.2** | **-32.1** | **61.0** |
| பொறி மற்றும் கருவிகள் | 2,809.5 | 13.6 | 1,969.0 | 10.8 | -840.5 | -29.9 | 35.8 |
| கட்டடப் பொருட்கள் | 1,248.9 | 6.1 | 926.3 | 5.1 | -322.5 | -25.8 | 13.7 |
| போக்குவரத்துக் கருவிகள் | 398.5 | 1.9 | 132.1 | 0.7 | -266.4 | -66.8 | 11.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 5.8 | 0.03 | 3.0 | 0.02 | -2.8 | -47.9 | 0.1 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **17.1** | **0.1** | **8.8** | **0.05** | **-8.3** | **-48.8** | **0.4** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)** | **20,637.4** | **100.0** | **18,291.0** | **100.0** | **-2,346.4** | **-11.4** | **100.0** |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) பின்னடைவுகள் மற்றும் பதிவின் பிற காரணிகளுக்காக சரிசெய்யப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



**மிகக் குறைந்த செலவினமொன்றினைப் பதிவுசெய்தது.** பொருளாதார நடவடிக்கைகள் மிதமடைந்தமை மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் காணப்பட்ட கணிசமான தடைகளுக்கு மத்தியில் இறக்குமதிகளை முன்னுரிமைப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் என்பவை முதலீட்டுப்பொருட்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக பங்களித்தன. பொறிகள் மற்றும் கருவிகள், கட்டடவாக்கப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய முதலீட்டுப்பொருட்களின் அனைத்து மூன்று முக்கிய வகைகளினதும் அவற்றின் பெரும்பாலான துணை வகைகளினதும் இறக்குமதிச் செலவினத்தில் கணிசமான 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. மின்னியல் உந்திகள் மற்றும் மின்உருவாக்கத் தொகுதிகள் மீதான செலவினம் அதிகரித்தவேளையில் அலுவலக இயந்திரங்கள் (முக்கியமாக கணனிகள்), பொறிகள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக மின்கடத்தி தொடர்பான துணைக்கருவிகள்) என்பன மீதான செலவினங்களின் வீழ்ச்சியானது பொறிகள் மற்றும் கருவிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வழியமைத்தது. இரும்பு மற்றும் உருக்கு, சீமெந்து, மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் (முக்கியமாக கல்நார்) என்பன கட்டடவாக்க பொருட்களின் இறக்குமதியின் வீழ்ச்சிக்கு வழியமைத்தவேளையில் வேளாண்மை உழுப்பொறிகள், தாங்கிகள் மற்றும் பவுசர்கள் மற்றும் புகையிரத சாதனங்கள் என்பன போக்குவரத்துச் சாதனங்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வழியமைத்தன.

**குறைந்த பொருளாதார நடவடிக்கையின் விளைவாக பெரும்பாலான துணை வகைகள் பரந்த அடிப்படையில் வீழ்ச்சியுற்றமைக்கிடையிலும் எரிபொருள் மீதான உயர்ந்த செலவினம் காரணமாக மொத்த இறக்குமதிகளில் 68 சதவீதத்திற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் சிறிதளவால் அதிகரித்தது.** இதற்கமைய, இடைநிலைப்பொருட்களின் செலவினம் 2021

உடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 12,439 மில்லியனுக்கு 1.1 சதவீதத்தினால் அதிகரித்தது. எரிபொருள் பங்கீட்டு முறை மற்றும் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலைச் சீராக்கங்கள் போன்ற கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலை பிரதிபலித்து, மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (திரவப் பெற்றோலிய வாயு உட்பட) மற்றும் நிலக்கரி உள்ளடங்கலாக அனைத்து துணைத் துறைகளினதும் இறக்குமதி அளவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தபோதிலும் அனைத்து துணைத் துறைகளுக்குமான இறக்குமதி விலைகளின் அதிகரிப்பின் முக்கிய காரணமாக இறக்குமதிக் கூடையில் மிகப் பெரிய இறக்குமதி விடயமாக விளங்கும் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தது. பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட விலை அசைவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலை 2021இன் பீப்பாயொன்றிற்கான ஐ.அ.டொலர் 68.86 இலிருந்து 2022இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 100.11 இற்கு அதிகரித்தது. எனினும், 2022இல் மசகெண்ணெய் அவ்வப்போது இறக்குமதி செய்யப்பட்டதால் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் இறக்குமதிகள் மூலம் நாட்டின் தொகை வடிவிலான பெற்றோலியத் தேவை பூர்த்திசெய்யப்பட்டது. 2021 உடன் ஒப்பிடுகையில் குறைந்த இறக்குமதி அளவுகள் காணப்பட்டமைக்கிடையில் 2022இல் வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எடுத்துக்காட்டியமைக்கு சராசரி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்தது. அதேவேளை, இறக்குமதிகளில் இரண்டாவது பெரிய விடயமாக விளங்கும் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் பெருமளவிற்கு மாற்றமின்றி காணப்பட்டது. மாறாக, அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு) மற்றும் கோதுமை என்பன பெருமளவில் வீழ்ச்சியடைந்ததுடன் இடைநிலைப்பொருட்களின் கீழுள்ள மற்றைய முக்கிய துணைத் துறைகள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. மேற்குறிப்பிட்டவற்றின் விளைவாக எரிபொருள் அல்லா இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 12.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

5

## வர்த்தக மாற்று விகிதம்

**இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்கும் வர்த்தக மாற்று விகிதமானது ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணிலும் பார்க்க இறக்குமதி விலைச் சுட்டெண் உயர்ந்த வேகத்தில் அதிகரித்தமையினால் 2022இல் மேலும் தேய்வடைந்தது.** ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளினதும் விலைச் சுட்டெண்களில் காணப்பட்ட அதிகரிப்புக்கள் ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரிப்பதற்கு பங்களித்த வேளையில், இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளினது உயர்ந்த விலைகளுக்கு உயர்ந்த உலகளாவிய எரிபொருள் விலைகள் வழியமைத்து ஒட்டுமொத்த இறக்குமதி விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பிற்கு முக்கியமாக வகைகூறின. எனவே, வர்த்தக மாற்று விகிதம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் 86.1 சுட்டெண் புள்ளிகளுக்கு 11.6 சதவீதத்தினால் தேய்வடைந்து, ஏற்றுமதிகளின் அலகொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்படக்கூடிய இறக்குமதிகளின் தொகை தேய்வடைந்துள்ளமையினை எடுத்துக்காட்டியது.

**ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் என்பனவற்றின் ஒட்டுமொத்த நடத்தைகளுக்கு 2022 காலப்பகுதியில் வர்த்தக அளவுகள் கணிசமாகப் பங்களித்தன.** வேளாண்மை ஏற்றுமதிகள் தவிர்ந்த, ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளுக்குமான அளவுச் சுட்டெண்கள் மேம்பட்டவேளையில், அனைத்து முக்கிய வகைகளுக்குமான இறக்குமதி அளவுச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தமையானது 2022இல் ஒட்டுமொத்த செலவினத்தில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது.

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 (அ) |
|---|---|---|---|---|---|
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)** | **4,959** | **4,740** | **4,028** | **4,553** | **3,927** |
| 1ஆம் காலாண்டு | 1,382 | 1,199 | 1,249 | 1,378 | 1,184 |
| 2ஆம் காலாண்டு | 1,207 | 1,206 | 678 | 1,008 | 935 |
| 3ஆம் காலாண்டு | 1,317 | 1,211 | 1,123 | 865 | 853 |
| 4ஆம் காலாண்டு | 1,054 | 1,124 | 978 | 1,302 | 954 |
| **கோதுமை** | **1,297** | **1,159** | **1,404** | **1,307** | **583** |
| 1ஆம் காலாண்டு | 412 | 164 | 272 | 323 | 208 |
| 2ஆம் காலாண்டு | 329 | 318 | 285 | 288 | 129 |
| 3ஆம் காலாண்டு | 285 | 292 | 498 | 335 | 80 |
| 4ஆம் காலாண்டு | 271 | 385 | 348 | 360 | 167 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **1,674** | **1,842** | **1,667** | **1,182** | **649** |
| 1ஆம் காலாண்டு | 283 | 461 | 464 | 274 | 179 |
| 2ஆம் காலாண்டு | 459 | 460 | 265 | 368 | 80 |
| 3ஆம் காலாண்டு | 461 | 461 | 568 | 362 | 199 |
| 4ஆம் காலாண்டு | 471 | 460 | 370 | 178 | 191 |
| **சீனி** | **645** | **556** | **683** | **582** | **460** |
| 1ஆம் காலாண்டு | 205 | 140 | 193 | 293 | 119 |
| 2ஆம் காலாண்டு | 166 | 153 | 108 | 140 | 68 |
| 3ஆம் காலாண்டு | 119 | 100 | 209 | 14 | 131 |
| 4ஆம் காலாண்டு | 154 | 164 | 172 | 136 | 143 |
| **வளமாக்கி** | **861** | **707** | **952** | **412** | **363** |
| 1ஆம் காலாண்டு | 256 | 148 | 88 | 114 | 37 |
| 2ஆம் காலாண்டு | 154 | 142 | 294 | 182 | 32 |
| 3ஆம் காலாண்டு | 225 | 238 | 126 | 17 | 84 |
| 4ஆம் காலாண்டு | 226 | 179 | 444 | 98 | 210 |
| **அரிசி** | **249** | **24** | **16** | **147** | **783** |
| 1ஆம் காலாண்டு | 203 | 8 | 8 | 3 | 270 |
| 2ஆம் காலாண்டு | 37 | 3 | 2 | 4 | 156 |
| 3ஆம் காலாண்டு | 2 | 5 | 2 | 3 | 249 |
| 4ஆம் காலாண்டு | 7 | 8 | 4 | 137 | 108 |


(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## வர்த்தகத்தின் போக்கு

**முக்கிய வர்த்தக பங்காளர்களுடனான மொத்த வர்த்தகம் (ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டும்) 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்ததுடன் இலங்கையின் வர்த்தகப் பங்காளர்கள் பரந்தளவு மாற்றங்களெதுவுமின்றி காணப்பட்டன.** பெறுமதி நியதிகளில், 2022இல் இந்தியா இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவும் சீனாவும் காணப்பட்டதுடன், இவை ஒன்றுசேர்ந்து இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஏறத்தாழ 41 சதவீதத்திற்கு வகைகூறின. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு உதவியளிப்பதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்கள் பயன்படுத்தப்பட்டதனால் இந்தியாவுடனான மொத்த வர்த்தகம் ஐ.அ.டொலர் 5.5 பில்லியனை விஞ்சிய வேளையில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஒவ்வொன்றுடனுமான வர்த்தகம் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனை விஞ்சின. கொவிட்-19இன் விளைவாக சீனாவின் வழங்கல் சங்கிலியில் காணப்பட்ட இடையூறுகள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில்

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.6
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 (ஆ) | ஆண்டுக் காண்டு மாற்றம் % | 2021 | 2022 (ஆ) | ஆண்டுக் காண்டு மாற்றம் % | 2021 | 2022 (ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் % |
| ஏற்றுமதிகள் | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **118.4** | **111.4** | **-5.9** | **101.1** | **93.1** | **-7.9** | **117.1** | **119.7** | **2.1** |
| தேயிலை | 92.0 | 87.4 | -5.0 | 87.2 | 76.6 | -12.1 | 105.5 | 114.1 | 8.2 |
| இறப்பர் | 24.3 | 23.9 | -1.8 | 29.3 | 29.2 | -0.01 | 83.2 | 81.7 | -1.8 |
| தெங்கு | 256.7 | 241.7 | -5.9 | 188.1 | 193.5 | 2.9 | 136.5 | 124.9 | -8.5 |
| வாசனைத்திரவியங்கள் | 219.5 | 178.0 | -18.9 | 146.9 | 116.2 | -20.9 | 149.4 | 153.1 | 2.5 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 208.3 | 250.3 | 20.2 | 188.4 | 240.9 | 27.9 | 110.6 | 103.9 | -6.0 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **159.3** | **171.8** | **7.9** | **183.2** | **194.9** | **6.4** | **86.9** | **88.1** | **1.4** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 162.1 | 177.5 | 9.5 | 140.6 | 144.6 | 2.8 | 115.3 | 122.7 | 6.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 192.4 | 215.8 | 12.2 | 282.8 | 189.2 | -33.1 | 68.0 | 114.1 | 67.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 188.7 | 175.5 | -7.0 | 112.6 | 106.6 | -5.3 | 167.6 | 164.7 | -1.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **183.7** | **206.3** | **12.3** | **111.4** | **114.2** | **2.5** | **164.8** | **180.7** | **9.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **145.0** | **152.0** | **4.9** | **156.9** | **163.0** | **3.9** | **92.4** | **93.3** | **0.9** |
| இறக்குமதிகள் | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **155.5** | **113.7** | **-26.9** | **127.8** | **104.8** | **-18.0** | **121.7** | **108.5** | **-10.9** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 126.0 | 121.5 | -3.5 | 125.5 | 133.4 | 6.3 | 100.4 | 91.1 | -9.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 189.5 | 104.7 | -44.8 | 130.4 | 71.9 | -44.8 | 145.3 | 145.5 | 0.1 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **152.9** | **154.5** | **1.1** | **152.0** | **121.1** | **-20.3** | **100.6** | **127.6** | **26.9** |
| எரிபொருள் | 123.1 | 161.0 | 30.8 | 134.2 | 106.8 | -20.4 | 91.7 | 150.7 | 64.3 |
| வளமாக்கி | 65.9 | 114.9 | 74.4 | 74.5 | 68.1 | -8.6 | 88.4 | 168.6 | 90.7 |
| இரசாயன உற்பத்திகள் | 206.6 | 185.8 | -10.1 | 177.3 | 142.8 | -19.4 | 116.6 | 130.1 | 11.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 157.6 | 114.2 | -27.5 | 134.2 | 90.4 | -32.7 | 117.4 | 126.4 | 7.6 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 169.5 | 169.4 | -0.1 | 153.9 | 142.3 | -7.6 | 110.2 | 119.1 | 8.1 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 181.0 | 153.9 | -15.0 | 169.5 | 135.3 | -20.2 | 106.8 | 113.7 | 6.5 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 38.0 | 54.0 | 41.9 | 41.9 | 46.0 | 9.9 | 90.9 | 117.3 | 29.1 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **162.0** | **110.0** | **-32.1** | **230.6** | **162.8** | **-29.4** | **70.3** | **67.6** | **-3.8** |
| கட்டடப் பொருட்கள் | 152.0 | 112.7 | -25.8 | 154.5 | 99.2 | -35.8 | 98.3 | 113.7 | 15.6 |
| போக்குவரத்துக் கருவி | 67.3 | 22.3 | -66.8 | 46.7 | 19.8 | -57.6 | 144.2 | 112.7 | -21.9 |
| பொறி மற்றும் கருவிகள் | 210.1 | 147.2 | -29.9 | 359.0 | 265.4 | -26.1 | 58.5 | 55.5 | -5.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 174.5 | 90.8 | -47.9 | 142.6 | 77.7 | -45.5 | 122.3 | 116.9 | -4.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | **153.9** | **136.4** | **-11.4** | **162.2** | **126.0** | **-22.4** | **94.9** | **108.3** | **14.1** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **97.4** | **86.1** | **-11.6** |

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


5

நுகர்வு மற்றும் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமை என்பனவற்றின் பகுதியளவிலான காரணமாக சீனாவிலிருந்தான இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தமையினால் சீனாவுடனான மொத்த வர்த்தகம் 2022இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. ஐக்கிய இராச்சியம், மலேசியா, ஜேர்மனி, ஐக்கிய அரபு எமிறேட்ஸ், மற்றும் சிங்கப்பூர் என்பன முக்கியமான ஏனைய வர்த்தக பங்காளர்களாக 2022இல் விளங்கி ஒவ்வொரு நாடும் ஐ.அ.டொலர் 1 பில்லியனிற்கு அதிகமாக வகைகூறின. அதிகளவு எரிபொருள் இறக்குமதிகளால் வழிவகுக்கப்பட்டு ருஷியாவுடனான மொத்த வர்த்தகம் 2022இல் அதிகரித்தபோதிலும் ருஷியாவிற்கும் உக்ரேனுக்குமிடையிலான புவிசார் அரசியல் பதற்றங்கள், 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் உக்ரேனுடனான மொத்த வர்த்தகத்தினை அரைவாசியாக்கியுள்ளது. இந்தியா, சீனா, மலேசியா, மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் குறிப்பிடத்தக்களவு வர்த்தகப் பற்றாக்குறைகள் 2022இல் பதிவுசெய்யப்பட்டவேளையில், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் கனடா போன்ற நாடுகளுடன் குறிப்பிடத்தக்க வர்த்தக மிகைகள் பதிவுசெய்யப்பட்டு முக்கிய நாடுகள் அடிப்படையிலான வர்த்தக நிலுவைகள் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. வர்த்தகத்தின் போக்கு கடந்த தசாப்த காலத்திற்கு மேலாக பெருமளவிற்கு ஒரே மாதிரியாக காணப்படுவதுடன் இலங்கை ஏற்றுமதிகளுக்கான புதிய சந்தைகளை, குறிப்பாக இப்பிராந்தியத்தில் பன்முகப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்து கொள்வது அவசியமாகும்.

**ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கான ஏற்றுமதிகளின் சேரிடங்களாகத் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் 2022இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ அரைப்பங்கிற்கு வகைகூறின.** ஐக்கிய அமெரிக்கா ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுக்கும் அதிகப் பெறுமதி கொண்ட ஏற்றுமதிகளுடன் தொடர்ந்தும் இலங்கை ஏற்றுமதிகளின் தனிப்பெரும் வாங்குநராகத் விளங்கி வருவதுடன் இது மொத்த ஏற்றுமதிகளில் 25.3 சதவீதத்திற்கும் வகைகூறுகிறது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (7.3 சதவீதம்), இந்தியா (6.6 சதவீதம்), ஜேர்மனி (5.7 சதவீதம்) மற்றும் இத்தாலி (4.9 சதவீதம்) என்பன காணப்படுகின்றன. அதிகரித்த ஏற்றுமதிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் (ஜேர்மனி, பெல்ஜியம் மற்றும் அவுஸ்திரேலியா தவிர்ந்த) இலங்கையின் முதல் பத்து ஏற்றுமதி நாடுகள் உட்பட பெரும்பாலான நாடுகளிலிருந்தான வருவாய்கள் 2022இல் அதிகரித்தன. 2022இல் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 42 சதவீதப் பங்குடன் ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கான தனிப்பெரும் பாரிய ஆடை ஏற்றுமதி நாடாகத் தொடர்ந்தும் விளங்கியது. ஆடைகளுக்குப் புறம்பாக, முக்கியமாக இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களுக்கு வகைகூறின. ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பொறிகள் மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பன ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய உற்பத்திகளாகக் காணப்பட்டன. இந்தியாவிற்கான ஏற்றுமதிகளில் விலங்குத்தீன், வாசனைத்திரவியங்கள், புடவைகள், மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பன முனைப்பானவைகளாகக் காணப்பட்டன. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான மிக முன்னணிப் பிராந்தியமாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியம் 2022இன் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 23 சதவீதத்திற்கு வகைகூறியதுடன், மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 30 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய முக்கிய விடயங்களாக இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, மற்றும் தேயிலை என்பன காணப்பட்டதுடன் இவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பிய ஒன்றிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் முறைமை திட்டத்தின் (ஜிஎஸ்பி+) கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டன. 2022இல் மத்திய கிழக்கு மற்றும் பிரதானமாக ருஷியா உட்பட பொதுநலவாய சுதந்திர நாடுகள் என்பன தேயிலைக்கான முக்கிய ஏற்றுமதி சேரிடங்களாக விளங்கி கூட்டாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்குப் பங்களித்தன.

**ஆசிய நாடுகளிலிருந்தான ஒட்டுமொத்த இறக்குதிகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தபோதிலும் இலங்கை இறக்குமதிகளின் முக்கிய மூலங்களாக இந்நாடுகளில் அநேகமானவை தொடர்ந்தும் விளங்கின.** இந்தியா, 2018இற்குப் பின்னர் இறக்குமதிகளின் பாரிய மூலம் என்ற

வரைபடம் 5.7
நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ.மில்லியன்)



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


5

அதன் நிலையினை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டதுடன் இந்தியாவினால் வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்களின் கீழ் செய்யப்பட்ட இறக்குமதிகளால் உதவியளிக்கப்பட்டு, 2022இன் மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 25.9 சதவீதப் பங்குடன் ஐ.அ.டொலர் 4.7 பில்லியனுக்கும் கூடுதலான இறக்குமதிகளைப் பதிவுசெய்தது. இதற்கமைய, இந்தியாவிலிருந்தான இறக்குமதிச் செலவினம் 2.4 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் அரிசி இறக்குமதிகள் முக்கியமாக உதவின. அதேவேளை, 2022இல் சீனாவும் மலேசியாவும் இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரும் இறக்குமதி மூலங்களின் நாடுகளாக விளங்கி முறையே ஏறத்தாழ 18.0 சதவீதம் மற்றும் 5.3 சதவீதம் பங்குகளுக்கு வகைகூறின. சீனாவிலிருந்தான பொறி மற்றும் கருவிகள், மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (கொவிட்-19 தடுப்பூசிகள்), தொடர்பூட்டல் சாதனங்கள் (முக்கியமாக செல்லிடத் தொலைபேசிகள்), மற்றும் கட்டட மூலப்பொருட்கள் போன்ற பெரும்பாலான முக்கிய இறக்குமதி விடயங்கள் மீதான செலவினம் 2022இல் வீழ்ச்சியடைந்தது. மலேசியாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகளாக பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், மற்றும் உணவுத் தயாரிப்புக்கள் காணப்பட்ட வேளையில், பெற்றோலிய உற்பத்திகள் மலேசியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 65 சதவீதத்திற்குப் பங்களித்தன. இறக்குமதி மூலங்களாக சிங்கப்பூரும் ஐக்கிய அரபு எமிரேட்சும் தொடர்ந்தும் விளங்கி 2022இல் நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றிருந்தன. 2022இல் சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்சு இரண்டிலுமிருந்தான முக்கிய இறக்குமதிகள் பெற்றோலிய உற்பத்திகளையும் இரசாயன உற்பத்திகளையும் உள்ளடக்கியிருந்தன. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த இறக்குமிச் செலவினங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கையின் முதல் பத்து இறக்குமதி மூலங்கள் (இந்தியா, மலேசியா, ருஷியா மற்றும் சிங்கப்பூர் தவிர) உட்பட முக்கிய இறக்குமதி மூலங்களுடன் தொடர்பான செலவினம் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு


**நாடு முன்னொருபோதுமில்லாத விதத்தில் 2022இல் மோசமான பொருளாதாரச் சரிவினைக் காட்டியமைக்கிடையிலும் அனைத்து ஆர்வலர்களினதும் முயற்சிகளின் ஆதரவுடன் வணிகப்பொருள் வர்த்தகத் துறை தொடர்ந்தும் செழிப்பானதொரு**

வரைபடம் 5.8
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




*மூலம் : இலங்கைச் சுங்கம்*

வரைபடம் 5.9
நாடுகளின்படி இறக்குமதிகள்




* ஐக்கிய இராச்சியம் நீங்கலாக

*மூலம் : இலங்கைச் சுங்கம்*

5

**நிலையில் காணப்பட்டது.** செலாவணி வீதத்தின் தேய்வு ஏற்றுமதித் துறைக்கு பெருமளவிற்கு நன்மையளித்த அதேவேளை தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இன் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்தமை மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு வழங்கப்பட்டமை என்பன ஏற்றுமதித் துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையுடன் விளங்குவதற்கு உதவியன. வர்த்தகத் துறைக்கு வசதியீனமானதொன்றாக விளங்கிய போதும் ஏனையவற்றிற்கிடையில் ஏற்றுமதிப் பெறுகைகளை தாய்நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் அவற்றை மாற்றும் தேவைப்பாடுகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், மற்றும் அளவுத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டமை போன்ற குறிப்பிட்ட கொள்கை வழிமுறைகள் உத்தரவளிக்கப்பட்டன. இவை, சுதந்திரத்திற்குப் பின்னர் காணப்பட்ட மோசமான சென்மதி நிலுவை நெருக்கடிக்கிடையில் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களினதும் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாக அமைந்தன. தற்போதுள்ள வர்த்தக உடன்படிக்கைகளின் நியதிகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டவேளை விரைவான முறையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான பேச்சுவார்தைகள் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கம் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் அனைத்து வர்த்தகப் பேச்சுவார்த்தைகளையும் கையாள்வதற்காக பன்னாட்டு வர்த்தக அலுவலகமொன்றினையும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுடன் இணைப்புக்களை பேணுவதற்காக வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டிற்கான முகவரொன்றினையும் நிறுவுதல் மற்றும் வர்த்தகச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தினை மீளறிமுகப்படுத்தல் போன்ற பல வர்த்தக ஆதரவுக் கொள்கைகளை அறிவித்தது. ஏற்றுமதிகளுக்கும் குறிப்பிட்ட இறக்குமதிகளின் பதிலீடுகளுக்கும் ஆதரவளிப்பதற்காக, எதிர்காலத்தில் பொருளாதாரம் மீட்சியடைந்து வருவதனால் நிலையானதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான கொள்கைகளும் அவற்றைச் சரியான நேரத்தில் நடைமுறைக்கிடுவதும் வலுவான தேவைப்பாடாகவுள்ளது. பேரண்டப்பொருளாதார தோற்றப்பாட்டில் காணப்படும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுடன் ருஷியா-உக்ரேனிய போர், உயர்ந்த பணவீக்கம், இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் உலகளாவிய சந்தைகளில் காணப்படும் மந்தம் தொடர்பான அச்சம் என்பன 2022இன் பின்னரைப்பகுதியின் கூடியளவு சவால்களைத் தோற்றுவித்தபோதும் 2022இன் முதலரைப்பகுதியில் உலகளாவிய பொருளாதாரம் கொவிட்-19இன் எதிர்மறையான பரவல்களிலிருந்து மீண்டும் எழுச்சியுற்றது. இதன் விளைவாக, உலக வர்த்தக அமைப்பானது உலக வணிகப்பொருள் வர்த்தக அளவின் வளர்ச்சி (2021இன் 9.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியிலிருந்து 2022இல் 3.5 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் எனவும் அது 2023இல் 1.0 சதவீதத்திற்கு மிதமடையக்கூடும் எனவும் மதிப்பிடப்பட்டது. இப்பின்னணியில், நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்ட காலத்தில் எதிர்கால உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை வெற்றி கொள்வதற்கு நிலையான முறையில் கூடியளவிற்கு நிலைத்திருக்கக்கூடிய கொள்கைத் தலையீடுகள் அதிகாரிகளினால் வழங்கப்படுகின்ற அதேவேளை அண்மிய காலத்தில் பிரச்சனைகளைக் கையாள்வதற்கு தீவிரமான கொள்கைகள் முக்கியமானதாகும். உயர்ந்த உற்பத்திச் செலவுகள் போன்ற வழங்கல்பக்க தடைகளை குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஆதரவுடன் சாத்தியமான உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகள் மற்றும் உற்பத்தி வலையமைப்புகளை பயன்படுத்திக் கொள்ளுவதற்கு புத்தாக்கத்தால் வழிவகுக்கப்பட்ட ஏற்றுமதி நோக்குநிலையை வலுப்படுத்தல், பெறுமதிகூட்டல்களை மேம்படுத்தல், நிறுவன ரீதியான கட்டமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்தல், படிமுறையிலமைந்த நிருவாகத் தடைகளை நீக்குதல், மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழல்களை உருவாக்குதல் போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

**இறக்குமதிச் செலவினங்களை முகாமை செய்வதற்கு குறிப்பிடத்தக்க வர்த்தகக் கொள்கை வழிமுறைகள் 2022இல் முன்னெடுக்கப்பட்டன.** 2022இன் முதற்காலாண்டுப்பகுதியின் உயர்ந்த இறக்குமதிச் செலவினம் மற்றும் செலாவணி வீதத்தின் மீதான முன்னொருபோதுமில்லாத அழுத்தம் என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு அரசாங்கமும் மத்திய வங்கியும் 2022இன் முதலரைப்பகுதியில் இறக்குமதிக்கான கேள்வியைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்தன. இதற்கமைவாக, உரிமம் வழங்கும் தேவைப்பாடுகள், மற்றும் 2022 மாச்சு காலப்பகுதியிலிருந்து இறக்குமதி வரிகளின் அதிகரிப்பு போன்ற வழிமுறைகளை அரசாங்கம் விதித்த வேளையில், மத்திய வங்கி 2022 மாச்சிலிருந்து செலாவணி வீதத்தில் கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்ததுடன் 2022 மேயிலிருந்து குறிப்பிட்ட இறக்குமதிகளின் மீது 100 சதவீத காசு வைப்புத் தேவைப்பாடுகளையும் விதித்தது. முறைசாரா மார்க்கங்களினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இறக்குமதிக் கொடுப்பனவுகளையும் சமாந்தரச் சந்தைகளிலிருந்து செலாவணி வீதத்தின் மீது தோன்றுகின்ற அழுத்தங்களையும் கட்டுப்படுத்தும் பொருட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஆரம்பக் கணக்குகள், சரக்குக் கணக்குகள், ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவு நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் என்பனவற்றின் பயன்பாட்டின் மீது கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, ஏற்பாவணங்களுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் கொடுப்பனவு நியதிகளுக்கெதிரான ஆவணங்கள், ஏற்றுமதிகளுக்காகப் பயன்படும் அத்தகைய ஆவணங்கள் நீங்கலாக, வர்த்தக வங்கிகளுடனான முன்னேற்பாடுகளின் கீழ் மாத்திரம் செய்யப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டவேளையில் 2022 மே 20இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஆரம்பக் கணக்கு/

சிறப்புக்குறிப்பு 7
ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதையும் மாற்றுவதையும் கண்காணித்தல்

**அறிமுகம்**

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவல் மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் பாதகமான அபிவிருத்திகள் என்பவற்றுக்கு மத்தியில் அண்மைய ஆண்டுகளில் எதிர்பாராத சவால்களின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சியுடன் இலங்கையின் வெளிநாட்டுத் துறை தீவிரமடைந்த பாதிக்கப்படும் தன்மைகளை எதிர்கொண்டது. பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பியதை முன்னிலைப்படுத்தி அதிகரித்த இறக்குமதிகள், சுற்றுலாத் துறை வருவாய்களில் மிதமடைதல் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் மெதுவடைதல் என்பன காரணமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை விரிவடைந்தது. நாட்டின் நாட்டிற்கான கொடுகடன் தரப்படுத்தல் தரங்குறைக்கப்பட்டமையானது உயர்வான படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளுக்கு மத்தியில், உலகளாவிய மூலதனச் சந்தைகளுக்கான பெறுவழியினைத் தடைப்படுத்தி நிலைமையை மேலும் மோசமாக்கியது. குறைவடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் காரணமாக வெளிநாட்டுத் துறையில் அதிகரிக்கின்ற சமமின்மைகளைப் பரிசீலனையில் கொண்டு, உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் பன்னாட்டு ஒதுக்குகளை நிறைவாக்குவதற்கும் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டன. அத்தகைய தேவைப்பாடுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் அமுல்படுத்தும் நோக்குடன் 2021ஆம் ஆண்டில் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை 180 நாட்களுக்குள் நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் அத்தகைய பெறுவனவுகளை இலங்கை ரூபாய்களுக்கு மாற்றுதல் என்பவற்றை கட்டாயப்படுத்தி விதிகளை (அட்டவணை சி.கு. 7.1) தாபித்தமையினை இது உள்ளடக்குகின்றது.

**ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் தொடர்பிலான கொள்கைகளின் பரிணாமம்**

எந்தவொரு நாட்டிற்கும் வெளிமூல அதிர்வுகளுக்கெதிரான தாங்குதளங்களை கட்டியெழுப்புவதற்கு உதவுகின்ற வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் மிகமுக்கிய மூலமொன்றினை ஏற்றுமதிகள் தோற்றுவிக்கின்றன. ஏற்றுமதிகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, இலங்கையில் தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் உறுதியான ஏற்றுமதித் துறையினைக் கட்டியெழுப்புவதற்கு ஆக்கபூர்வமான கொள்கைகளை செயற்படுத்தின. எனினும், சென்மதி நிலுவைகள் மீது முழுபலத்தையும் பிரயோகிக்காத விதத்தில் ஏற்றுமதித் துறையின் உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்பப்படுவதை ஒரு நாடு உறுதிசெய்யவேண்டிய தேவை காணப்படுகின்றது. ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு அனுப்புவதற்கான தேவையானது நீக்கப்பட்ட 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 1973 காலப்பகுதியின் தொடக்கத்தில் விதிக்கப்பட்டதுடன் 1993 வரை தொடர்ந்தது. நாட்டிற்கு அனுப்புவதற்கும் ஒப்புவிப்பதற்குமான இத்தேவைப்பாடு நடைமுறைக்கணக்கு கொடுக்கல்வாங்கல்களை மேலும் தாராளமயப்படுத்தி நாட்டின் உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்வதன் பாகமாக 1994ஆம் ஆண்டின் பன்னாட்டு நாணய நிதிய உடன்படிக்கையின் VIII ஆம் உறுப்புரையின் ஏற்றுக்கொள்ளலைத் தொடர்ந்து தாராளமயப்படுத்தப்பட்டது. அதற்கமைய, ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் அதனை இலங்கையில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அல்லது ரூபாவில் வைத்திருப்பதற்கு அல்லது வெளிநாட்டு வங்கியொன்றில் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் அவற்றை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். எவ்வாறாயினும், செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 2016 ஏப்பிறலில் நாட்டிற்கு அனுப்பும் தேவைப்பாடு மீள அறிமுகப்படுத்தப்பட்டு, தொடக்கத்தில் ஏற்றுமதித் திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் இலங்கைக்கு பெறுகைகளை அனுப்புவதற்கு ஒவ்வொரு பொருட்கள் ஏற்றுமதியாளரையும் தேவைப்படுத்தியது. அதனைத்தொடர்ந்து, இது 120 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் இயற்றப்பட்டதுடன் இவ் ஒழுங்குவிதிகள் மீள அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 2019 ஒத்தோபரில் 180 நாட்களுக்கு மேலும் நீடிக்கப்பட்டது. இலங்கையின் பொருளாதார அயல் நாடுகளாக கருத்திற்கொள்ளக்கூடிய சில பிராந்தியப் பொருளாதாரங்களும் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவை உச்சப்படுத்துவதை உறுதிசெய்வதற்கு அத்தகைய நாடுகள் இதனையொத்த கொள்கைகளை நடைமுறைப்படுத்தின என்பதைக் குறிப்பிடுவது உசிதமாகும் (அட்டவணை சி.கு. 7.2).

**ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதற்கு ஏற்றுமதிப் பெறுகைகள் எவ்வாறு துணையளிக்கின்றன**

ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்பப்பட்டவுடன் பெறுகைகளின் பாகம் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் போன்ற வெளிநாட்டு நாணயத்தில் உள்ள கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு பயன்படுத்தப்படும். வெளிநாட்டுச் செலாவணியின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு[1] மீதி விற்பனை செய்யப்படுமாயின், அத்தகைய பெறுகைகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு சேர்க்கப்பட்டு, திரவத்தன்மையினை அதிகரிக்கின்றது. இதே போன்று தொழிலாளர் பணவனுப்பல்கள், சுற்றுலாத் துறை வருவாய்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் போன்ற அதிகாரமற்ற வணிகர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற வேறு வெளிநாட்டுச் செலாவணி மூலங்களிலிருந்தான உட்பாய்ச்சல்கள் உள்நாட்டு சந்தைத் திரவத்தன்மை அதிகரிப்பிற்கு பங்களிக்கும். வங்கித்தொழில் முறைமையானது அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளிற்கு அதாவது நடைமுறை மற்றும் மூலதனத் தன்மை இரண்டு வகையிலும் பல்வேறு தேவைகளுக்கும் இடமளிக்கவேண்டும். அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயம் இதற்காகப் பயன்படுத்தப்படும். இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவு செய்வதன்

1 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஒரு வங்கி

5

அட்டவணை சி.கு. 7.1

நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக வழங்கப்பட்ட விதிகள்

| விதிகளின் பெயர் | முக்கிய அம்சங்கள் |
|---|---|
| 201.02.18 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் | • கப்பலேற்றத் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதி செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் தொடர்பிலும் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் பெற்றுக்கொள்ளல்.<br>• அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கையில் கிடைத்ததன் மீது உடனடியாக மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தை இலங்கை ரூபாய்களாக மாற்றுதல். |
| 2021.03.09 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (01ஆம் இலக்க விதிகளுக்கான திருத்தம்) | • கிடைப்பனவின் 14 நாட்களுக்குள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்தை இலங்கை ரூபாய்களாக மாற்றுதல். |
| 2021.04.09 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (02ஆம் இலக்க விதிகளுக்கான திருத்தம்) | • கிடைப்பனவின் 30 நாட்களுக்குள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 10 சதவீதத்தை இலங்கை ரூபாய்களாக மாற்றுதல். |
| 2021.05.28 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (03ஆம் இலக்க விதிகளுக்கான திருத்தம்) | • கிடைப்பனவின் 30 நாட்களுக்குள் இலங்கையில் கிடைக்கப்பெற்ற மொத்த ஏற்றுமதிப் பெறுகைகளின் 25 சதவீதத்திற்கு குறையாது இலங்கை ரூபாய்களாக மாற்றுதல். |
| 2021.10.28 அன்று வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (01, 02, 03 மற்றும் 04ஆம் இலக்க முன்னைய விதிகளின் ஏற்பாடுகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன) | • இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதிசெய்யப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் கட்டாயமாகப் பெறுதல்.<br>• அத்தகைய பெறுகைளை அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதன் மீது இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை இலங்கை ரூபாய்களாக கட்டாயமாக மாற்றுதல். |
| 2022.03.11 அன்று வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (2021ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க விதிகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன) | • இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையில் கட்டாயமாகப் பெறுதல்.<br>• அத்தகைய பெறுகைளை அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதன் மீது இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை இலங்கை ரூபாய்களாக கட்டாயமாக மாற்றுதல்.<br>• ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்தி உள்நாட்டு வழங்கல்களுக்கான கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டதுடன் உபாய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான விலக்களிப்புக்கள் அனுமதிக்கப்பட்டது. |
| 2022.08.12 அன்று வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கான விதிகள் (2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விதிகளின் திருத்தம்) | • சேவை ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் இலங்கைக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுவதற்கான தேவைப்பாடு அகற்றப்பட்டது. |

5

மூலம் அதன் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பலாம். ஏற்றுமதிப் பெறுகைகளின் முக்கிய அநுகூலம் சென்மதி நிலுவை மீது அழுத்தத்தை ஏற்படுத்தாத படுகடனற்ற உட்பாய்ச்சல்களை அவை உருவாக்குவதாகும்.

**நாணயவிதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை அனுப்புவதன் மீது தற்போது காணப்படுகின்ற விதிகள்**

இலங்கை ரூபாவின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு வழிவகுக்கக்கூடிய பன்னாட்டு ஒதுக்குகளில் எதிர்பார்க்கப்பட்ட கடுமையான வீழ்ச்சியினைக் கருத்திற்கொண்டு, நிலைமையினைப் பாதுகாப்பதற்கு இலங்கை மத்திய வங்கியானது நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் தேவைப்பாடுகளுக்கான விதியினை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக அவசியமான கொள்கைகளை பின்பற்றுவதன் வாயிலாக உடனடி வழிமுறைகளை எடுத்தது (அட்டவணை சி.கு. 7.1).

தற்போது காணப்படுகின்ற விதிகளின் (அட்டவணை சி.கு. 7.1) பிரகாரம், அனைத்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்கள் அல்லது இலங்கைக்கு வெளியில் வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கையினுள் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும். மேலும், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் அத்தகைய பெறுகைகளை வியாபாரத்தின் தமது வெளிநாட்டு நாணயத் தேவைகளுக்காக இடமளித்து உள்நாட்டு செலாவணிச் சந்தையின் திரவத்தன்மையில் உடனடித் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் பயன்படுத்தியதன் மீது இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை கட்டாயமாக இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு[2] வேண்டப்பட்டுள்ளனர். அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளாவன: குறித்த ஏற்றுமதி தொடர்பில் நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள், பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணய மீள்பெறுகை அல்லது நிதியங்களின் மாற்றல், அனுமதிக்கப்பட்ட கடன்பெறுதல்களின் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மற்றும் மீளச்செலுத்தல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளுக்கான கொடுப்பனவுகள், உள்நாட்டு வழங்குநர்களுக்கான அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள், வதியாத முதலீட்டாளர்களுக்கான பங்கிலாபக் கொடுப்பனவுகள், இலங்கையில் தொழில்புரிகின்ற வெளிநாட்டவர்களுக்கான சம்பளங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட ஒரு மாத கடமைப் பொறுப்புக்கள்.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு இவ்விதிகள் மூலம் விதிக்கப்பட்ட மாற்றுதல் தேவைப்பாடுகள் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்யப்பட்டு திருத்தப்படுகின்றன.

2 அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளை பயன்படுத்துவதன் மீது, ஏற்றுமதியாளர்கள் தமது நாளாந்த வியாபார நடவடிக்கைகளின் உள்நாட்டு நாணயத் தேவைப்பாடுகளுக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றி அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் ஏதேனும் எஞ்சியவை தொடர்ந்துவரும் மாதத்தின் ஏழாம் (7ஆம்) நாளன்று அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாக மாற்றப்படுதல் வேண்டும்.

அட்டவணை சி.கு. 7.2

தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் தொடர்பிலான முக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகள்

| நாடு | நாட்டிற்கு அனுப்பும் தேவைப்பாடு | பொருட்கள்/ சேவைகள் ஏற்றுமதிகளுக்கு ஏற்புடைமை | மாற்றுதல் தேவைப்பாடு |
|---|---|---|---|
| இந்தியா | 15 மாதங்களுக்குள் | பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும் | வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் தமது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் 100 சதவீதத்தை வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். கணக்கில் ஒன்றுசேர்ந்தவைகள் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது முன்னோக்கிய கடமைப்பொறுப்புக்களுக்காக மீதிகளை பயன்படுத்துவதற்கு சீர்செய்யப்பட்டதன் பின்னர் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் இறுதி நாளன்று அல்லது அதற்கு முன்னர் ரூபாய்களாக மாற்றப்படவேண்டும். |
| வங்காளதேசம் | 7 மாதங்களுக்குள் | பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும் | உயர்வான இறக்குமதி உள்ளடக்கத்துடன் கூடிய தயாரிக்கப்பட்ட ஆடைகளின் மற்றும் ஏனைய பொருட்களின் ஏற்றுமதிகளில் 85 சதவீதமும் ஏனைய வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளின் 40 சதவீதமும் |
| பாகிஸ்தான் | 6 மாதங்களுக்குள் | பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும் | பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகளின் 85 சதவீதம் - 98 சதவீதம் மற்றும் சேவைகள் ஏற்றுமதிப் பெறுகைகளின் 65 சதவீம் |
| மலேசியா | ஏற்றுமதிப் பெறுகைகள் றிங்கிட் 200,000 இனை விஞ்சாவிடின் 24 மாதங்களுக்குள் அத்துடன் வேறு விடயங்களில் 6 மாதங்களுக்குள் | பொருட்கள் மாத்திரம் | 2021 ஏப்பிறல் தொடக்கம் ஏற்றுமதியாளர்கள் தமது வெளிநாட்டு நாணய காசுப்பாய்ச்சல் தேவைகளுக்கமைவாக ஏற்றுமதிப் பெறுகைகளின் மாற்றலை முகாமை செய்யலாம். 2018 இற்கு முன்னர் ஏற்றுமதிப் பெறுகைகளின் 75 சதவீதம் மாற்றப்படவேண்டியிருந்தது. |
| தாய்லாந்து | 1 ஆண்டிற்குள் | பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும் | ஐ.அ.டொலர் 1 மில்லியனுக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைக் கொண்ட ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு கட்டாயமாக அனுப்பப்படவேண்டும் என்பதுடன் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றதன் பின்னர் உடனடியாக தாய் பாத் ஆக மாற்றப்பட வேண்டும். |
| துருக்கி | 180 நாட்களுக்குள் | பொருட்கள் மாத்திரம் | ஏற்றுமதிப் பெறுகைகளின் குறைந்தது 80 சதவீதம் வங்கியொன்றுக்கு விற்பனை செய்யப்படவேண்டும். |

*மூலங்கள்:* பன்னாட்டு நாணய நிதியத்தின் செலாவணி ஏற்பாடுகள் மற்றும் செலாவணிக் கட்டுப்பாடுகள் மீதான ஆண்டறிக்கை 2020
உரிய மத்திய வங்கிகளின் இணையத்தளங்கள்

இவ்விதிகளின் தேவைப்பாடுகளின் பிரகாரம், மாதாந்த ஏற்றுமதிப் பெறுகை கிடைப்பனவுகளை கண்டிப்பாக கண்காணிப்பதற்கும், நாட்டிற்கான அனுப்பல்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மாற்றப்படுவதை உறுதிசெய்வதற்கும் குறித்த பொருட்கள்/ பணிகள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய அதிகாரமளிக்கபட்ட கொடுப்பனவுகளா எனச் சரிபார்ப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வேண்டப்பட்டுள்ளனர். தற்போது, ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல்கள் தொடர்பிலான காலமுறையான தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு கைமுறையாக அறிக்கையிடப்படுவதுடன் விதிகளின் ஏற்பாடுகளுடன் முழுமையான மற்றும் கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் வழங்கப்படுகின்ற பதிவேடுகளை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் பரிசோதிப்பதுடன் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளுகின்றது. ஏற்றுமதியாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தொடர்பில் விதிகளுடன் ஏதேனும் இணங்காமையினை கண்காணித்து அதற்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு வெளிநாட்டு செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்கு இவ்விதிகள் அதிகாரமளிக்கின்றன.

அதற்கமைய, அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும், நாட்டிற்கு அனுப்பும் இறக்குமதிப் பெறுகைகள் மற்றும் மாற்றுதல்கள் மீதான பின்வரும் மாதாந்த தகவல்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அடுத்துவருகின்ற மாதத்தின் 15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டாயமாகச் சமர்ப்பிக்கின்றனர்.

- அனைத்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் அத்துடன்/ அல்லது இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் கிடைக்கப்பெற்ற நாட்டிற்கு அனுப்பப்படும் ஏற்றுமதிப் பெறுகைகள்.
- கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியன் மீது வெளிநாட்டு நாணயத்தின் இலங்கை ரூபாய்க்கான மாற்றுதல்.
- 180 நாட்களுக்குள் நாட்டிற்கு அனுப்பப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்தான அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள்.
- ஏற்றுமதிப்பெறுகைகளிலிருந்து உள்நாட்டு வழங்குநர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் அவற்றின் மாற்றுதல்களும்.
- ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவது மீதான விதிகளின் தேவைப்படுத்தலுக்கமைவாக கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் நாட்டிற்கு அனுப்பப்படாத ஏற்றுமதிப் பெறுகைகள்.
- கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்குதல் திகதியிலிருந்து 180 நாட்களை விஞ்சி கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல்கள்.

### விதிகளுடனான இணங்குவித்தலை கண்காணித்தல்

மாதாந்த அடிப்படையில் அதிகாரமளிக்கபட்ட வணிகர்களால் அறிக்கையிடப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, கப்பலேற்றல் அல்லது சேவைகளை வழங்கிய திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்பாத ஏற்றுமதியாளர்களை அதற்கான காரணங்களை வழங்குமாறு இலங்கை மத்திய வங்கி கோருகின்றது. பதில்களின் அடிப்படையில், இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை அனுப்பும் தேவைப்படுத்தல் மீதான விதிகளுடன் இணங்கியொழுகாத ஏற்றுமதியாளர்களுக்கு சட்ட நடவடிக்கையைத் தொடுக்கும்

5

சாத்தியப்பாடு இலங்கை மத்திய வங்கியினால் பரிசீலனையில் கொள்ளப்படுகின்றது. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துவது கண்டிப்பாக கண்காணிக்கப்படுவதுடன் விதிகள் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிப்பதை உறுதிசெய்யும் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் பற்றிய மாதாந்த கண்காணித்தலுக்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களிடமிருந்து நேரடியாகத் தகவல்களைக் கோருவதன் மூலம் அவர்களின் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் மீது அவர்கள் மீது இலங்கை மத்திய வங்கி விசாரணைகளை நடாத்துகின்றது. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களால் அறிக்கையிடப்பட்ட தகவல்களை சரிபார்ப்பதற்கு இது இலங்கை மத்திய வங்கியை இயலச்செய்துள்ளதுடன் தரவுகளை அறிக்கையிடுதலை சீரமைப்பதற்கும் வசதி ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துவதும் மாற்றுவதும் விதிகளுக்கமைவாகக் காணப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதற்கு அதிகாரமளிக்கபட்ட வணிகர்களினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்கள், உள்நாட்டு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள், உள்நாட்டு வழங்குநர்கள் மூலமான மாற்றுதல்கள் போன்றவை மீது விசேட விசாரணைகளும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், தற்போது காணப்படுகின்ற விதிகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் அவற்றுடனான கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்வதற்கும் ஏற்றுமதியாளர்களுடன் ஒருவருக்கொருவர் சந்திப்புக்களையும், துறைவாரியான சந்திப்புக்களையும், இணங்குவித்தல் அலுவலர்களுடனான சந்திப்புக்களையும், ஏற்றுமதித் துறைகளின் வேறு ஆர்வலர்களுடனான கலந்துரையாடல்களையும் இலங்கை மத்திய வங்கி நடாத்தியது.

விதிகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தியமை அதனைத்தொடர்ந்த கண்டிப்பான கண்காணித்தலுடன் இணைந்து, 2021 ஒத்தோபர் தொடக்கம் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது (வரைபடம் சி.கு.7.1). 2022 காலப்பகுதியில் வணிகப் பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு அனுப்புதல் ஐ.அ.டொலர் 17,755.8 மில்லியன் தொகையுடையதாகவிருந்த அதேவேளை பொருட்கள் ஏற்றுமதியினை நாட்டிற்கு அனுப்புதல் ஐ.அ.டொலர் 14,595.7 மில்லியனாகவும் பணிகள் ஏற்றுமதியினை நாட்டிற்கு அனுப்புதல் ஐ.அ.டொலர் 3,160.1 மில்லியன் கொண்ட தொகையாகவுமிருந்தது. 2022ஆம் ஆண்டிற்கான வணிகப் பொருள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிப் பெறுமதி ஐ.அ.டொலர் 16,168.8 மில்லியனாக இருந்தது.


அதேவேளை, நாட்டிற்கு அனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளின் சதவீதமாக வணிகப்பொருள் மற்றும் சேவைகள் ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட மாதாந்த மொத்த மாற்றுதல்கள் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் 20.6 சதவீதம் - 28.5 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சிலிருந்தன (வரைபடம் சி.கு.7.2 மற்றும் வரைபடம் சி.கு.7.3). அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்றுமதிப் பெறுகைகளைப் பயன்படுத்துதல் மீதான கவனமிக்க மேற்பார்வை ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் நாட்டிற்கு அனுப்பப்பட்டவற்றின் மாற்றுதலில் படிப்படியாக அதிகரிப்பொன்றினை இயலச்செய்துள்ளது. வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த மாற்றப்பட்ட பெறுமதி 2022ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4,220.2 மில்லியனாகவிருந்ததுடன் ஐ.அ.டொலர் 3,614.6 மில்லியன் தொகையுடைய வணிகப்பொருட்களின் மாற்றலையும் ஐ.அ.டொலர் 605.6 மில்லியன் தொகையுடைய சேவை ஏற்றுமதிகளின் மாற்றலையும் உள்ளடக்கியிருந்தது.

வரைபடம் சி.கு. 7.1
ஏற்றுமதிகள், வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளின் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் என்பவற்றின் போக்கு





*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கைச் சுங்கம்

வரைபடம் சி.கு. 7.2
வணிகப் பொருள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதலின் போக்குகள்: 2022 சனவரி – திசெம்பர்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


வரைபடம் சி.கு. 7.3
சேவைகள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதலின் போக்குகள்: 2022 சனவரி – திசெம்பர்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 7.4
ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை பற்றிய பொதுநோக்கு

சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமை (ASYCUDA)




இணையச் சேவை ஊடாக பொருட்கள் ஏற்றுமதி மீதான அனைத்துத் தகவல்களையும் பெறுதல்

விதிக்கமைவாக கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகள் ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை ஊடாக பொருத்தம் செய்யும் தனித்துவமான அடையாள ஆவணம் சுங்கப் பிரகடனமாகும்.

அதிகாரமளிக்கபட்ட வணிகர் சுங்கப் பிரகடனத்துடன் பணவனுப்பல் தகவல்களை பொருத்தி தரவேற்றம் செய்வார். விதிக்கமைவாக நாட்டிற்கு அனுப்பாத ஏற்றுமதியாளர்கள் பற்றிய தகவல்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் கொண்டிருப்பார். இவர்களுக்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் தெரியப்படுத்துவார்.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை**

ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதை வினைத்திறனுடன் கண்காணிக்கும் தேவையினைக் கருத்திற்கொண்டு, தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலமைந்த தன்னியக்கமான கண்காணித்தல் முறையொன்றான ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை 2022 யூனில் தொடங்கப்பட்டது. விதிகள் அறிமுகப்படுத்தப்பட்ட குறிக்கோளை அடைந்துகொள்ளும் பொருட்டு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏற்றுமதிப் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்பப்படுவதையும் ஏற்றுமதிப் பெறுகைகளின் உள்நாட்டு நாணயத்திற்கான மாற்றலையும் கண்காணிப்பதை இம்முறைமை வசதிப்படுத்துகின்றது. கைமுறையாக தரவு செயன்முறைப்படுத்தலைக் குறைத்தல் மற்றும் பல்வேறு கட்டங்களிலும் தரவுப்பகுதிவு இரு தடவை நிகழுதல் போன்றவற்றைக் குறைப்பதன் வாயிலாக அறிக்கையிடுதல் மற்றும் கண்காணித்தலின் வினைத்திறனையும் இம்முறைமை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஆகியன இம்முறைமையின் மூன்று முக்கிய பங்கேற்பாளர்களாகும். நாட்டிற்கு வெளியில் கப்பலேற்றப்படுகின்ற அனைத்து ஏற்றுமதிகள் பற்றிய விபரங்களை இலங்கைச் சுங்கம் ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமைக்கு பகிர்கின்ற அதேவேளை அத்தகைய ஏற்றுமதியாளர்களுடன் இணைந்த பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புதல் மற்றும் மாற்றுதல் பற்றிய விபரங்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமைக்கு அறிக்கையிடுகின்றனர் (வரைபடம் சி.கு.7.4). அதற்கமைய, ஏற்றுமதிகள் பற்றிய மிகத் துல்லியமான விபரங்கள் எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பெறுகைகள் நாட்டிற்கு அனுப்படாதவிடத்து அதனைக் கண்டுபிடிப்பதை இம்முறைமை வசதிப்படுத்தி இணங்காத ஏற்றுமதியாளர்களுக்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கும் வசதியளிக்கும்.

2022 யூனில் அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணித்தல் முறைமை தொடர்ந்தும் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் சுங்கப் பிரகடனங்கள் CUSDECs[3] அடிப்படையிலமைந்த ஏற்றுமதி பணவனுப்பல் தரவுகளின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மூலம் தரவேற்றும் செயன்முறையிலுள்ளவை போன்று இனங்காணப்பட்ட சில தொழில்நுட்பக் குறைபாடுகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. தகவல் வழங்குவதை எளிமைப்படுத்துவதற்காக தற்போது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் ஏற்றுமதியாளர்களை இணைக்கின்ற தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, சுங்கப் பிரகடனங்களுக்கெதிராக ஏற்றுமதிக் கிடைப்பனவுகள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் செம்மையினைப் பொருத்துதல் என்பவற்றிலிருந்தான தடைகள் விசேடமாக திறந்த கணக்கு கொடுக்கல்வாங்கல் மீதானவை குறைக்கப்படும். ஆகையினால், ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்பும் கண்காணித்தல் பொறிமுறையின் வினைத்திறனை இம்முறைமை மேம்படுத்தும் என்பதுடன் எதிர்காலத்தில் இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுங்கம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் என்பவற்றுடன் தொடர்புடைய தகவல்களை இணைக்கின்ற தேசிய முறைமையொன்றினூடாக நாட்டினுள் ஏற்றுமதிப் பெறுகைகள் அனுப்படுவதைச் சீரமைக்கும்.

இம்முறைமையூடாக ஏற்றுமதி கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்து பின்தொடரும் வெற்றியானது முறைமையின் அனைத்து ஆர்வலர்களினதும் செயல்திறன்வாய்ந்த ஒத்துழைப்பின் மூலம் மாத்திரமே அடையப்பெறக்கூடியதாகவிருக்கும். ஆகையினால், இத்தேசிய முயற்சியின் வெற்றியை நோக்கிப் பணியாற்றுவது இம்முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களினதும் பொறுப்பாகும்.

3 சுங்கப் பிரகடனங்கள்

உசாத்துணை

1. Central Bank of Sri Lanka Annual Reports

2. Rules on Repatriation of Export proceeds into Sri Lanka

சரக்கு கணக்குக் கொடுப்பனவு நியதிகளின் மீதான இறக்குமதிகள் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டது. இது, வங்கித்தொழில் முறைமைக்குள் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் கிடைப்பனவினை மிக அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பயன்படுத்த உதவியது. எனினும், அத்தகைய வரையறுப்புக்களின் காரணமாக உள்நாட்டுச் சந்தைகளில் காணப்படும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பனவற்றின் பற்றாக்குறையினைக் கருத்திற்கொண்டு, 2022 யூனிலிருந்து குறிப்பிட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிக்காக பல்வேறு தளர்த்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கிடைக்கத்தக்க வெளிநாட்டுச் செலாவணி மீது மேலும் அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம், 2022 ஓகத்தில் குறிப்பிட்ட நுகர்வு மற்றும் முதலீட்டுப்பொருட்களை முக்கிய இலக்காகக் கொண்டு தற்காலிக இடைநிறுத்தல்கள் மூலம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேலும் விதித்தபோதும் 2022 செத்தெம்பரில் பல்வேறு தளர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் அத்தகைய கட்டுப்பாடுகளின் காத்திரமான தன்மை குறைக்கப்பட்டது. எனினும், இவ்வழிமுறைகள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டுத் துறையில் அழுத்தங்களை முகாமை செய்வதற்கு மிக முக்கியமானவையாக இருந்தன.

**2022 காலப்பகுதியில் வெளிநாட்டுத்துறைக்கு நிறுவன ரீதியான உதவியை மேம்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஆர்வலர்களிடையே காணப்பட்ட மோசமான இணைப்பு, தேசிய ஏற்றுமதி உபாய நடவடிக்கைத் திட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் போதுமானதாக இல்லாமை போன்ற விரைவான நடைமுறைப்படுத்தல்களுக்கு பாதிப்பாக விளங்கிய தடைகளை நிவர்த்தி செய்துகொண்டு தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இனைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. இதற்கமைவாக, விரும்பத்தக்க இலக்குகளை 2027 அளவில் எய்துவதற்கு, தற்போதைய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் தேவையான சீராக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கேற்ப தேசிய ஏற்றுமதி உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் செயன்முறை மீளாய்வு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட மற்றும் நேரடியான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் ஏற்றுமதியாளர்களுக்கு வர்த்தக தகவல்களையும் சந்தைப் புலனாய்வுகளையும் தொடர்ந்து வழங்கியது. வர்த்தக சம்மேளனமும் ஏற்றுமதியாளர்களை அங்கீகரித்தல், மற்றும் ஏற்றுமதி விருதுக் கொண்டாட்டங்களை நடத்துதல் என்பன மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்புக்களுக்குப் பங்களித்தவேளையில் கொள்கைகளை வகுப்பதிலும் மனக்குறைகளைக் கையாள்வதிலும் அரச மற்றும் தனியார் துறை ஆர்வலர்களிடையே இணைப்பினை ஏற்படுத்துவதற்கு உதவுகின்றது. இலங்கை கட்டளைகள் நிறுவனம் தேசிய நியமங்களை வடிவமைக்கும் மற்றும் அவற்றைத் தரமுயர்த்தும் செயற்பாட்டில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. இது தொடர்பில் இலங்கை கட்டளைகள் நிறுவனம், 2022இல் 204 நியமங்களை வெளியிட்டதுடன் 128 நியமங்களைத் திருத்தியது. பல்வேறு உற்பத்திகளுக்காகவும் புதிய பரீட்சிப்பு வசதிகளும் பரீட்சிப்பு முறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டவேளை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தர உத்தரவாதப்படுத்தலை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை கட்டளைகள் நிறுவனம் பல வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களையும் ஆய்வுகூடங்களையும் பதிவுசெய்தது. சவால்மிக்க சந்தைச் சூழ்நிலைக்கிடையில் தேய்வடைந்த செலாவணி வீதத்தால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டு இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏறத்தாழ ரூ.70 மில்லியன் பெறுமதியான காப்புறுதி வியாபாரங்களை அறிக்கையிட்டது. தனியொரு கூரையின் கீழான தேசிய தளம் இன்னும் தொழிற்படாமையினால் வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக இலங்கைச் சுங்கம் ஏறத்தாழ 15 அரச ஒழுங்குமுறைப்படுத்தல் முகவர்களை சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமையுடன் ஒருங்கிணைப்பதற்கான அதன் வழிமுறைகளைத் தொடர்ந்தது. அதேவேளை, இலங்கைச் சுங்கம் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அதன் நடவடிக்கைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தி, 2023 சனவரி அளவில் 70 சதவீதத்திற்கும் கூடுதலான ஒட்டுமொத்த முன்னேற்றத்தினைக் காட்டியது. இலங்கைச் சுங்கம் தொடர்பான விடயங்களை விசாரணை செய்து அறிக்கை அளிப்பதற்காக 2021 பெப்புருவரியில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையினை சனாதிபதியிடம் 2022 யூனில் கையளித்தது. அறிக்கையானது, பொறுப்புக்களை ஆற்றும் போது சுங்கத்தின் நிருவாக மற்றும் தொழிற்பாட்டுச் செய்முறைகளை எவ்வாறு காத்திரமான விதத்திலும் வினைத்திறனுடனும் மேற்கொள்வது என்பது தொடர்பிலான விதந்துரைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

**முன்னுரிமைகளுக்கான பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டங்களின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் 2022இல் மாற்றமின்றி காணப்பட்டபோதும் ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்கள் 2021இனை விட மேம்பட்டுக் காணப்பட்டன.** இலங்கை, பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் கீழ் நன்மைகளை 2022இல் தொடர்ந்தும் பெற்றவேளையில் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பனவற்றினால் வழங்கப்பட்ட வசதிகள் இலங்கையின் மொத்த முன்னுரிமை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 72 சதவீதத்திற்கு பங்களித்திருந்தன. இலங்கை,

தற்போதைய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+ இன் செல்லுபடிக் காலம் 2023 இறுதியில் முடியும் வரை அதிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறது. அதேவேளை, தற்போதைய சுழற்சி வட்டத்தில் ஏற்கனவேயுள்ள இருபத்தேழு கூட்டத்தொடர்களுக்கும் மேலதிகமாக ஆறு புதிய பன்னாட்டு கூட்டத்தொடர்களுடன் 10 ஆண்டுகள் சுழற்சி வட்டத்தினைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை திட்டம்+ 2024 சனவரி 01 இலிருந்து 2033 திசெம்பர் 31 வரை நடைமுறையிலிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்கள் ஆறு புதிய கூட்டத்தொடர்களை ஏற்கனவே உறுதிப்படுத்தியிருப்பதனால் இலங்கை மீள விண்ணப்பிக்கக்கூடிய நிலையில் காணப்படுகிறது. இலங்கை, ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+ இன் நன்மைபெறுநராக இருப்பதனால், 2021ஆம் ஆண்டுப்பகுதியின் ஐக்கிய இராச்சியத்தின் உலகளாவிய தீர்வை மற்றும் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் ஐக்கிய இராச்சியத்தின் முன்னுரிமைத் திட்டம் என்பனவற்றின் கீழ் ஐக்கிய இராச்சியத்திற்கான அதே தீர்வையற்ற சலுகைகளையும் தொடர்ந்தும் அனுபவித்தது. எனினும், ஐக்கிய இராச்சியம் 2023இல் நடைமுறைக்குவரும் “அபிவிருத்தியடைந்த நாடுகளின் வர்த்தகப்படுத்தல் திட்டம்” என்ற அதன் புதிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டத்தினை 2022 ஓகத்தில் அறிமுகப்படுத்தியது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகப்படுத்தல் திட்டத்தின் விரிவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதிலிருந்து 3 ஆண்டுகளிற்கு இலங்கை நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், ருஷிய கூட்டமைப்பு, அவுஸ்திரேலியா, கனடா, துருக்கி, சுவிற்சிலாந்து, நோர்வே மற்றும் நியூசிலாந்து போன்ற வேறு பல நாடுகளினால் வழங்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களிலிருந்து ஏற்றுமதிகளுக்கான அவற்றின் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்பட்டபோதும் இலங்கை தொடர்ந்து நன்மைகளைப் பெற்றது. இலங்கையின் குறுகிய ஏற்றுமதித் தளம் மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களில் குறைந்த உற்பத்தி உள்ளடக்கம் என்பன அத்தகைய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களின் முழு நன்மைகளை பெற்றுக்கொள்வதிலிருந்து இலங்கையைத் தடுக்கின்றன.

**2018 இலிருந்து தொடர்ந்தும் இயங்காதிருந்த வர்த்தகப் பேச்சு வார்த்தைகளை மீளத்தொடங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தவேளை 2022இல் இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் செயலாற்றம் திருப்திகரமற்றதாக காணப்பட்டது.** இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை போன்ற இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை நன்மையடைந்தது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினூடான இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்பனவற்றிற்கான ஏற்றுமதிகள் 2022இல் மொத்த ஏற்றுமதிகளில் முறையே 65 சதவீதமாகவும் 73 சதவீதமாகவும் விளங்கி உயர்வாகக் காணப்பட்டன. அதேவேளை, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பனவற்றின் கீழான இறக்குமதிகள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாக விளங்கியதுடன் இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்தான மொத்த இறக்குமதிகளில் முறையே 3 சதவீத (ஐ.அ.டொலர் 119 மில்லியன்) மற்றும் 4 சதவீத (ஐ.அ.டொலர் 13 மில்லியன்) பங்குகளை மாத்திரம் கொண்டிருந்தன. அதேவேளை, வர்த்தகத் திணைக்களம் ஆடைகள் மீதான 8 மில்லியன் துண்டுகள் கொண்ட தற்போதைய அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளை அகற்றுவது அல்லது அனுமதிப் பங்கினை மேலும் அதிகரிப்பது உட்பட, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரச்சனைகள் பற்றி ஆர்வலர்களினால் முன்மொழியப்பட்ட ஆலோசனைகளை உள்ளடக்கும் விதத்தில் தீர்வையற்ற வழிமுறைகளின் தொகுப்பினை 2022இல் இற்றைப்படுத்தியது. சீனாவிற்கான குறைந்தளவு ஏற்றுமதிகளால் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை மற்றும் மெக்சிக்கோவிற்கான குறைந்த கறுவா ஏற்றுமதிகளால் வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை என்பனவற்றின் கீழான வர்த்தகம் மிதமடைந்தமையுடன் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் பிராந்திய வர்த்தக உடன்படிக்கையின் கீழான வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் தொடர்ந்தும் குறைந்த மட்டங்களிலேயே காணப்பட்டவேளையில் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிராந்தியத்தின் கீழான ஏற்றுமதிகள் 2022இல் வீழ்ச்சியடைந்தன. தற்போதுள்ள பிராந்திய உடன்படிக்கைகளைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்கு பிராந்தியத்திலுள்ள அயல்நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்துவதன் மீது கூடுதலான வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதனை தேவைப்படுத்தியவேளையில், அனைத்தையுமுள்ளடக்கிய பிராந்திய பொருளாதாரப் பங்குடமை போன்ற புதியதும் பரந்தளவிலானதுமான பிராந்திய பங்குடமைகளுக்குள் நுழைவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதும் இன்றியமையாததாகும். 2018இல் உடன்படிக்கை எட்டப்பட்டதிலிருந்து தொழிற்படத் தொடங்குவதற்குத் தவறிப்போன, சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மீளாய்வு செய்முறையினை விரைவுபடுத்துவதற்காக 2022இல் புதுப்பிக்கப்பட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, நேரகாலத்துடன் சிங்கப்பூர்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் அடையாளம் காணப்பட்ட திருத்தங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக 2023இன் ஆரம்பத்தில் சிங்கப்பூருடன் மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வர்த்தகக் கொள்கை மாற்றங்களில் நிலையற்றதன்மை, தீர்வையற்ற தடைகள் மற்றும் உற்பத்தி பன்முகப்படுத்தல்

அட்டவணை 5.7
இலங்கையின் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2021 | 2022 (அ) | | | முக்கிய ஏற்றுமதி உற்பத்திகள் (ஏற்றுமதியின் அளவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது) |
|---|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) | |
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பீ) | 4,312.6 | 4,314.7 | 0.05 | 81.4 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், கடலுணவு |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை+ உள்ளடங்கலாக) (ஆ) | 2,402.1 | 2,440.3 | 1.6 | 46.0 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் |
| ஐக்கிய அமெரிக்கா (இ) | 677.8 | 719.0 | 6.1 | 13.6 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் |
| ஐக்கிய இராச்சியம் | 680.7 | 659.0 | -3.2 | 12.4 | ஆடைகள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு, தேயிலை |
| ருசிய கூட்டாட்சி (ஈ) | 132.9 | 125.7 | -5.4 | 2.4 | தேயிலை, இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், ஆடைகள், கடலுணவு |
| அவுஸ்திரேலியா | 103.5 | 97.0 | -6.2 | 1.8 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள் |
| கனடா | 87.9 | 86.2 | -2.0 | 1.6 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு |
| யப்பான் | 87.6 | 80.7 | -7.9 | 1.5 | தேயிலை, கடலுணவு, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் |
| துருக்கி | 74.1 | 45.3 | -38.8 | 0.9 | தேயிலை, இறப்பர் உற்பத்திகள், ஆடைகள், இரசாயன உற்பத்திகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் |
| ஏனைய முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட முறைமை | 66.1 | 61.6 | -6.8 | 1.2 | |
| 2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 525.8 | 561.5 | 6.8 | 10.6 | விலங்குத் தீனி, சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, ஆடைகள், மர மற்றும் காகித உற்பத்திகள் |
| 1975 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (உ) | 238.6 | 228.4 | -4.3 | 4.3 | ஆடைகள், தேயிலை, இரசாயன உற்பத்திகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் |
| 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை | 91.8 | 62.5 | -32.0 | 1.2 | வாசனைப் பொருட்கள், விலங்குத் தீனி, தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் |
| 2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 62.3 | 56.6 | -9.0 | 1.1 | சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், இயற்கை இறப்பர், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 101.6 | 75.2 | -26.0 | 1.4 | வாசனைப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், ஆடைகள், புடவைகள், இரசாயன உற்பத்திகள் |
| 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 1.4 | 1.5 | 1.9 | 0.03 | இறப்பர் உற்பத்திகள், தேயிலை, இயற்கை இறப்பர், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை |
| **முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள்** | **5,334.2** | **5,300.4** | **-0.6** | **100.0** | |
| **இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக** | **42.7** | **40.4** | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிற்குப் பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ஐக்கிய அமெரிக்கா ஜீ.எஸ்.பீ. 2020இல் காலாவதியானதிலிருந்து ஜீஎஸ்பீ தகைமைபெற்ற ஏற்றுமதிகளை காண்பிப்பதுடன் பின்னோக்கிய அடிப்படையுடன் மீள புதுப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
(ஈ) ருசியா, பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(உ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

*மூலங்கள்:* இலங்கை வர்த்தகத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

5

போதுமானளவிற்கு காணப்படாமை என்பன தற்போதுள்ள இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் முழு உள்ளார்ந்த வளத்தினையும் பயன்படுத்துவதற்கு தடையாக விளங்குகின்றன. அதேவேளை, தாய்லாந்து (இலங்கை-தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை), சீனா (சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை) மற்றும் இந்தியா (பொருளாதார மற்றும் தொழில்நுட்பவியல் ஒத்துழைப்பு உடன்படிக்கை) என்பனவற்றுடனான அனைத்தையுமுள்ளடக்கிய இருபுடை வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீளத்தொடங்குவதற்கான கலந்துரையாடல்கள் 2022இல் தொடர்ந்தன. தாய்லாந்துடனான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 2023 சனவரியில் நிறைவடைந்த வேளையில், சீனா மற்றும் இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகளின் மேலதிகச் சுற்றுக்கள் 2023இன் முன்னரைப்பகுதியில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2022இல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு புதிய தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மேலும், எதிர்கால வர்த்தக உள்ளார்ந்த வளம், குறிப்பாக ஆடைத் துறைக்கான வாய்ப்புக்கள் உயர்வாக இருக்கும் இந்தோனேசியா மற்றும் வங்காளதேசத்துடனான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும் உடன்படிக்கையினை மேற்கொள்ளவும் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. உலக வர்த்தக அமைப்பின் 12ஆவது அமைச்சரவை மட்டத்திலான மாநாடு 2022 யூனில் ஜெனிவாவில் வெற்றிகரமாக முடிவடைந்து மீன்பிடி மீதான உதவித்தொகைகள், அவசரகால விடயங்களுக்கு உலக வர்த்தக அமைப்பின் பதிலிறுத்தல், உலக வர்த்தக அமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் பல விடயங்கள் தொடர்பான தொடர்ச்சியான முடிவுகளை உள்ளடக்கி "ஜெனிவா பொதி" என்ற வடிவத்தில் பல்புடை ரீதியாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் பாதுகாக்கப்படுகின்றன.

### 5.2.2 பணிகள் கணக்கு

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2022இல் பணிகள் கணக்கின் வர்த்தகம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த மிகையினைப் பதிவுசெய்தது.** எனினும், சரக்குப் போக்குவரத்துப் பணிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் உட்பட, பணிகள் கணக்கிலுள்ள அனைத்து மற்றைய துணைத் துறைகளும் குறிப்பிடத்தக்க சுருக்கங்களை பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகளின் விளைவாக, பணிகள் கணக்கிலுள்ள மிகை 2021இன் ஐ.அ.டொலர் 1,586 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2,110 மில்லியனாக விளங்கியது.

#### பயணம் மற்றும் சுற்றுலா

**ஏனையவற்றிற்கிடையே, அதிகரித்த சமூகப்பதற்றங்கள், எரிபொருள் பற்றாக்குறைகள் மற்றும் வலு கிடைக்காமை, மற்றும் பயண ஆலோசனைகள் என்பனவற்றிற்கு மத்தியில், முன்னொருபோதுமில்லாத தடங்கல்களின் விளைவாக ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பாதிப்புக்களுக்கிடையிலும் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2022இல் உறுதியான மீட்சியொன்றினைப் பதிவுசெய்தன.** இம்மீட்சிக்கு, முக்கிய பயண நாடுகளினால் விடுக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையுடன் உயர்ந்த உலகளாவிய நோய்த்தடுப்பு மருந்து ஏற்றல் வீதங்கள், அதிகரித்த வான் பயண இணைப்புக்கள் என்பன துணைபுரிந்தன. குறிப்பிடத்தக்க செலாவணி வீத தேய்வு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் என்பனவும் பயணத்திற்கான கவர்ச்சிமிக்க சேரிடமாக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொள்ள உதவின. 2021இன் பிற்பகுதியிலிருந்து உத்வேகம் பெறத் தொடங்கிய சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் உயர்வடைந்த சமூகப் பதற்றங்கள், உள்நாட்டுப் பயணத்திற்கான எரிபொருள் தட்டுப்பாடு, மற்றும் இவற்றின் விளைவாகத் தோன்றிய எதிர்மறையான விளம்பரங்கள் மற்றும் முக்கியமான சந்தை மூலங்களினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் என்பனவற்றினால் பாதிக்கப்படுவதற்கு முன்னதாக, 2022 மாச்சில் உச்சத்தினைத் தொட்டது. உள்நாட்டுக் காரணிகளுக்குப் புறம்பாக, உக்ரேன்-ருஷ்யப் போரின் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கசியும் தாக்கங்கள், மற்றும் சீனாவில் வெளிமுகப் பயணங்கள் தடைசெய்யப்பட்டமை என்பனவும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளினது மீட்சியை எதிர்க்கணியமாகப் பாதித்தன. எனினும், சமூகப் பதற்றங்கள் படிப்படியாக மறைந்தமையின் காரணமாக சில நாடுகள் அவற்றின் பயண ஆலோசனைகளின் கடுமையான தன்மையினைக் குறைத்துக் கொண்டமையின் விளைவாக 2022 ஒத்தோபரிலிருந்து வருகைகள் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியதுடன் 2023இன் ஆரம்பத்தில் அதன் உத்வேகம் அதிகரித்தது. பல்வேறு பன்னாட்டு வான் பயண நிறுவனங்கள், ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள், மற்றும் கடற்பயண சுற்றுலா என்பனவற்றை மீண்டும் ஆரம்பித்தமையும் அதேபோன்று அநேக நாடுகளில் காணப்பட்ட உலகளாவிய ஊக்குவிப்புக்களும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் புத்துயிர் பெறுவதற்குப் பங்களித்தன. இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021இன் 194,495 இலிருந்து 2022இல் 719,978இற்கு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னர் இலங்கை ஆண்டிற்கு சராசரியாக 2 மில்லியனுக்கும் கூடுதலான சுற்றுலாப் பயணிகளின் வருகையினைப் பதிவுசெய்திருந்தது. இது, இலங்கையின் சுற்றுலா நடவடிக்கையின் உள்ளார்ந்த மட்டத்தினை எய்துவதற்கு இன்னமும் விரைவாக மீட்சியடைய வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

**இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் மிகப்பெரிய மூலமாக ஐரோப்பா தொடர்ந்தும் விளங்கியவேளையில் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான தனிப்பெரும் மூலமாக இந்தியா தொடர்ந்தும் காணப்பட்டது.** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின்படி, 432,226 சுற்றுலாப் பயணிகளுடன் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 60 சதவீதத்திற்கு ஐரோப்பா வகைகூறியதுடன், அனைத்து முக்கிய பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தன. 2022இல், 213,537 சுற்றுலாப் பயணிகளுடன் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் 30 சதவீதத்திற்கு வகைகூறி ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியம், வருகைக்கான இரண்டாவது மிகப்பெரிய மூலமாக விளங்கியது. நாடுகளின்படியான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் நியதிகளில், இந்தியா 123,004 வருகைகளுடன் 2022இல் முன்னணி சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் மூலமாக விளங்கியதுடன் மொத்த வருகைகளில் 17 சதவீதத்திற்கும் வகைகூறியது. இதனைத் தொடர்ந்து ருஷியா (91,272), ஐக்கிய இராச்சியம் (85,187), ஜேர்மனி (55,542), மற்றும் பிரான்ஸ் (35,482) என்பன காணப்பட்டதுடன் இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து மொத்த வருகைகளில் 54 சதவீதத்திற்கு வகைகூறின.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021இன் ஐ.அ.டொலர் 507 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,136 மில்லியனாக விளங்கி வரவேற்கத்தக்க வருடாந்த வளர்ச்சி வீதமான 124.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. எனினும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இல் எய்தப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் மட்டத்திற்கும் மிகக் கீழேயே காணப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் செலவிடல் மற்றும் தங்கியிருக்கும் காலம் தொடர்பில் இலங்கை சுற்றுலா

அபிவிருத்தி அதிகாரசபையின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் 2022இல் சுற்றுலாப் பயணி ஒருவருக்கான சராசரிச் செலவிடல் 2021இன் நாளொன்றுக்கான ஐ.அ.டொலர் 172.6 உடன் ஒப்பிடுகையில் நாளொன்றுக்கு ஐ.அ.டொலர் 169.0 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, சுற்றுலாப் பயணி ஒருவரின் தங்கியிருக்கும் சராசரிக் காலம் 2021இன் 15.1 நாட்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 9.3 நாட்களாக இருக்குமென மதிப்பிடப்பட்டது. 2021இல் தங்கியிருக்கும் காலம் உயர்ந்தளவில் காணப்பட்டமைக்கு, கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தடுத்து வைக்கப்படவேண்டிய காலத்தின் தேவைப்பாடு முக்கிய காரணமாக அமைந்தது. அதேவேளையில், இலங்கையில் வதிவோரினால் மேற்கொள்ளப்பட்ட வெளிமுகப் பயணம் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் மிதமான மட்டமொன்றில் அமைந்து நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.

**முதலீட்டாளர்களினால் செயற்றிட்டங்கள் தாமதப் படுத்தப்பட்டமை மற்றும் அளவுகள் குறைக்கப்பட்டமை அதேபோன்று சவால்மிக்க பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் கட்டுமானக் கைத்தொழில்களில் காணப்பட்ட இடையூறுகள் என்பனவற்றின் காரணமாக 2022இல் சுற்றுலாத் துறையின் முதலீடுகள் பாதிக்கப்பட்டன.** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, 2022இல் 1,054 அறைகளைக் கொண்ட கொள்ளளவுடன் ஐ.அ.டொலர் 68 மில்லியன் தொகையுடன் சுற்றுலாத் துறை தொடர்பில் 42 புதிய முதலீட்டுச் செயற்றிட்டங்களை அனுமதிக்காகப் பெற்றுக் கொண்டது. 2021 உடன் ஒப்பிடுகையில், 2022இல் பெறப்பட்ட செயற்றிட்டங்களினது முதலீட்டுப் பெறுமதியில் 48.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சி காணப்பட்டது. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் நியதிகளில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 2022இல் சுற்றுலா தொடர்பில் மொத்தமாக 363 அறைகளைக் கொண்ட கொள்ளளவுடன் ஐ.அ.டொலர் 36 மில்லியன் பெறுமதியானது 20 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலை வழங்கியது. மேலும், 5,424 அறைகளுடன் கூடிய 95 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் தற்போது நிறைவடைவதற்கான வெவ்வேறுபட்ட மட்டங்களுடன் கட்டுமானத்தின் கீழ் இருக்கின்ற அதேவேளை 1,623 அறைகளுடன் கூடிய 25 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் 2023இல் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கமைய, 2022இல் மொத்தமாக 25,597 அறைகளுடன் கூடிய 469 தரமிடப்பட்ட நிறுவனங்களும் சிறிய வில்லா இல்லங்கள், பங்களாக்கள், விருந்தினர் இல்லங்கள், மரபுரிமை பங்களாக்கள், மரபுரிமை இல்லங்கள், வீடுகளில் தங்கும் அலகுகள், வாடகைக்கு தொடர்மாடி மனைகள், மற்றும் வாடகைக்கு விடப்படும் இல்லங்கள் என்பன உள்ளடங்கலாக 22,523 அறைகளைக் கொண்ட மொத்த இயலளவுடன் 3,360 துணை நிறுவனங்களும் தொழிற்பட்டன.

**கூடுதலான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகப் பல்வேறு கொள்கை முன்னெடுப்புக்களும் பல்வேறுபட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் 2022இல் மேற்கொள்ளப்பட்டன.** வளம் பெற்றுவரும் உலகளாவிய சுற்றுலாக் கைத்தொழிலின் அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் புதிய பெறுமதிமிக்க சந்தைகளைக் கண்டறிந்து கொள்வதும் வலுவான சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதும் இலங்கை சுற்றுலாவிற்கு அவசியமாகும். இதனை எய்தும் விதத்தில், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை சுற்றுலாத் துறையின் மீட்சி மற்றும் எதிர்கால மீளெழுச்சிக்கான நிகழ்ச்சிநிரலொன்றினை நிர்ணயிக்கும் பொருட்டு பிரச்சினைகள், வாய்ப்புக்கள், மற்றும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை அடையாளம் காணும் இலங்கை சுற்றுலாவிற்கான உபாயத் திட்டம் 2022-2025இனை 2022 ஏப்பிறலில் வெளியிட்டது. பயணிகளின் வருகைதரும் நடவடிக்கையினை இலகுபடுத்துவதற்கு உதவும் விதத்தில் இலங்கை பெரும்பாலான நாடுகளிலிருந்து வருகைதரும் பன்னாட்டுப் பயணிகளுக்கு, 2022 சனவரியில் வருகைதரும் பொழுதே விசாவினைப் பெறும் வசதியினை மீண்டும் ஆரம்பித்தது. உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பனவற்றிற்கு மத்தியில் பல்வேறுபட்ட சுற்றுலாப் பணிகளை வழங்குவோரினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதற்கு அனைத்து வகை சுற்றுலா வழிகாட்டிகளுக்குமான உரிமங்களின் செல்லுபடிக் காலத்தினை நீடித்தமை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பட்டியலிடப்பட்ட அனைத்துச் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்குமான ஆண்டுப் பதிவுக் கட்டணத்தினைத் தள்ளுபடி செய்தமை

அட்டவணை 5.8
சுற்றுலாத் துறையின் செயலாற்றம்

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 (அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) 2022 |
|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 2,333,796 | 1,913,702 | 507,704 | 194,495 | 719,978 | 270.2 |
| வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் | | | | | | |
| பொழுதுபோக்கு | 1,979,819 | 1,592,212 | 444,328 | 157,766 | 428,838 | 171.8 |
| வியாபாரம் | 71,255 | 70,068 | 13,946 | 3,956 | 30,057 | 659.8 |
| ஏனையவை | 282,722 | 251,422 | 49,430 | 32,773 | 261,083 | 696.6 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 25,205 | 19,902 | 4,315 | 2,937 | 6,725 | 129.0 |
| தங்கும் அறை குடியிருப்பு வீதம் (%) | 72.8 | 57.1 | 15.0 | 18.6 | 30.4 | 63.4 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்லியன்) | 711,961 | 646,362 | 124,189 | 101,903 | 338,052 | 231.7 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ.) | 305,066 | 337,755 | 244,609 | 523,936 | 469,531 | -10.4 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) (ஆ) | 388,487 | 402,607 | 347,751 | 357,927 | 386,236 | 7.9 |
| நேரடி தொழில்நிலை | 169,003 | 173,592 | 175,990 | 177,476 | 190,521 | 7.4 |
| மறைமுக தொழில்நிலை | 219,484 | 229,015 | 171,761 | 180,451 | 195,715 | 8.5 |


(அ) தற்காலிகமானது
(ஆ) மதிப்பீடுகள்

*மூலங்கள்:* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

5

போன்ற அநேக வழிமுறைகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டன. வருகையின் போது தொற்றுப் பீடித்திருக்கவில்லை என்பதனை நிரூபிக்கும் பிசிஆர் அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற தேவைப்பாடு உட்பட, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த நோய்த்தடுப்பு வழிமுறைகள் 2022 திசெம்பரில் அகற்றப்பட்டன. அதேவேளை, 2022இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பதிவுசெய்யப்பட்ட தங்குமிடங்களின் மொத்த எண்ணிக்கை அதிகரித்தது. 2022 காலப்பகுதியில் நிலவிய அசாதாரணமான பேரண்டப் பொருளாதாரச் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு மத்திய வங்கி, சுற்றுலா உட்பட, அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலுமுள்ள பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு, ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து 2022 திசெம்பர் வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு சலுகைகளை வழங்குமாறு வங்கிகளைக் கேட்டுக் கொண்டது. பொதுநலவாய சுதந்திர நாடுகளின் பிராந்தியத்திலிருந்து கூடுதலான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொள்ளும் பொருட்டு ருஷியா மற்றும் உக்ரேனிலிருந்தான பயண முகவர்களுக்காக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் ஒருவருடன் ஒருவர் பரீட்சயமாகிக் கொள்ளும் பிரச்சாரத்தினை ஒழுங்குசெய்த வேளையில், அத்தகைய முன்னெடுப்புக்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கும் விரிவாக்கப்பட்டது. மேலும், இந்தியச் சந்தையினை இலக்காகக் கொண்டு திரைப்படச் சுற்றுலா மற்றும் வீதியோரக் காட்சிப்படுத்தல் வசதிகள் போன்ற பல்வேறுபட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. அதேவேளை, இலங்கை நலனோம்பு சுற்றுலா ஆர்வலர்கள் செயற்றிட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் 2022 பெப்புருவரியில் அலுவலக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன், இலங்கையிலுள்ள சுற்றுலா விடுதிகள் மற்றும் ஓய்வுகாலமனைகள் சிலவும் உலகளாவிய சுற்றுலாத் தொழில்துறையிலுள்ள பல்வேறுபட்ட ஆய்வரங்குகளில் விருதுகளைப் பெற்றுக்கொண்டன. இதன்

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

அடிப்படையில், இலங்கை "வேர்ள் பக்கேர்ஸ்" இனால் பயணம் செய்வதற்கு உலகிலுள்ள பாதுகாப்பான இடங்களிலொன்று எனவும் "இன்டிபென்டன் "மகஷின்-யு.கே" இனால் "2023இல் பயணம் செய்வதற்கான மிகச் சிறந்த நாடு" எனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில் வாடிக்கையாளர் தெரிவு விருதின் மூலம் கொன்டே நாஸ்டி ரவலர்ஸ் இனால் பயணம் செய்வதற்கேற்ற முதல் 20 இடங்களில் இலங்கையும் ஒன்று என அங்கீகரிக்கப்பட்டது. சுற்றுலாத் துறையானது, மின்வலுத் தீர்வைகளின் அதிகரிப்பு, சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மீதான வரிகள் மற்றும் தீர்வைகள், அதிகளவு தொழிலாளர் புலம்பெயர்வின் காரணமாக சுற்றுலாவிடுதிகளில் காணப்படும் தேர்ச்சிபெற்ற அலுவலர்களின் பற்றாக்குறை, ருஷியா-உக்ரேன் போரின் காரணமாக பொதுநலவாய சுதந்திர நாடுகளிலிருந்தான குறைவடைந்த வருகைகள், உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் காணப்படும் உயர்ந்த பணவீக்கம், உலகளாவிய மந்த நிலைமைகளின் பயமுறுத்தல், மற்றும் இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி என்பன உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்நோக்குகிறது. இச்சவால்களை வெற்றி கொள்வதற்கு இத்தொழில் துறையிலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகும்.

## போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள் மற்றும் ஏனைய பணிகள்

5

**போக்குவரத்து, கணனி மற்றும் தகவல் பணிகள் போன்றன உள்ளிட்ட சென்மதி நிலுவைப் பணிகளின் கணக்கிலுள்ள பெரும்பாலான துணைத் துறைகள் 2022இல் குறிப்பிடத்தக்களவிற்கு குறைந்த செயலாற்றத்தினையே பதிவுசெய்தன.** கடல் மற்றும் வான் சரக்குப் போக்குவரத்து துணைத் துறைகள் இரண்டும் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. சரக்குக் கையாளல் உள்ளிட்ட கடற்சரக்கு, மாற்றிக் கப்பலேற்றல், கப்பல் வருகை மற்றும் கொள்கலன் கையாளல் என்பனவற்றின் கீழான அனைத்துக் குறிகாட்டிகளும் இவ்வாண்டுப்பகுதியில், குறிப்பாக 2022இன் பின்னரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்து, எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2022இன் முதற் காலாண்டிற்குப் பின்னர் வணிகப்பொருட்களின் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் படிப்படியாகக் குறைவடைந்தமையே இவ்வீழ்ச்சிக்கு மிக முக்கிய காரணமாகும். இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வு, படுகடனை நிறுத்தி வைப்பதற்கான அறிவிப்பிற்கு வழிவகுத்த உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட கடுமையான வெளிநாட்டு நாணய திரவத்தன்மைப் பற்றாக்குறை, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அதேபோன்று 2022இன் இரண்டாமரைப்பகுதியில் உலகளாவிய வர்த்தகம் மிதமடைந்தமை என்பன மேற்கூறிய வீழ்ச்சியை தீவிரப்படுத்தின. இது, கொவிட்-19 இடையூறுகளின் காரணமாக

உச்சமட்ட விலைகளிலிருந்து பன்னாட்டு சரக்குக் கட்டண வீதங்கள் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமையுடன் இணைந்து, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் கடல் மற்றும் வான் சரக்குப் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சியினைத் தோற்றுவித்தது. எனினும், அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள், மற்றும் வதியும் இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணம் படிப்படியாக மீண்டும் ஆரம்பமாகியமை என்பனவற்றுடன் ஆண்டுப்பகுதியில் வான் பயண போக்குவரத்துப் பணிகளின் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் இரண்டும் நேர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், பயண வெளிப்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டிற்கு ஒத்ததாக 2022இல் மிதமான மட்டங்களில் காணப்பட்டன. தகவல் தொழில்நுட்பவியலை பிரதானமாகக் கொண்ட வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் துறை 2022ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு சவால்களை எதிர்நோக்கியது. நாட்டில் நிலவிய உறுதியற்ற பொருளாதாரம், துறையிலுள்ள அநேக தொழில்சார்நிபுணர்களை நாட்டிற்கு வெளியே சிறந்த வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு தூண்டியமையானது இத்தொழில் துறையில் அனுபவம் நிறைந்த தொழில்சார்நிபுணர்களின் கணிசமான தட்டுப்பாடுகளுக்கு வழிவகுத்தது. மேலும், 2022இன் குறுகியதொரு காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த பணிகளின் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது பாதகமானதொரு விடயமாக தொழில் துறையினால் நோக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் மூலங்களில் பொதுவாக காணப்பட்ட மெதுவானபோக்கு மற்றும் தொழில்நுட்ப மட்டத்திலான ஊழியர்கள் பதவி விலகுதல் என்பனவற்றுடன் இந்நிலைமை தீவிரப்படுத்தப்பட்டது. இம்மோசமான நிகழ்வுகளின் விளைவாக, கணனிப் பணிகள் ஏற்றுமதித் துறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடனும் இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய உறுதியற்ற பொருளாதாரத்துடனும் தற்செயலாக ஒன்றுடொன்று இணைந்து நிதியியல் பணிகள், கட்டடவாக்கப் பணிகள், அரச பணிகள் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய பணிகள் ஏற்றுமதித் துணைத் துறைகளுக்கான உட்பாய்ச்சல்களும் இவ்வாண்டுப்பகுதியில் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

### 5.2.3 முதலாந்தர வருமானம்

**முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** முதலாந்தர வருமானக் கணக்கு வெளிப்பாய்ச்சல்கள், பன்னாட்டு முதலீட்டு நிலைமை கையேடு மற்றும் சென்மதி நிலுவை புள்ளிவிபரங்களின் 6ஆவது கைநூலின்படி, கணக்கீட்டின் அட்டுறு தத்துவ அடிப்படையில் 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அரச வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான தற்காலிக இடைநிறுத்தல் காரணமாக நிலுவைகளிலுள்ள அத்தகைய வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய, அனைத்து வட்டிக் கொடுப்பனவுகளையும் பிரதிபலிக்கிறது[1]. இதற்கமைய, முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2021இன் ஐ.அ.டொலர் 1,959 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,874 மில்லியனாக விளங்கியது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளிலிருந்தான பங்கிலாபங்களின் வெளிப்பாய்ச்சல்களில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டது. இதற்கு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகள் கணிசமானளவு பங்கிலாபங்களைப் பிரகடனம் செய்தமையே காரணமாகும். எனினும், வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகளின் மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் குறைவடைந்தன. அதேவேளை, நிலுவைகள் உள்ளிட்ட சொத்துப்பட்டியல் முதலீடுகளின் கூப்பன் கொடுப்பனவுகள் 2021 யூலையிலும் 2022 சனவரியிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவின் விளைவாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைப்புடன் சிறிதளவால் வீழச்சியடைந்தன. எனினும், அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் தனியார் கூட்டுத்தாபனங்கள் உட்பட, அனைத்துத் துறைகளும் உயர்ந்த வட்டி வீதங்களைச் செலுத்தியதுடன் நிலுவைகள் உட்பட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டது. உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து மாறுபடும் வட்டி வீதக் கடன்கள் மீதான உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகளும் அதேபோன்று குறிப்பிட்ட சில வெளிநாட்டுப் படுகடன்களின் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் நாட்டின் கொடுகடன் தரமிடல்கள் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக இலங்கை வங்கிகளினாலும் கூட்டுத்தாபனங்களினாலும் எதிர்நோக்கப்பட்ட அதிகரித்த இடர்நேர்வுக் கட்டணங்கள் என்பன வட்டிச் செலவினங்களின் இவ்வுயர்ந்த மட்டங்களுக்கு சாத்தியமான காரணங்களாக இருக்கலாம். அதேவேளை, 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் ஒதுக்குச் சொத்துக்களிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைந்தது.

### 5.2.4 இரண்டாந்தர வருமானம்

**2022இன் பின்னரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவு மீளெழுச்சியடைந்தபோதிலும் இரண்டாந்தர வருமானக் கணக்கில் காணப்பட்ட மிகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்தது.** 2022இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2021இன் ஐ.அ.டொலர் 5,491 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,789

1 சென்மதி நிலுவைகள் மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை கையேட்டின் 6ஆவது பதிப்பிற்கமைவாக, கணக்கீட்டின் அட்டுறு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

5

மில்லியனாக விளங்கியது. இது, 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இன் 31 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாக விளங்கி இரண்டாந்தர வருமானக் கணக்கின் மிகையை 2021இன் ஐ.அ.டொலர் 5,228 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3,496 மில்லியனுக்கு மட்டுப்படுத்தியது. வங்கித்தொழில் முறைமையினால் வழங்கப்பட்ட செலாவணி வீதத்திற்கும் நாணய மாற்றுநர்களினால் வழங்கப்பட்ட செலாவணி வீதத்திற்குமிடையிலான வேறுபாடு பாரியளவில் காணப்பட்டமைக்கு மத்தியில் வங்கித்தொழில் முறைமைக்கான தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பாக ஆண்டின் முன்னரைப்பகுதியில் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. 2022 மாச்சு தொடக்கத்தில் செலாவணி வீதத்தில் செய்யப்பட்ட சீராக்கம் கணிசமானளவு மிகை நிலைமை மற்றும் அதனைத் தொடர்ந்து வங்கித்தொழில் முறைமைக்கு வெளியிலுள்ளவர்களுடன் வங்கிகளினால் வழங்கப்பட்ட செலாவணி வீதங்களின் படிப்படியான ஒத்திசைவாக்கம் என்பன வங்கித்தொழில் முறைமையினூடாக வழிப்படுத்தப்பட்டு தொழிலாளர் பணவனுப்பல்கள் புத்துயிர்ப்படைய உதவியது. வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு வறிதாகிப் போனமையினால் முறைசாராச் சந்தைகளில் இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கு தொழிலாளர் பணவனுப்பல்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியமும் காணப்பட்டது. மத்திய வங்கியின் கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டதன் மூலம் ஆண்டின் பிற்பகுதியில் பொருளாதாரம் படிப்படியாக உறுதியடைந்தமை, மற்றும் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட பெருமளவு உறுதித்தன்மை என்பனவற்றுடன் சட்டபூர்வமற்ற சந்தைகளில் வழங்கப்பட்ட உயர்ந்த எல்லைகள் மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் தொழிலாளர் பணவனுப்பல்களை அனுப்புவதற்கு வங்கித்தொழில் முறைமைகளைப் பயன்படுத்துவது படிப்படியாக மீண்டும் ஆரம்பமாகியது. இதன் விளைவாக, 2022இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக அமைந்து 2022 சனவரி-செத்தெம்பர் காலப்பகுதியில் காணப்பட்ட மாதாந்த சராசரியான ஏறத்தாழ ஐ.அ.டொலர் 286 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சராசரியினைப் பதிவுசெய்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து கொண்டு வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்ற புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 311,056 ஆக விளங்கியதுடன், இது 2021இல் 122,264 மற்றும் 2020இல் 53,711 ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் அதிகரித்து காணப்பட்டது. புலம்பெயர் தொழிலாளர்கள் தமது பணத்தினை அனுப்புவதற்கு அலுவல்சார் மார்க்கங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் ஊக்குவிப்புத் திட்டங்கள் உள்ளடங்கலாக அநேக கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டவேளையில் வங்கித்தொழில் துறையும் பணத்தினை அனுப்புவதற்கு அலுவல்சார் மார்க்கங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தது. இலங்கை மத்திய வங்கி வங்கித்தொழில் துறை, லங்கா கிளியர் மற்றும் ஏனைய ஆர்வலர்களுடன் இணைந்து, தொழிலாளர் பணவனுப்பல்கள் டிஜிட்டல் மயப்படுத்தப்படுவதனை ஊக்குவிப்பதற்காக “இலங்கை றெமிட்” என்ற டிஜிட்டல் அப்ஸ் இனை அறிமுகப்படுத்தியது.

## 5.3 மூலதனக் கணக்கு நிலுவை

**மூலதனக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2022இல் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டன.** அரசாங்கத்திற்கான மூலதனக் கொடைகள் தொடர்ந்தும் மிதமானதாகக் காணப்பட்டதுடன், அரசாங்கம் மற்றும் தனியார் துறை இரண்டிற்குமான மூலதன மாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் குறைவடைந்தன. இதற்கமைய, மூலதனக் கணக்கு 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 25 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 19 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவுசெய்தது.

## 5.4 நிதியியல் கணக்கு

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2022இல் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** 2022இல் நிதியியல் கணக்கின் கொடுக்கல்வாங்கல்கள் முக்கியமாக 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அரசாங்கத்தின் குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையின் மூலமான குணாம்சங்களை முக்கியமாகக் கொண்டிருந்ததுடன் அது பயன்படுத்தத்தக்க மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு குறைவடைந்து போனமையினைப் பிரதிபலித்தது. இப்படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்காக பிரயோகிக்கத்தக்க நாட்டிற்கான தரமிடல்கள் செலுத்தத் தவறியதாக வகைப்படுத்தப்பட்டதுடன், நாட்டிற்கான நிதியியல் பாய்ச்சல்களைக் கவருவதில் குறிப்பிடத்தக்களவு இடர்ப்பாடுகள் ஏற்படவும் காரணமாகியது. படுகடன் இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர், ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் 2022 சனவரியில் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையுடன்

5

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கான நிதியிடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியிடலைப் பெற்றுக்கொள்வது மிகக் கடினமாக மாறியது. இக்காலப்பகுதியில் பிராந்திய நாடுகள் எரிபொருள், மருந்து, வளமாக்கி போன்ற பல இறக்குமதிகளுக்கு அநேகமான கொடுகடன் தொடர்களுடன் உடனடி உதவியை வழங்கியவேளையில் இருபுடை கொடுகடன் தொடர்கள் மற்றும் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவுத் திகதிகளும் நீடிக்கப்பட்டன. இதன் விளைவாக, அரசாங்கம் 2022இல் வெளிநாட்டுக் கடன்களாக ஐ.அ.டொலர் 2,391 மில்லியனுக்கும் கூடுதலான தொகையினைப் பெற்றுக்கொண்டது. இது, நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சலாக காணப்பட்டது. இது, அவசர கால கொடுகடன் வசதிகளையும் அதேபோன்று அவசரகால நிதியிடலூடாக அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிகளைத் திசைதிருப்பி மீள்நோக்கங்களுக்காக வழங்குவதற்கான பல்புடை முகவராண்மைகளின் அவசரகால உதவிகளையும் உள்ளடக்கியிருந்தது.

**2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் அதிகரித்தன.** 2022இல் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் 2021இன் ஐ.அ.டொலர் 2,098 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 2,030 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றை பதிவுசெய்தன. நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்கள் நாட்டின் இயலாற்றல் மற்றும் சக நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பன மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டபோதும், 2022இல் முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான முக்கிய பங்களிப்பு, அதிகரித்த மீள்முதலீட்டு வருவாய்கள் வடிவில் கிடைத்ததுடன் இதற்கு, 2022இல் வெளிநாட்டுச் செலாவணியின் பற்றாக்குறையின் காரணமாக பங்கிலாபங்களை வெளிநாட்டிற்கு அனுப்ப இயலாமல் போனமையின் விளைவாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில முக்கிய கம்பனிகள் அவர்களின் இலாபத்தினை மீளமுதலீடு செய்ய விரும்பிக் கொண்டமையே பகுதியளவில் காரணமாகும். மேலும், பங்குடமையாளர் முற்பணங்களிலும் இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளுக்கிடையிலான கடன்களிலும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. அதேவேளை, முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு தொடர்பற்ற தரப்பினர்களிலிருந்தான சில வெளிநாட்டுக் கடன்களின் உட்பாய்ச்சல்களானது 2022இல் அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தன. இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2021இன் ஐ.அ.டொலர் 779 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,181 மில்லியனாகக் காணப்பட்டன. மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஐ.அ.டொலர் 1,076 மில்லியன் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கானதாக இருந்தது. மேலும், வெளிநாட்டு நேரடி



### அட்டவணை 5.9 அ
### நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்


| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் |
| **நிதியியல் கணக்கு** | **-2,113** | **2,098** | **84** | **2,030** |
| **நேரடி முதலீடு** | **17** | **592** | **15** | **898** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப்பங்குகள் | 13 | 312 | 11 | 289 |
| வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 9 | 23 | 7 | 125 |
| வருவாய்களின் மீள் முதலீடு | 4 | 289 | 3 | 164 |
| படுகடன் கருவிகள் | 5 | 281 | 5 | 610 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **-** | **-1,547** | **-** | **355** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | -232 | - | 137 |
| படுகடன் பிணையங்கள் | - | -1,315 | - | 218 |
| பொது அரசாங்கம் | - | -1,315 | - | 212 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | -2 | - | 30 |
| நீண்ட காலம் | - | -1,313 | - | 183 |
| திறைசேரி முறிகள் | - | -25 | - | 21 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | -2 | - | 2 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | -1,285 | - | 159 |
| வழங்கல்கள் | - | - | - | - |
| உடமைகளின் முதிர்வுகள் | - | -700 | - | -391 |
| இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் | - | -586 | - | - |
| அட்டுறு வட்டி | - | - | - | 551 |
| ஏனைய துறைகள் | - | - | - | 6 |
| நீண்ட காலம் | - | - | - | 6 |
| அட்டுறு வட்டி | - | - | - | 6 |
| **நிதியியல் பெறுமதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு** | **387** | **3,053** | **1,302** | **776** |
| நாணயமும் வைப்புக்களும் | 306 | 4,016 | 514 | 272 |
| மத்திய வங்கி | - | 1,375 | - | 403 |
| குறுங்காலம் | - | 1 | - | ... |
| நீண்ட காலம் | - | 1,374 | - | 403 |
| பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல்கள் | - | 1,374 | - | 400 |
| அட்டுறு வட்டி | - | - | - | 3 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 306 | 2,641 | 514 | -131 |
| குறுங்காலம் | 256 | 2,641 | 605 | -131 |
| நீண்ட காலம் | 50 | - | -91 | - |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **வெளிநாட்டு நேரடி முதலீடுகள்** | | | | |
| வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | | 23 | | 125 |
| முதலீட்டுச்சபை கம்பனிகள் (இ) | | 29 | | 72 |
| கொழும்பு பங்கு பரிவர்த்தனைக் கம்பனிகள் (ஈ) | | -6 | | 45 |
| ஏனைய கம்பனிகள் | | -1 | | 8 |
| வருவாய்களின் மீள் முதலீடு | | 289 | | 164 |
| முதலீட்டுச்சபை கம்பனிகள் (இ) | | 284 | | 153 |
| கொழும்பு பங்கு பரிவர்த்தனைக் கம்பனிகள் (ஈ) | | 5 | | -39 |
| ஏனைய கம்பனிகள் | | - | | 50 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 281 | | 610 |
| முதலீட்டுச்சபை பங்குதாரர்களின் முற்பணங்கள் | | 162 | | 204 |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 119 | | 365 |
| ஏனைய கம்பனிகள் | | - | | 41 |
| **மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)** | | **592** | | **898** |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2) | | 187 | | 282 |
| **முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (உ)** | | **779** | | **1,181** |
| **கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **-238** | | **182** |
| நேரடி முதலீடுகள் | | -6 | | 45 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | -232 | | 137 |
| **ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) மீதான தேறிய வெளிநாட்டு முதலீடு** | | **-27** | | **51** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 17 | | 69 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 44 | | 18 |

**பக்கம் 193 இல் தொடர்கிறது.**

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபையுடன் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள்
(ஈ) கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட மற்றும் முதலீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்படாத கம்பனிகள்
(உ) முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம் விடயப்பரப்பு மற்றும் தொகுப்பு ஏதாவது முறைமைகளிலான வேறுபாட்டினாலானது

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 5.11
### நிதியியல் கணக்கு



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

முதலீடுகள் நீங்கலான கடன்கள் 2021இன் ஐ.அ.டொலர் 592 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 898 மில்லியனாக விளங்கின. துறைவாரியான அடிப்படையில், முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் முக்கியமாக தொலைத்தொடர்பூட்டல்கள், தயாரிப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி துறைகளுக்கானவையாக இருந்த வேளையில் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்படாத கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பாய்ச்சல்கள் முக்கியமாக ஏற்பாட்டு வசதிகள் மற்றும் எரிபொருள், வாயு மற்றும் பெற்றோலிய துறைகளுக்கானவையாக இருந்தன. மேலும், கொழும்பு துறைமுகத்திலுள்ள மேற்கு கொள்கலன் முனைக்கோடிக்காக பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பெறுகைகளும் 2022இன் பிற்பகுதியில் தேறல் செய்யப்பட்டன. கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம் என்பனவற்றிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்கள் அண்மிய காலத்தில் தேறல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கொழும்புப் பங்குப்பரிவர்த்தனைக்கு சிறுபங்கு உடைமையாளர்களினால் செய்யப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளை உள்ளடக்கிய சொத்துப்பட்டியல் முதலீடும் அரச பிணையங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளும் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட குறைப்பொன்றுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன.** வதிவற்றோர் வசமிருந்த ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் படுகடன்கள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தமைக்கு கடந்த ஒரு சில ஆண்டுகளாக வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் சாதனங்கள் அதிகளவிற்கு உரித்து நீக்கம் செய்யப்பட்டமையே காரணமாகும். நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு நியதிகளில், அரசாங்கம் 2022இன் தொடக்கத்தில் ஐ.அ.டொலர் 500 மில்லியனை மீளச் செலுத்தியது. 2022 யூலையில் செலுத்தப்பட வேண்டிய ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு

### அட்டவணை 5.9 ஆ
### நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் |
| **பக்கம் 192 இலிருந்து தொடர்கிறது.** | | | | |
| **ஏனைய முதலீடு** | | | | |
| கடன்கள் | - | -1,503 | - | -92 |
| மத்திய வங்கி | - | -57 | - | -140 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | -57 | - | -140 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | -57 | - | -140 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -2,152 | - | -1,645 |
| குறுங்காலம் | - | -2,169 | - | -1,301 |
| நீண்ட காலம் | - | 17 | - | -344 |
| பொது அரசாங்கம் | - | 873 | - | 1,679 |
| நீண்ட காலம் | - | 873 | - | 1,679 |
| வழங்கல்கள் | - | 2,544 | - | 2,391 |
| அட்டுறு வட்டி | - | - | - | 133 |
| மீள் கொடுப்பனவுகள் | - | -1,671 | - | -845 |
| ஏனைய துறைகள் (இ) | - | -167 | - | 13 |
| நீண்ட காலம் | - | -167 | - | 13 |
| வழங்கல்கள் | - | 187 | - | 332 |
| அட்டுறு வட்டி | - | - | - | 16 |
| மீள் கொடுப்பனவுகள் | - | -354 | - | -335 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | 257 | -426 | 282 | -895 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -3 | - | -27 | - |
| குறுங்காலம் | -3 | - | -27 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 260 | -426 | 310 | -895 |
| குறுங்காலம் | 260 | -426 | 310 | -895 |
| ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள் | -176 | 180 | 506 | 1,492 |
| மத்திய வங்கி | - | 180 | - | 1,492 |
| குறுங்காலம் (உ) | - | 180 | - | 1,492 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -176 | - | 506 | - |
| குறுங்காலம் | -176 | - | 506 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | 787 | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **-2,517** | | **-1,234** | |
| நாணய தங்கம் | -212 | | -152 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 123 | | -118 | |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | | -58 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | -2,428 | | -906 | |
| நாணயமும் வைப்புக்களும் | 1,536 | | -895 | |
| நாணய அதிகாரசபைகள் மீதான கோரல்கள் | 1,055 | | -526 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | 481 | | -369 | |
| பிணையங்கள் | -3,967 | | -11 | |
| படுகடன் பிணையங்கள் | -3,967 | | -11 | |
| நீண்ட காலம் | -3,967 | | -11 | |
| ஏனைய கோரல்கள் | 3 | | ... | |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-4,211** | | **-1,946** | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **873** | | **1,679** |
| வழங்கல்கள் | | 2,544 | | 2,391 |
| அட்டுறு வட்டி | | - | | 133 |
| மீள்கொடுப்பனவுகள் | | -1,671 | | -845 |

(அ) திருத்தப்பட்டது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல் வாங்கல்கள்

முறிகளின் மீள்கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அறிக்கையிடுகின்ற சென்மதி நிலவை புள்ளிவிபரங்களின் அட்டுறு கோட்பாட்டின்படி, கூப்பன் கொடுப்பனவுகளைச் செய்யாமையின் காரணமாகவுள்ள நிலுவைகள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள்

மீதான வட்டி என்பன தொடர்பான படுகடன் சாதனங்களின் வெளிநின்ற பொறுப்புக்களுடன் சேர்க்கப்பட்டன. இதற்கமைய, ஐ.அ.டொலர் 551 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகள் வதிவற்றோருக்கான நாட்டிற்கான பன்னாட்டு முறியின் ஒன்றுசேர்ந்த அட்டுறு வட்டியாக பதிவுசெய்யப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 149 மில்லியன் வெளிநாட்டுக் கடன்கள் மீதான ஒன்றுசேர்ந்த வட்டிக் கொடுப்பனவாகப் பதிவுசெய்யப்பட்டது. மேலும், அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளினால் வழங்கப்பட்ட வதிவற்றோருக்கான பன்னாட்டு முறிகளின் அட்டுறு வட்டி ஐ.அ.டொலர் 6 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆண்டு முழுவதும் அதன் வர்த்தக கொடுகடன் பொறுப்புக்களைத் தொடர்ந்தும் மீள்கொடுப்பனவு செய்தமையினால் வர்த்தக கொடுகடன்களும் முற்பணங்களும் கணிசமான வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தவேளையில், ஆண்டுப்பகுதியில் புதிய வர்த்தக கொடுகடன் வசதிகளைப் பெறமுடியாமல் போயிற்று. வங்கித்தொழில் துறையில் வெளிநாட்டுக் கடன் வெளிப்படுத்துகைகள் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு ஒரு சில புதிய வெளிநாட்டுக் கடன்பாடுகள் காரணமாக அமைந்தவேளையில், ஏற்கனவேயுள்ள கடன்பாடுகள், குறிப்பாக, 2022இன் பிற்பகுதியில் வங்கித்தொழில் முறைமையிலுள்ள அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் மூலமாகத் தொடர்ந்தும் செலுத்தப்பட்டன. அதேவேளை, இலங்கை மத்திய வங்கி 2015-2019 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட வசதி ஏற்பாட்டைத் தொடர்ந்தும் மீளச்செலுத்தியவேளையில், அரசாங்கம், படுகடன் ஸ்தம்பித நிலைக்கு உட்படாத ஏனைய பல்புடை நிறுவனங்களிடமிருந்து பெற்ற வெளிநாட்டுக் கடன்களைத் தொடர்ச்சியாக செலுத்தியது. கம்பனித் துறைகளுக்கான கடன்பாடுகளும் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டுப்பகுதியில் இத்துறைகளுக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கத்தக்கவையாகவே இருந்தன.

5

**நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2022இல் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2021இன் ஐ.அ.டொலர் 2,113 மில்லியன் கொண்ட தேறிய வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 84 மில்லியன் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து படுகடன் இடைநிறுத்தப்படுவதற்கு முன்னரான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் குறிப்பிடத்தக்க சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கு மத்தியில் அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிகளுக்கு வசதியளிப்பதற்காக வங்கித்தொழில் முறைமைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை வழங்க வேண்டிய தேவை என்பனவற்றின் முக்கிய காரணமாக ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1,234 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. எனினும், வங்கித்தொழில் முறைமையிலுள்ள வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் ஏற்பட்ட ஓரளவு அதிகரிப்புடன் வங்கித்தொழில் துறையில் நாணயம் மற்றும் வைப்புக்களின் நியதிகளில் சொத்துக்களின் தேறிய கையேற்பும் பெறத்தக்க ஏனைய கணக்குகளும், குறிப்பாக 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அதிகரித்தது. வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் அதிகரிப்புடன் இலங்கை ஏற்றுமதியாளர்களினால் வதிவற்றவர்களுக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் அதிகரித்தன.

## 5.5 திரண்ட நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்ற சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2022ஆம் ஆண்டில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது.** நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் மிதமடைந்தமை, அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதற்கு முன்னதாக செய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் ஆண்டுப்பகுதியில் முக்கியமாக அத்தியாவசிய இறக்குமதிகளின் இறக்குமதிக்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு மத்திய வங்கியினால் செய்யப்பட்ட தேறிய விற்பனைகள் என்பனவற்றின் காரணமாக 2022இல் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. ஆண்டுப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், இந்திய றிசேர்வ் வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதிகள் பெறப்பட்டமை அதேபோன்று ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களின் ஒன்றுசேர்ந்த தொகை ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,492 மில்லியனாக விளங்கியமை என்பனவற்றுடன் ஒதுக்கு தொடர்பான பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக, 2022 இறுதியளவில் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் கணிசமான பற்றாக்குறையினைப் பதிவுசெய்ததன் மூலம் 2021இன் ஐ.அ.டொலர் 3,967 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 2,806 மில்லியன் கொண்ட திரண்ட நிலுவைப் பற்றாக்குறையினைத் தோற்றுவித்தது.

## 5.6 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**இலங்கையின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமை வீழ்ச்சியடைந்த வேளையில் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2021 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் அதே மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது.** நாட்டின் வெளிநாட்டுப் பொறுப்பு நிலைமை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 63,967 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 58,862 மில்லியனாகக் காணப்பட்டது. மொத்தப் பொறுப்பு

நிலைமையில் ஏற்பட்ட வீழ்ச்சியே அரசாங்கத்தின் வசமிருந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியடைந்தமைக்கு காரணமாகும். அதேவேளை, நாட்டின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 8,830 மில்லியனாக விளங்கி, ஒப்பிடுகையில் 2021 இறுதியில் காணப்பட்ட அதே மட்டத்தில் காணப்பட்டது. ஒதுக்குச் சொத்து நிலைமை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தவேளையில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்து மொத்தச் சொத்து நிலைமையினை ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ அதேமட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட வழிவகுத்தது. இதன் விளைவாக, பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 55,210 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 50,032 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் வதிவற்றவர்களுடனான இலங்கையின் வெளிநாட்டு சொத்து நிலைமை அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது.** மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 3,139 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 1,898 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.[2] எனினும், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் சொத்து நிலைமையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டதுடன் நாணயம் மற்றும் வைப்பு நிலைமைகள் மற்றும் பெறத்தக்க ஏனைய கணக்குகளின் நிலைமை 2022 இறுதிப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பின் முக்கிய காரணமாக ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2022 இறுதியிலுள்ளவாறு வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமை 2021 இறுதியில் அவதானிக்கப்பட்ட நிலைமையிலிருந்து அதிகரித்தமைக்கு ஆண்டுப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய வர்த்தகக் கொடுகடன் முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மேலும், வெளிநாட்டு நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை ஆண்டுப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

**வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமை ஆண்டுப்பகுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது.** இவ்வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாக, சந்தைப் பெறுமதி நியதிகளில் பன்னாட்டு முதலீட்டு நிலைமையினைப் பிரதிபலிக்கின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற நிலைமை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 6,233 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 3,315 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமை விளங்கியது. எனினும், வதிவற்றவர்களினால் வைத்திருக்கப்படும் முகப்புப் பெறுமதி நியதிகளில், வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் நிலைமை 2021 இறுதியின் ஐ.அ.டொலர் 11,191 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 10,800 மில்லியனாக விளங்கியது. 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அரசாங்கத்தின் குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக வெளிவந்த அறிவித்தலுடன் இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறியின் சந்தைப் பெறுமதி கணிசமாக வீழ்ச்சியடைந்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையான நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக 2021இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டிய நேரடி முதலீடுகளின் வெளிநின்ற பொறுப்பு நிலைமையானது, 2022இல் வீழ்ச்சியடைந்த பகிரங்கமாக பட்டியலிடப்பட்டக் கம்பனிகளின் சந்தை விலைகளின் காரணமாக குறிப்பிடத்தக்க குறைப்பை பதிவுசெய்தது. இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதி பெறப்பட்டமையுடன் மத்திய வங்கியின் வெளிநின்ற நாணய மற்றும் வைப்பு பொறுப்பு நிலைமை அதிகரித்தது. மேலும், 2023இல் தீர்ப்பனவு செய்யப்படக்கூடிய ஐ.அ.டொலர் 200 மில்லியன் பரஸ்பர பரிமாற்றல் வசதியினை முன்னெடுப்பதற்கு மத்திய வங்கியும் வங்களாதேச வங்கியும் உடன்பட்டன. அதேவேளை, ஆண்டுப்பகுதியில் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமையில் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது. மேலும், வங்கிகள் அவற்றின் வெளிநாட்டுப் பொறுப்பு வெளிப்படுத்துகையினை, குறிப்பாக, ஆண்டின் பிற்பகுதியில் தொடர்ந்தும் குறைத்தமையினால், வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. இந்தியாவிடமிருந்து தொடர் கொடுகடன்கள் வடிவில் அவசரகால மனிதாபிமான உதவிகள் கணிசமானளவில் கிடைத்தமையின் காரணமாக, படுகடன்கள் நிறுத்தி வைக்கப்பட்டமை தொடர்பாக அறிவித்திருந்தபோதிலும் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை அதிகரித்தது. மேலும், ஆண்டுக் காலப்பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தீர்ப்பனவு பிற்போடப்பட்டமையின் காரணமாக மத்திய வங்கியின் கொடுபடத்தக்க ஏனைய கணக்குகளாகக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. அதேவேளை, மத்திய வங்கி 2015-2019 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு தொடர்பான வெளிநின்ற பொறுப்புக்களைத் தொடர்ந்தும் மீளச்செலுத்தியது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் நீங்கலாக தனியார் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுக்

2 ஒதுக்குச் சொத்து நிலைமையின் விரிவான கலந்துரையாடல் பிரிவு 5.6.1 இல் வழங்கப்பட்டுள்ளது.

5

அட்டவணை 5.10
பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2021 (அ) | | 2022 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **1,522** | **16,384** | **1,534** | **13,877** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | 1,482 | 11,050 | 1,489 | 7,933 |
| படுகடன் கருவிகள் | 40 | 5,334 | 45 | 5,944 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **...** | **7,502** | **...** | **5,285** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | | 1,142 | | 1,251 |
| ஏனைய துறைகள் | | 1,142 | | 1,251 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | ... | 6,360 | ... | 4,035 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | ... | - | ... | - |
| நீண்டகாலம் | ... | - | ... | - |
| பொது அரசாங்கம் | | 6,266 | | 3,957 |
| குறுங்காலம் | | 1 | | 31 |
| நீண்டகாலம் | | 6,265 | ... | 3,926 |
| ஏனைய துறைகள் | | 94 | | 78 |
| நீண்ட காலம் | | 94 | | 78 |
| **நிதியியல் பெறுதிகள்** | - | - | - | - |
| **ஏனைய முதலீடு** | **4,096** | **40,081** | **5,399** | **39,700** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **1,142** | **5,749** | **1,656** | **5,880** |
| மத்திய வங்கி | | 1,775 | | 2,037 |
| குறுங்காலம் | | 1 | | 1 |
| நீண்ட காலம் | | 1,774 | | 2,036 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,142 | 3,974 | 1,656 | 3,843 |
| குறுங்காலம் | 878 | 3,974 | 1,483 | 3,843 |
| நீண்ட காலம் | 264 | | 173 | |
| **கடன்கள்** | | **30,565** | | **29,508** |
| மத்திய வங்கி | | 1,265 | | 1,062 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 1,265 | | 1,062 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 3,172 | | 1,527 |
| குறுங்காலம் | | 2,005 | | 704 |
| நீண்ட காலம் | | 1,167 | | 823 |
| பொது அரசாங்கம் | | 21,289 | | 23,562 |
| நீண்ட காலம் | | 21,289 | | 23,562 |
| ஏனைய துறைகள் (உ) | | 4,838 | | 3,357 |
| நீண்ட காலம் | | 4,838 | | 3,357 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **1,211** | **1,915** | **1,493** | **1,020** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 98 | | 70 | |
| குறுங்காலம் | 98 | | 70 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 1,113 | 1,915 | 1,423 | 1,020 |
| குறுங்காலம் | 1,113 | 1,915 | 1,423 | 1,020 |
| **ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்** | **1,744** | **523** | **2,250** | **2,028** |
| மத்திய வங்கி (எ) | | 523 | | 2,028 |
| குறுங்காலம் | | 523 | | 2,028 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,744 | | 2,250 | |
| குறுங்காலம் | 1,744 | | 2,250 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **1,330** | | **1,265** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **3,139** | | **1,898** | |
| நாணய தங்கம் | 175 | | 28 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 124 | | 2 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 67 | | 4 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 2,773 | | 1,864 | |
| நாணயமும் வைப்புக்களும் | 2,729 | | 1,834 | |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | 899 | | 373 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | 1,830 | | 1,462 | |
| பிணையங்கள் | 44 | | 30 | |
| படுகடன் பிணையங்கள் | 44 | | 30 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **8,758** | **63,967** | **8,830** | **58,862** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-55,210** | | **-50,032** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுநி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 8,758 | 63,967 | 8,830 | 58,862 |
| குறுங்காலம் | 6,804 | 9,560 | 7,091 | 8,877 |
| நீண்ட காலம் | 1,954 | 54,407 | 1,739 | 49,985 |

(அ) திருத்தப்பட்டது
*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.
(ஈ) உள்நாட்டு நாணய வழங்கல்கள் ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வழங்கல்கள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
(உ) அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.
(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.
(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற மீதி

கடன் பொறுப்பு நிலைமை ஆண்டுப்பகுதியில் அதே மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பொறுப்புக்களினது நியதிகளில், அமைச்சரவை இதுவரை காலமும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை மற்றும் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் “ஏனைய துறைகளின்” கீழ் “அரசாங்கத்தின்” வெளிநாட்டுப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களை மீள்வகைப்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்கியது. இதற்கமைய, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்கள் 2021 இறுதியில் “ஏனைய துறைகள்” இன் கீழ் பிரதிபலிக்கப்பட்டதுடன் 2022 இறுதியில் “அரசாங்கத்தின்” கீழ் உள்ளடக்கப்பட்டது.[3]

## 5.6.1 ஒதுக்குச் சொத்து நிலைமை

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2021 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,139 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 1,898 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.** 2021 மற்றும் 2022 இறுதியில் குறுக்கு நாணய அசைவுகளின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் நியதிகளில் முறையே ஐ.அ.டொலர் 1,574 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 1,433 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்ட சீன மக்கள் வங்கியிடமிருந்தான பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியை உள்ளடக்கியிருந்தன. இப்பரஸ்பர பரிமாற்றல் வசதி, 2022இல் பூர்த்தி செய்யமுடியாத நிபந்தனைகளுக்குட்பட்டிருந்தமையினால் ஆண்டுப்பகுதியில் இதனை அடைந்து கொள்ள முடியாமல் இருந்தது. 2022ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்ற அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு முன்னதாக 2022இன் தொடக்கப்பகுதியில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையினை வழங்கியதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு என்பனவற்றின் இணைந்த விளைவாகும். இந்நேரகாலத்துடனான படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை முக்கியமாக 2022 சனவரியில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவினை உள்ளடக்கியிருந்தது. ஐ.அ.டொலர் 2,716 மில்லியனுக்கும் மேற்பட்ட அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்ததன் மூலமாக

3 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஐ.அ.டொலர் 1,427 மில்லியன் 2022 இறுதியிலுள்ளவாறு அரசாங்கப் பொறுப்புக்களாக மீள்வகைப்படுத்தப்பட்டன.

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டமையானது ஆண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் வீழ்ச்சியடையப் பங்களித்தது. அதேவேளை, இதில், இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்தான பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதி, வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் செலுத்தப்படாது காணப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டிருந்த உட்பாய்ச்சல்கள், மனிதாபிமானடிப்படையில் இந்தியாவிலிருந்தான அவசரகால கொடுகடன் தொடர்கள், மற்றும் பல்புடை நிறுவனங்களிலிருந்தான செயற்றிட்டக் கடன்கள் மற்றும் அவசரகால உதவிகள் தவிர, 2022இல் மிதமான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மட்டுமே காணப்பட்டன. இதன் விளைவாக, 2022 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம், 2021 இல் 1.8 மாத வணிகப்பொருள் இறக்குமதிகளுக்குப் போதுமானதாக இருந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1.2 மாதங்களுக்குப் போதுமானதாகக் காணப்பட்டது.

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நிதியிடல் மூலங்களைப் போதிமானளவிற்கு அணுகமுடியாமல் போனமை என்பனவற்றின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் தொடர்ந்தும் நெருக்கடியான மட்டங்களில் காணப்பட்டது.** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்களவு பற்றாக்குறை, வெளிநாட்டு நிதியிடல் மூலங்களை போதுமானளவில் அணுகமுடியாமை, மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் நெருக்கடி மிகுந்த குறைந்த மட்டம் என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுத் துறை குறிப்பிடத்தக்களவு அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்தது. இப்பின்னணியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளைப் படிப்படியாக கட்டியெழுப்புவதற்காக, மத்திய வங்கி, மாற்றப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்து ஒரு பகுதியை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு விற்பனை செய்ய வேண்டுமென்ற தேவைப்பாட்டினையும் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கட்டாயமாக மாற்ற வேண்டும் என்ற தேவைப்பாட்டினையும் 2022இல் தொடர்ந்தும் பேணியது. மேலும், விசேடமாக எரிபொருள் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளுக்கான நிதியிடலுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் எரிபொருள் மற்றும் நிலக்கரி நிதியத்தினை நிறுவியதன் மூலம் 2022இல் மத்திய வங்கி தற்காலிக அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியினை வங்கி முறைமையிலிருந்து ஈர்த்துக் கொண்டது. இதற்கமைய, மத்திய வங்கி, எரிபொருள், நிலக்கரி, திரவப் பெற்றோலிய வாயு, மருந்து, மற்றும் அத்தியாவசிய உணவு போன்ற அத்தியாவசிய இறக்குமதிகளின் இறக்குமதிக்கு பிரதானமாக வசதியளிப்பதற்காக மத்திய வங்கி ஐ.அ.டொலர் 2,716 மில்லியனை நிரம்பல் செய்தது. இது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் மத்திய வங்கிக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டாய விற்பனையூடாக தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும்

அட்டவணை 5.11
இலங்கை மத்திய வங்கி தலையீடு, வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக் கொடுப்பனவு மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2021 | 2022(அ) |
|---|---|---|
| **இலங்கை மத்திய வங்கி உள்ளீர்ப்பு** | **506** | **2,148** |
| தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு | 213 | 550 |
| ஏற்றுமதிகளின் பெறுகைகளுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு | 214 | 1,184 |
| சந்தையுடன் தொடர்புடைய உள்ளீர்ப்பு | 79 | 68 |
| எரிபொருள் பட்டியல்களுக்கு நிதியிடல் | - | 68 |
| நிலக்கரி பட்டியல்களுக்கு நிதியிடல் | - | 278 |
| **இலங்கை மத்திய வங்கி நிரம்பல்** | **1,253** | **2,716** |
| **தேறிய உள்ளீர்ப்பு** | **-747** | **-568** |
| **வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பணவுகள் (வட்டி + மூலதனம்)** | 6,836 | 3,237 |
| அரசாங்கம் (ஆ) | 6,354 | 3,077 |
| மத்திய வங்கி | 481 | 160 |
| **மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள்** | **3,139** | **1,898** |

(அ) தற்காலிகமானது
(ஆ) வதிவுள்ளோர் மற்றும் வதிவற்றோர்களுக்கான வெளிநாட்டு நாணய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதிப் பெறுகைகளின் பேரில் மாற்றல் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி, அதேபோன்று எரிபொருள் மற்றும் நிலக்கரி நிதியத்திற்காக ஈர்த்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி என்பனவற்றை பயன்படுத்துவதன் மூலம் பூர்த்திசெய்யப்பட்டது. இவ்வழிமுறைகள், 2022இல் குறிப்பிட்ட நிரப்பு நிதிகள் இல்லாதபோதும் கூட, நாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவி, அதன் மூலம் சென்மதி நிலுவை நெருக்கடியின் பாதகமான விளைவை குறிப்படத்தக்களவிற்கு குறைத்தது. மேலும், மத்திய வங்கி 2022 ஏப்பிறலில் படுகடன் இடைநிறுத்தப்படுவது பற்றிய அறிவித்தலுக்கு மத்தியில் 2022இல் கௌரவிக்கப்பட்ட பல்புடை முகவர்களுக்கான வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் உட்பட, ஐ.அ.டொலர் 3,237 மில்லியன் கொண்ட தொகையினை வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவிற்காகத் தொடர்ந்தும் வழங்கியமையானது 2022இல் மொத்த அலுவல்சார் ஒதுக்கிலிருந்தான குறிப்பிடத்தக்க வெளியேற்றமொன்றை தோற்றுவித்தது.

**வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில், மொத்த பன்னாட்டு ஒதுக்கு நிலைமை 2022ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.** குறிப்பாக, 2022இன் பிற்பகுதியில் வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணயம் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டதால் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2021 இறுதியில் ஐ.அ.டொலர் 2,719 மில்லியனிலிருந்து 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 3,803 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டு சொத்து உடமைகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தபோதிலும் அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்

5


இரண்டினையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2022இல் வீழ்ச்சியுற்றன. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2021 இறுதியின் 3.6 மாத இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 3.9 மாத வணிகப்பொருள் இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டன.

## 5.7 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுகள்

### 5.7.1 வெளிநாட்டுப் படுகடன்

**அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு குறைப்பின் முக்கிய காரணமாக 2022 இறுதியளவில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் குறைவடைந்தது.** நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2021 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 51,775 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் ஐ.அ.டொலர் 49,678 மில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த போதும், சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிநின்ற பெறுமதியில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் தொடர்ந்தும் அதே மட்டத்தில் காணப்பட்டது. பல்புடை கடன்வழங்குநர்களுக்குச் சேரவேண்டிய கடன்கள் தவிர, அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு வெளிநாட்டு கடன் மீள்கொடுப்பனவுகள் குறைவடைந்தமையினால் ஓரளவு ஓய்வு கிடைத்தபோதிலும், அரசாங்கம் இருபுடை கடன்கள் வடிவில் இந்தியாடமிருந்து எரிபொருள், மருந்து மற்றும் வளமாக்கி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்காக அவசரகால கொடுகடன் வசதிகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டமை, 2022இல் வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையினால்

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.12
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

ஐ.அ.டொலர் மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| விடயம் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022(அ) |
|---|---|---|---|---|---|
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 817 | 386 | 155 | 177 | 39 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 6,102 | 7,256 | 5,510 | 2,962 | 1,858 |
| **3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2)** | **6,919** | **7,642** | **5,664** | **3,139** | **1,898** |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் | 2,664 | 2,760 | 2,856 | 2,983 | 3,976 |
| **5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ)** | **9,583** | **10,402** | **8,521** | **6,122** | **5,874** |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 1,425 | 1,771 | 2,121 | 3,562 | 5,127 |
| **7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6)** | **5,495** | **5,871** | **3,543** | **-423** | **-3,229** |
| **8. திரண்ட நிலுவை (ஈ)** | **-1,103** | **377** | **-2,328** | **-3,967** | **-2,806** |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி: | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 3.7 | 4.6 | 4.2 | 1.8 | 1.2 |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 3.1 | 3.7 | 3.7 | 1.8 | 1.2 |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி: | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.2 | 6.3 | 6.4 | 3.6 | 3.9 |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.3 | 5.1 | 5.6 | 3.4 | 3.7 |


(அ) தற்காலிகமானது
(ஆ) 'வெளிநாட்டு நேரடி முதலீடு' மற்றும் 'வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்' வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நிலுவையிலுள்ள செயற்றிட்டக் கடன்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிக் கூப்பன் கொடுப்பனவுகள் என்பனவற்றின் அட்டுறு வட்டிகள், அவற்றிற்குரிய படுகடன் சாதனங்களின் வெளிநின்ற படுகடனில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.[4] படுகடன் இடைநிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அரசாங்கத்தின் வர்த்தகக் கடன்பாடுகள் குறைவடைந்தபோதிலும், இது வெளிநின்ற அரச வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களில் மேலும் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. நாணயம் மற்றும் வைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்து பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் வசதியின் பெறுகை மற்றும் "ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள்" இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஒன்றுசேர்ந்த பொறுப்புக்கள் என்பனவற்றுடன் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. வர்த்தக வங்கிகள் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் தமது வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புகள் என்பனவற்றின் வெளிப்படுத்துகைகளைக் குறைத்துக் கொண்டமையுடன் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. படுகடன் தீர்ப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டமையினையடுத்து நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையுடன் வர்த்தக வங்கிகள் கொடுகடன் வசதிகளை அணுகமுடியாமல் போனவேளையில், ஏற்கனவே

4 வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் என்பவற்றில் பிரதிபலிக்கப்பட்டவாறு மூலதன மீள்கொடுப்பனவின்மை அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் பொறுப்புக்கூறல் மாற்றத்தை தோற்றுவிக்காது.

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடனின் துறைவாரியான கட்டமைப்பு



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இருந்த படுகடன் பொறுப்புக்களை அவை தொடர்ந்தும் மீளச் செலுத்தியமை வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் படுகடன் குறைவடையப் பங்களித்தது. இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வர்த்தக கொடுகடன்கள் நியதிகளில் வெளிநின்ற பொறுப்புக்கள் குறைவடைந்ததன் முக்கிய பெறுபேறாக, தனியார் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் குறைவடைந்தது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் விதந்துரைப்புடன் அத்தகைய கடன்களை மீள்வகைப்படுத்துவதென்ற அமைச்சரவையின் தீர்மானத்திற்கிணங்க, அமைச்சரவையின் ஒப்புதலுடன் 2022 இறுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பலவற்றினதும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்கள் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்களாக மீளவகைப்படுத்தப்பட்டன. இக்கடன்கள் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம், மத்தள அம்பாந்தோட்டை சர்வதேச விமானநிலையச் செயற்றிட்டம் மற்றும் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டம் என்பனவற்றுடன் தொடர்பான கடன்களை உள்ளடக்கியதுடன் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களின் "ஏனைய துறை" இன் கீழான வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் குறிப்பிடத்தக்க குறைப்பினைத் தோற்றுவித்தது. மேலும், சிறிலங்கன் எயார்லையின்ஸ்சினால் வழங்கப்பட்ட பன்னாட்டுப் படுகடன் பிணையின் மீளச்செலுத்தப்படாத கூப்பன் கொடுப்பனவொன்றுடனும் அட்டுறு வட்டி சேர்க்கப்பட்டது. அதேவேளை, நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ஆண்டுப்பகுதியில் அதிகரித்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2021 இறுதியில் 58.5 சதவீதத்திலிருந்து 2022 இறுதியில் 64.5 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு, ஆண்டுப்பகுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனின் பெயரளவு பெறுமதி குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தபோதிலும் ஐ.அ.டொலர் நியதிகளில் தெரிவிக்கப்பட்ட பெயரளவு மொ.உ.உற்பத்தி குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமையே முக்கிய காரணமாகும். மேலும், மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலைமையில் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நிலைமை 2021 இறுதியின் 53.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 55.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. படுகடன் முதிர்ச்சித் தோற்றப்பாட்டு நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடனின் சதவீதமாக நீண்ட காலப் படுகடன் 2021 இறுதியின் 83.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022 இறுதியில் 84.6 சதவீதமாகக் காணப்பட்டது.

## 5.7.2 வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**நிலுவைகள் நீங்கலாக, 2022இல் மூலதனம் மற்றும் வட்டியின் உண்மையான படுகடன் மீள்கொடுப்பனவுகளின் நியதிகளில் தொகுக்கப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவுகள், 2022 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து**

அட்டவணை 5.13 (அ)
வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2021(அ) | 2022(ஆ) |
|---|---|---|
| **பொது அரசாங்கம்** | **27,556** | **27,518** |
| **குறுங்காலம்** | **1** | **31** |
| படுகடன் பிணையங்கள் | 1 | 31 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 1 | 31 |
| **நீண்ட காலம்** | **27,555** | **27,488** |
| படுகடன் பிணையங்கள் | 6,265 | 3,926 |
| திறைசேரி முறிகள் (இ) | 8 | 34 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 24 | 27 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 6,233 | 3,866 |
| சந்தைப் பெறுமதி | | 3,315 |
| அட்டுறு வட்டி | | 551 |
| கடன்கள் | 21,289 | 23,562 |
| வெளிநின்ற வெளிநாட்டு படுகடன்கள் | | 23,413 |
| அரசாங்க வெளிநாட்டு படுகடன்களின் அட்டுறு வட்டி | | 149 |
| **மத்திய வங்கி** | **4,892** | **6,391** |
| **குறுங்காலம்** | **526** | **2,029** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 3 | 15 |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | 523 | 2,014 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 523 | 2,014 |
| **நீண்ட காலம்** | **4,367** | **4,362** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 1,330 | 1,265 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | 1,774 | 2,036 |
| இந்திய றிசேர்வ் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | | 400 |
| பங்களாதேச வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 200 | 200 |
| சீன மக்கள் வங்கி பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடு | 1,574 | 1,433 |
| பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதான அட்டுறு வட்டி | | 3 |
| கடன்கள் | 1,263 | 1,062 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 1,263 | 1,062 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் அவசர உதவி | 1,263 | 1,062 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **7,146** | **5,370** |
| **குறுங்காலம்** | **5,979** | **4,547** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 3,974 | 3,843 |
| வர்த்தக வங்கிகள் | 3,974 | 3,843 |
| கடன்கள் | 2,005 | 704 |
| வர்த்தக வங்கிகள் | 2,005 | 704 |
| **நீண்ட காலம்** | **1,167** | **823** |
| கடன்கள் | 1,167 | 823 |
| வர்த்தக வங்கிகள் | 1,084 | 823 |
| ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 83 | - |

**பக்கம் 204 இல் தொடர்கிறது**

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) ஏட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) தனியாள் வெளிநாட்டு நாணயக்கணக்கு வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

5

## சிறப்புக்குறிப்பு 8
## வெளிநாட்டுத் துறை மீதியை வலுப்படுத்துவதற்கான பிந்தைய படுகடன் மறுசீரமைப்பு கொள்கை முன்னுரிமைகள்

### அறிமுகம்

இரட்டைப் பற்றாக்குறை நிலைமை எனப் பிரபல்யமாகக் குறிப்பிடப்படும், நாட்டினுடைய இயலாற்றலுக்கு மேலாகவும் அதிகமாகவும் மிதமிஞ்சிய செலவழிப்பினால் ஏற்படும் சமமின்மைகளிலிருந்து வெளிப்படுகின்ற, அரசாங்க வரவுசெலவுத் திட்டத்திலும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலும் ஒரே நேரத்தில் காணப்பட்ட பற்றாக்குறைகள், பல ஆண்டுகளாக, இலங்கையில் முக்கிய அமைப்பியல் சார்ந்த தடையாகவும் பேரண்டபொருளாதாரப் பாதிப்புக்கான முக்கிய மூலமாகவும் காணப்படுகின்றன. வணிக வர்த்தகக் கணக்கிலும் முதலாந்தர வருமானக் கணக்கிலும் ஏற்பட்ட பாரியளவிலான பற்றாக்குறைகளினால் முக்கியமாகத் தூண்டப்பட்டு, இலங்கை பல ஆண்டுகளாக தொடர்ச்சியான வெளிநாட்டு நடைமுறை கணக்குப் பற்றாக்குறைகளை அனுபவித்து வருகின்றது. பணிகள் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு (முக்கியமாக தொழிலாளர் பணவனுப்பல்கள்) ஆகியன மிகைகளைப் பதிவுசெய்திருந்தபோதிலும், நடைமுறைக் கணக்கில் வணிகப்பொருட்களின் வர்த்தக மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குகள் என்பனவற்றில் எப்போதுமுள்ள விரிவடைந்த பற்றாக்குறைகளின் தாக்கத்தைப் பாதுகாப்பதற்கு இத்தகைய மிகைகள் போதியளவானதாக காணப்படவில்லை. மேலும், அமைப்பியல்சார்ந்த மற்றும் கொள்கைத் தடைகள் காரணமாக போருக்குப் பிந்தைய பொருளாதார காலப்பகுதியிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களளவிற்கு இலங்கை வெளிநாட்டு நேரடி முதலீடுகள் போன்ற படுகடனல்லாத வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களை கவர்வதற்கு தவறிவிட்டது. மேலும், கடந்த தசாப்த காலப்பகுதியில், நாட்டின் அதிகரித்துவரும் வெளிநாட்டுப் படுகடன் மற்றும் அதன்விளைவாக ஏற்பட்ட பாரியளவான படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் போன்றன வெளிநாட்டுத் துறை சமமின்மைகளை மோசமாக்குகின்ற படுகடன் உறுதிப்பாட்டு கரிசனைகளுக்கு முக்கியமாகப் பங்களித்தன. வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட அமைப்பியல்சார் பலவீனங்களுக்கு மத்தியில், இறைத் துறை மீதான செயற்றிறனற்ற விரைவானதுமான கொள்கை மாற்றங்கள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவல் மற்றும் தொடர்புடைய நிச்சயமற்றத்தன்மைகள் என்பன அதன் பேரண்டபொருளாதாரப் பலவீனங்களைத் தீவிரப்படுத்தி தொடர்ச்சியான பேரழிவுகளுக்கு வழிவகுத்தன. 2022 ஏப்பிறலில் திரவ இருப்புக்கள் ஏறத்தாழ பூச்சிய மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தமை மற்றும் 2022 மாச்சு தொடக்கத்தில் செலாவணி வீதம் பாரிய மிகைப்படுத்தலுக்குட்பட்டமை என்பனவற்றுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வரலாற்றில் குறைந்தளவிற்கு வீழ்ச்சியடைந்திருந்தன. இப்பின்னணியில், பன்னாட்டு நாணய நிதியத்துடனான நிதியளித்தல் ஏற்பாட்டிற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கிய அதேவேளை, படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறை நிலுவையிலுள்ள நிலையில், 2022 ஏப்பிறலில் அரசாங்கம் இடைக்காலப்பகுதியொன்றுக்கு படுகடன் ஸ்தம்பிதமொன்றை அறிவித்திருந்தது. இலங்கையின் படுகடன் நிலையற்றது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியிடல் வசதி ஏற்பாட்டின் வெற்றியானது தற்போதுள்ள படுகடன் மறுசீரமைப்பின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது. படுகடன் மறுசீரமைப்பு எல்லைகள் இலங்கையின் அலுவல்சார் மற்றும் தனியார் கடன்கொடுநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் சிறிய அளவிலான நீடிக்கப்பட்ட முதிர்ச்சிகளுடன் நாடு படுகடன் தீர்ப்பனவை மீளவும் தொடங்கும். இம்முதல் படுகடன் மறுசீரமைப்பு முயற்சியானது கடந்தகால தவறுகளை சரிசெய்வதற்கும் சில நாடுகள் அனுபவித்தது போல, நாடு மீண்டும் கடன் மறுசீரமைப்பு நிகழ்விலிருந்து பாதிப்படையாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு எதிர்கால நடவடிக்கைகளைத் தீர்க்கமாக திட்டமிடுவதற்கும் நீடித்த வாய்ப்பை வழங்கும். கடன் மறுசீரமைப்பு செயன்முறை மாத்திரமன்றி, மறுசீரமைப்பிற்குப் பிந்தைய பொருளாதாரத்தில் முன்னோக்கிசெல்லும் வழியும் நன்கு திட்டமிடப்பட்டு, நாட்டின் இறை மற்றும் வெளிவாரி நிலைமைகளை வலுப்படுத்தவும் எதிர்வரும் காலத்தில் மீளெழுச்சியைக் கட்டியெழுப்பவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற உண்மையை இது வலியுறுத்துகின்றது.

### படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைமைகளிலுள்ள சவால்கள்

1950 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில், 95 உலகளாவிய நாடுகளின் ஈடுபாட்டுடன் ஏறத்தாழ 600 நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன (Das, Papaioannou & Trebesch, 2012). பொதுவாக, வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து, நாடு படுகடனை நீடித்து முன்னோக்கி செல்லும் என்பதுடன் படிப்படியாக மீட்டெடுக்க முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறெனினும், படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்கு பின்னர் அனைத்து நாடுகளுக்கும் தமது படுகடனை நிலையாக முகாமைச் செய்வதற்கு இயலுமாகவிருக்கவில்லை என்பதுடன் மேலும் செலுத்தத் தவறுதல்களைத் தொடர்ந்தும் பதிவுசெய்துகொண்டிருந்தன. சில நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் தமது ஆற்றல்வாய்ந்த மட்டத்தை அடைவதற்கு தவறியதற்கும் படுகடன் மறுசீரமைப்பினூடாக வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. **சாதகமற்ற பொருளாதார நிலைமைகள்:** மீள் கட்டமைப்பு கட்டக் காலப்பகுதியில் நாட்டின் வெளிநாட்டுச் சூழல் மற்றும் பரந்தளவிலானப் பொருளாதார நிலைமைகள் என்பன படுகடன் மறுசீரமைப்பின் பெறுபேற்றை நிர்ணயிப்பதில் ஏதுவாக இருக்கக்கூடும். உதாரணமாக, உலகளாவிய பொருளாதாரம் மெதுவடையுமாயின் அல்லது முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் பொருளாதாரச் சுருக்கமொன்றை அனுபவிக்கின்றார்களாயின், நாடானது அதன் வளர்ச்சியின் ஆற்றல்வாய்ந்த மட்டத்தையும் சென்மதி நிலுவையின் உறுதிப்பாட்டையும் அடைவதற்கு சிரமத்தை எதிர்கொள்ளும். இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில், 2023இல் உலகளாவிய பொருளாதார அழுத்தங்கள் அதிகரிக்கலாம் என்பதற்கான சமிஞ்சைகள் காணப்படுகின்றமையானது இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பிற்கு பிந்தைய மீட்சியை சவாலுக்கு இட்டுச்செல்கின்றது.

2. **நடைமுறைப்படுத்தல் சவால்கள்:** வெளிநாட்டு கடன்வழங்குநர்களின் பன்முகத்தன்மை மற்றும் அவர்களின் ஆர்வங்கள் அதேபோன்று புவிசார்அரசியல் கரிசனைகளைக் கருத்திற்கொண்டு, படுகடன் மறுசீரமைப்பின் பேச்சுவார்த்தை மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டங்கள் சிக்கல்வாய்ந்ததாக இருக்கலாம். இது, கடன்கொடுநர்களுடன் உடன்படிக்கைகளை

5

அடைவதை சவாலுக்குட்படுத்தி இதன்மூலம், நீண்ட பேச்சுவார்த்தைகள் காரணமாக ஏற்படும் தாமதங்களின் இடர்நேர்வு அதிகரிக்கின்றது. நீண்ட மறுசீரமைப்புச் செயன்முறையானது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேலும் சிதைவடையச்செய்யலாம் என்பதுடன் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டை மீண்டும் அடைவதற்கு பெரும் இக்கட்டான நிலையாக இருக்கலாம்.

3. **போதியளவற்ற கொள்கை வழிமுறைகள்:** படுகடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் மீட்சியடைவது என்பது பேரண்ட இறைச் சீர்திருத்தங்கள் மற்றும் தேவைப்படும் சீராக்கங்கள் தொடர்பிலான வலியுறுத்தலுடன் குறுகிய மற்றும் நடுத்தரகாலத்தில் நிலையான வளர்ச்சிப் பாதையை நோக்கி பொருளாதாரத்தை தூண்டுகின்ற கொள்கைக் கலவையைப் பின்பற்றுவதில் ஈடுபடுவதாகும். எனினும், கொள்கைப் பதிலிறுப்புக்கள் காத்திரமான விதத்தில் திட்டமிடப்படாவிட்டாலோ அல்லது நடைமுறைப்படுத்தபடுவதில் குறைந்தளவான ஒத்துழைப்பு காணப்படுமாயினோ, விரும்பத்தக்க பெறுபேற்றை அடையமுடியாது போகும். இலங்கையின் வெளிநாட்டுத் துறை எதிர்கொண்ட மரபுரீதியான சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, சீர்திருத்தப் பொதியானது போதியளவு மீண்டெழுதல் வேண்டும்.

4. **அரசியல் உறுதிப்பாடின்மை:** படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சியானது கடன்கொடுநர்களுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட சீர்திருத்தப் பொதியின் நடைமுறைப்படுத்தலின் வெற்றி மற்றும் அதனுடன் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளைப் பின்பற்றுவதில் தங்கியிருக்கின்றது. முக்கிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பிரபல்யமடையாதிருப்பதால், அரசாங்கங்கள் அச்சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கடுமையான அழுத்தத்திற்குட்பட்டு வாக்காளர் தொகுதிகளிலிருந்து அழுத்தத்திற்கு உட்படலாம். முதலீட்டாளர்கள், பல்புடை மற்றும் இருபுடை கடன்வழங்குநர்கள் மற்றும் கடன்கொடுநர்கள் உள்ளடங்கலாக ஆர்வலர்களுக்கு மத்தியில், அரசியல் உறுதிப்பாடானது பொருளாதாரத்தில் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவும். மேலும், அரசியல் உறுதிப்பாடின்மையானது சீரற்றத்தன்மைக்கு வழிவகுத்து நிலைபெறத்தக்க பேரண்டபொருளாதார சீராக்கங்களை அடைவதற்காக முக்கிய பின்னடைவொன்றாக இருக்கலாம். ஆகையினால், மறுசீரமைப்பிற்கு பிந்தைய பொருளாதார மீட்சி மற்றும் மீளெழுச்சி என்பன அரசியல் தீர்மானத்தின் அதேபோன்று சீர்திருத்தங்களுக்கான பொதுமக்களின் ஆதரவின் தொடர்ச்சி மீது நிபந்தனைகுட்பட்டதாக இருக்கலாம்.

5. **பலவீனமான நிறுவனங்கள்:** சட்ட விதியின் வீழ்ச்சி, வெளிப்படைத்தன்மையின்மை மற்றும் பொறுப்பின்மை மற்றும் அதிகரித்த ஊழல் போன்றவற்றுக்கு வழிவகுத்த பலவீனமான நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமற்ற சூழலொன்றை உருவாக்கலாம். அதேவேளை, கொள்கை வழிமுறைகளினதும் முதலீட்டாளர் நம்பிக்கையினதும் காத்திரமானத் தன்மையை மட்டுப்படுத்தலாம்.

இப்பின்னணயில், பொருளாதார நடவடிக்கைகள் விருத்தியடைவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் அதேவேளை, வெளிநாட்டுத் துறையில் உறுதிப்பாட்டை மீட்டெடுத்தலை இலக்காகக் கொண்டு, திடமான கொள்கைக் கட்டமைப்பொன்றை உருவாக்குவது பொருத்தமானதாக அமையும். இதற்கமைவாக, பன்னாட்டு நாணய நிதியத்தின் மூலமான மீட்டெடுப்புக்களையும் எதிர்காலத்தில் படுகடன் மறுசீரமைப்பையும் மீண்டும் அணுகுவதற்கான தேவைப்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு, கட்டமைப்பொன்றில் தேவையான அமைப்பியல்சார்ந்த சீர்திருத்தங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி படுகடன் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் கடன்கொடுநர்களால் வழங்கப்படும் கடன் சட்ட இசைவு தாமதமும் சலுகைகளும் முடிவடையும்போதும் மற்றும் படுகடன் கடப்பாடுகள் செலுத்தவேண்டிய தேவை ஏற்படும்போதும் கடன்கொடுநர்களுக்கு படுகடன் கடப்பாடுகளை மீளச்செலுத்துவதற்கு நிதியளிப்பதற்கும் அரசாங்கத்தினால் தெளிவான மூலோபாயமொன்று இணைக்கப்படவேண்டும். நாட்டின் பேரண்டபொருளாதார மீளெழுச்சியை அடைவதற்கு வெளிநாட்டுத் துறையில் நிரந்தரமான தாங்கிருப்புக்களை உருவாக்குவது இன்றியமையாததாகும். ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய கொள்கைத் தூண்டுதல் மற்றும் சீரான நடைமுறைப்படுத்தல் போன்றவற்றின் மூலமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கையும் நிதியியல் கணக்கு மீதிகளையும் வலுப்படுத்தி, வரவுசெலவுதிட்ட பற்றாக்குறைக்கும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்குமான படுகடனுக்கு நிதியளிப்பதற்கான நோக்குநிலையிலிருந்து விலகியமையின் ஒருங்கிணைந்த விளைவாக இத்தாங்கிருப்புக்கள் இருக்கலாம்.

### வெளிநாட்டு நடைமுறைக் கணக்கை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

மட்டுப்படுத்தப்பட்ட பன்முகத்தன்மை, குறைந்தளவான பெறுமதி சேர்த்தல் மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கலிகளுக்கான குறைந்தளவான ஒருங்கிணைப்பு மற்றும் வர்த்தகம் செய்யக்கூடிய துறையில் மிகைப்படுத்தப்பட்ட செலாவணி வீதத்திற்கும் போதியளவற்ற முதலீடுகளுக்கும் மத்தியில், போட்டித்தன்மையுடன் இருப்பதற்குத் தேவையான அதிநவீனத்தன்மையின்மை போன்ற மரபுரீதியான சிக்கல்கள் காரணமாக கடந்த சில தசாப்தங்களில் இலங்கையின் ஏற்றுமதிகளில் பாரிய வளர்ச்சி உந்துதலோ அல்லது ஏற்றமோ வெளிப்படவில்லை. அதேவேளை, குறிப்பாக 2011 தொடக்கம், இறக்குமதிகளின் அனைத்து வகைகளுக்குமான செலவினங்களும் விரைவாக அதிகரிக்கப்பட்டு, வர்த்தகப் பற்றாக்குறையை விரிவுப்படுத்துவதற்கு வழிவகுத்ததுடன் முக்கியமாக வெளிநாட்டுத் துறை கடன்பாடுகளூடாக நிதியளிக்கப்பட்டது. இதற்கமைவாக, ஒரேநேரத்தில் பணிகள் கணக்கில் மிகைகளை அதிகரிக்கச்செய்கின்ற அதேவேளை, வணிக எற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கான எந்தவொரு முயற்சியும் வர்த்தகப் பற்றாக்குறையை குறைப்பதற்கான மூலோபாயங்களில் கவனம்செலுத்தப்பட வேண்டும். இறக்குமதிகளைச் சிக்கனப்படுத்துவதன் மூலமான கேள்வி முகாமைத்துவ வழிமுறைகளும் இறக்குமதிப் பதிலீடு தொடர்பிலான முயற்சிகளும் பொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு அத்தகைய வழிமுறைகளின் நீண்டகாலப் பின்பற்றுதலானது பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தலாம் என்பதால் தற்காலிக அடிப்படையில் மாத்திரம் அறிமுகப்படுத்தப்படலாம். மேலும், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் புத்தாக்கத்தினூடான உற்பத்தி பன்முகத்தன்மை, செங்குத்தான மற்றும் கிடையான ஒருங்கிணைப்பு, உற்பத்தி பகிர்வு வலையமைப்பின் பங்கேற்பு, மற்றும் கூறு தயாரிப்பின்

5

மூலம் உலகளாவிய பெறுமதி சங்கலிகளுடன் இணைத்தல் அதேபோன்று புதிய சந்தைகளை ஆராய்வதன் மூலம் ஏற்றுமதி இடங்களான மரபுரீதியான சந்தைகளை அதிகளவில் தங்கியிருப்பதைக் குறைத்தல் போன்றன முக்கிய முயற்சிகளாக கருதப்படுகின்றன. குறிப்பாக, நெகிழ்வான செலாவணி வீதம், நிலையான வரி மற்றும் முதலீட்டுக் கொள்கைகள், விலை உறுதிப்பாடு, அதன்மூலம் குறைந்தளவான தளம்பல் வட்டி வீதக் கட்டமைப்பு, மற்றும் அத்தியவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவற்றைப் பேணுவதன் மூலம் ஏற்றுமதித் துறையானது தூண்டுதலளிக்கும் பேரண்டபொருளாதார கொள்கைகளினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். தேசிய நலனில் உத்தேசிக்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விரைவானதும் தடையற்றதுமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். ஏற்றுமதித் துறையில் உள்நாட்டு பெறுமதிச் சேர்த்தலை அதிகரிப்பதற்கு முக்கிய ஏற்றுமதிகளுக்குத் தேவையான இடைநிலைப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு கைத்தொழில்களை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை ஒருங்கிணைப்பினூடாக இறக்குமதிகளைக் காத்திரமான முறையில் மாற்றல்செய்தல் வேண்டும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினூடாக உருவாக்கப்படும் சமதளமானது கூடுதல் நன்மையளிக்கக்கூடியதாக விளங்கும். மேலும், புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை நோக்கி நகர்வது தொடர்பிலான முயற்சிகளும் நடுத்தர தொடக்கம் நீண்ட காலம் வரையில் புதைவடிவ எரிபொருட்களில் நாடு தங்கியிருப்பதைக் குறைத்து, இதன்மூலம் எரிபொருள் இறக்குமதிகளிலிருந்து தோன்றும் நடைமுறைக் கணக்கு மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கு உதவும்.

அதேவேளை, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையை குறைப்பதில் பணிகள் ஏற்றுமதிகள் முக்கியமானதாக விளங்குகின்றது. ஆகவே, அவற்றின் முழு ஆற்றலையும் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். பாரிய பணி ஏற்றுமதித் துறையாக விளங்கும் சுற்றுலாத் துறையானது மீளெழுச்சியைக் காண்பித்துக் கொண்டிருப்பதுடன் சுற்றுலாத் துறையில் உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெறுவதற்கு, பெறுமதிமிக்க சிறிய மற்றும் மரபுரீதியற்ற சந்தைகள் தொடர்பிலும் ஓய்வு தவிர ஏனைய வேறுபட்ட நோக்கங்களுக்காக வருகைத் தருகின்ற சுற்றுலாப் பயணிகள் தொடர்பிலும் அதிக கவனத்தை செலுத்துவதற்கு சுற்றுலாத் துறையைப் பன்முகப்படுத்துவது முக்கியமானதாகும். மேலும், குறிப்பாக, தகவல் தொழில்நுட்ப/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் துறையிலுள்ள சில பணிகள் ஏற்றுமதிகள், தேறிய வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களை நாட்டிற்கு கொண்டுவருவதற்கு கணிசமான ஆற்றலைக் கொண்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் துறைகளில் காணப்படுகின்ற வளர்ச்சி வாய்ப்புகள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைத் தொடர்ந்து, பொருளாதாரங்களின் அதிகரித்த டிஜிட்டல்மயமாக்கத்துடன் விரிவடைந்துள்ளன. ஆகையினால், இலங்கையானது தன்னை டிஜிட்டல் நாடாக மேம்படுத்துவதற்கு தேர்ச்சிப்பெற்ற தொழிற்படைகளினதும் அதிநவீன தகவல்தொழில்நுட்ப உட்கட்டமைப்பினதும் கிடைக்கும்தன்மையைப் பயன்படுத்தவேண்டும். மேலும், சந்தை கேள்விகளுக்கு இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தர தகவல்தொழில்நுட்ப கல்வித் தேவைகளுக்கு ஏற்றவாறு அணிசேரப்பட வேண்டும் என்பதுடன் இத்துறையின் விரிவாக்கத்திற்கு தேவையான மனித மூலதனத்தின் அபிவிருத்தி நிறைவுசெய்யப்பட வேண்டும். படுகடன் மறுசீரமைப்பில், முதலாந்தர வருமானப் பற்றாக்குறையும் மேம்படுமெனவும் வட்டியல்லா வருமானக் கணக்கில் மிகையை உருவாக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டு தொழில்வாய்ப்புச் சந்தையை பன்முகப்படுத்துவதற்கும், உயர்ந்தளவிலான வருவாய் சாத்தியப்பாட்டுடன் கூடிய அதிகளவிலான வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், குறைந்தளவிலான செலவு, உண்மை நேரம், மற்றும் வசதியான எல்லையைத் தாண்டிய நிதியப் பாய்ச்சல்களை வசதிப்படுத்துவதற்கான அலுவல்சார்ந்த பாய்ச்சல்களுக்கு ஊக்கமளிப்பதற்கும் தொழிலாளர் பணவனுப்பலை ஊக்குவிப்பதில் தீவிரமான ஆர்வலர் ஈடுபாடு தேவைப்படுகின்றது. கடந்தகாலங்களில் மத்திய கிழக்கு பிராந்தியத்திலிருந்து பெறப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் மூலம் இலங்கை பயனடைந்துள்ளபோதிலும், குறிப்பாக தென்கொரியா, சிங்கப்பூர், யப்பான், மற்றும் ஐரோப்பிய நாடுகள் போன்ற முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் உயர்ந்தளவான ஊதியம் பெறக்கூடிய பரந்தளவிலான தொழில்நிலையை வழங்குகின்ற மாற்றீட்டு இடங்களை அறிவது அவசியமாகும். இதன்மூலம், தொழிலாளர் பணவனுப்பல்களின் அளவு அதிகரிப்படுவதுடன் புவிசார்அரசியலின் மூலம் தூண்டப்பட்ட பணவனுப்பல் பெறுகைகளின் பாதிப்புக்களும் குறைக்கப்படுகின்றன. அதேவேளை, மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் தொழிலாளர் பணவனுப்பல்களிலும் பாதகமான தாக்கத்தையும் அதேபோன்று நீண்டகால பொருளாதாரத்தின் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்துகின்ற இலங்கையிலிருந்து நிரந்தர அடிப்படையில் தொழில்சார் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் பாரியளவிலான புலம்பெயர்வு தொடர்பிலான பிரச்சனை உடனடியாக தீர்க்கப்படவேண்டும்.

### வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள்

பரந்தளவிலான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை நிவர்த்திசெய்வதற்கான இலக்கிடப்பட்ட வழிமுறைகளுக்கு மேலதிகமாக, பாரிய வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டையும் மேம்படுத்தப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டையும் நிச்சயப்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் சொத்துப்பட்டியல் முதலீடுகளையும் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் செலுத்துவது போன்ற அதிகளவிலான படுகடனல்லா மூலதனப் பெறுகைகளை கவர்வதன் மூலமாக அவற்றுக்கு துணையளிப்பதும் அவசியமாகும். தொடர்ச்சியான வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவு தேவைப்பாடுகளுக்கும் படுகடன் மீள்கொடுப்பனவிற்கான இறை இடைவெளியின்மைக்கும் மத்தியில், வெளிநாட்டுத் துறையின் நீடித்த உறுதிப்பாட்டை உறுதிசெய்வதில், வெளிநாட்டுத் துறையின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கான படுகடனல்லா கடப்பாட்டு வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களை கவர்வது இன்றியமையாததாக அமையும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கும் உள்நாட்டு முதலீட்டை அதிகரிப்பதற்கும் அப்பால், வெளிநாட்டு நேரடி முதலீடானது தொழில்நுட்பக் கசிவுத் தாக்கங்களை உருவாக்கி, மனித மூலதன மேம்பாட்டிற்கு

ஆதரவளிப்பதுடன், வெளிநாட்டுச் சந்தைகளுக்கான மேம்பட்ட அணுகலின் மூலம் பன்னாட்டு வர்த்தக இணைப்புக்களை மேம்படுத்தி பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. குறிப்பாக ஒப்பந்த நடைமுறைப்படுத்தல், ஏற்றுமதி இறக்குமதி ஆவணப்படுத்தல், வியாபாரத் தொடக்கங்கள், சொத்து கையகப்படுத்தல் மற்றும் நன்கு மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின்மை என்பனவற்றுடன் தொடர்புடைய கடுமையான தொழிலாளர் சந்தை ஒழுங்குமுறைப்படுத்தல்கள், பயன்பாடுகளைப் பெறுவதிலுள்ள சிக்கல்கள், சிக்கலானதும் சீரற்றதுமான வரிக் கட்டமைப்புக்கள், மற்றும் கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கள் போன்ற பல்வேறு சட்ட, அமைப்பியல்சார், மற்றும் நிறுவனம்சார் குறைப்பாடுகள் காரணமாக கடந்த தசாப்த காலங்களில், இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீடானது அதன் பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இக்காரணிகளைத் தவிர, கொள்கை நிச்சயமற்ற தன்மை, நிறுவன மற்றும் நிர்வாகப் பலவீனங்கள், நாட்டில் காணப்பட்ட ஊழல் மற்றும் ஒருங்கிணைப்புத் தோல்விகள் போன்றன இலங்கையில் சாதகமான முதலீட்டுச் சூழலை உருவாக்குவதற்குத் தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்தியிருந்தன. ஆகையினால், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கு, அனைத்தையுமுள்ளடக்கிய முதலீட்டு கொள்கையொன்றை வெளிப்படுத்தி, கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மனிதத் தேர்ச்சிகளையும் நிறுவனம்சார் இயலாற்றலையும் உருவாக்குவதன் மூலம் வெளிப்படையானதும் காத்திரமானதுமான கொள்கைச் சூழலொன்றை இலங்கை நிறுவுதல் வேண்டும். வர்த்தகம் மற்றும் கைத்தொழில் கொள்கைகள் போன்ற ஏனைய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களுடன் வெளிநாட்டு முதலீட்டு கொள்கையின் இணக்கமும் அதேபோன்று இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தவதிலுள்ள முகவாராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பும் சமமாக முக்கியமான விடயங்களாக காணப்படுகின்றன. வளர்ச்சித் தூண்டுதலுக்குப் பங்களிப்பது மாத்திரமன்றி பொருளாதாரத்தின் பரந்தளவான வினைத்திறன்மிக்க இலாபங்களினூடாகவும் பேரண்டபொருளாதார ஏற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடுத்தர தொடக்கம் நீண்ட காலம் வரையில் வெளிநாட்டு நேரடி முதலீடும் அதன் மேலதிக நன்மைகளும் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவுவதற்கு ஏதுவாக அமையும். தொடர்புடைய அதிகாரசபைகளினால் இக்கரிசனைகளை சரிசெய்வதற்கு முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டங்களுக்கு திரும்புவதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளை துரிதப்படுத்துவது இன்றியமையாததாகும்.

வர்த்தகரீதியிலான செயற்றிடங்களுக்கு நிதியளிப்பதைக் கட்டுப்படுத்தி படுகடனைத் தீர்ப்பனவுசெய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்குவதற்கான ஆற்றலைக் கொண்ட வர்த்தகத் துறைகளுக்கு நிதியளிப்பதை ஊக்குவிப்பதும் அவசியமாகும். வெளிநாட்டுக் கடன்களுக்கான தெளிவானதும் வெளிப்படையானதுமான மதிப்பீடும் தெரிவுப் பொறிமுறையும் நிறுவப்பட வேண்டிய அதேவேளை, கடன்பாடுகளின் பயன்பாட்டை காத்திரமான முறையில் மேம்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்களில் ஏற்பட்ட அழுத்தங்களைக் குறைப்பதற்கு வெளிநாட்டு கடன்பாடு, அவற்றின் பயன்பாடு மற்றும் பொருளாதார தாக்கங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறுதலையும் மேம்படுத்தியது. மேலும், வெளிநாட்டு கடப்பாடுகளுடன் தொடர்புடைய உயர்ந்தளவான இடர்நேர்வு கரிசனைகளைக் குறைப்பதற்கு நாட்டிற்கான தரமிடல்களை மேம்படுத்துவதற்கான மூலோபாயமொன்றைப் பயன்படுத்துவது அவசியமாகின்றது. எவ்வாறெனினும், நாட்டிற்கான தரமிடல்கள் எதிர்வரும் காலப்பகுதியில் மேம்படுவதால், ஒட்டுமொத்தப் படுகடன் சொத்துப்பட்டியலிலுள்ள வர்த்தக ரீதியான கடப்பாடுகளின் பங்கை அதிகரிப்பதற்கான போக்கானது தடுக்கப்பட வேண்டும். வலுசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறைகளிலுள்ளவை போன்ற அத்தியாவசிய செயற்றிட்டங்களுக்கான குறைந்த செலவில் நிதியளிப்பதற்கான தெரிவுகளை ஆராய்வதற்கான வாய்ப்பு வளங்களை ஆராய்வது சாத்தியமாகும். அத்துடன் பசுமை நிதியளித்தல் தெரிவுகளைப் பயன்படுத்துகின்ற அதேவேளை உலகளாவிய ரீதியில் பரவலாகக் கிடைக்கப்பெறும் நிலையான நிதியளித்தல் தெரிவுகளினூடாக காலநிலையைத் தழுவுவது நன்மை பயக்கும். தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியானது அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டமைப்பதற்கு உதவும் வெளிநாட்டு நிதியங்களை நாட்டிற்கு கவர்வதற்காக சந்தை எண்ணப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. அதிகாரசபைகள் நடுத்தர காலம் தொடக்கம் நீண்ட காலம் வரையான காலப்பகுதியில் படுகடன் உறுதிப்பாட்டு இலக்கிடல்களை மீளக்கட்டமைப்பதற்கு, 13 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைவான தங்கியிருப்பு பொறுப்புக்களை பொருண்மியமாக்குதல், உள்ளடங்கலாக 2032ஆம் ஆண்டளவில் 95 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைவாக பொதுப் படுகடன் மட்டத்தைக் குறைத்தல், 2027-2032 காலப்பகுதியில், சராசரி மத்திய அரசாங்க மொத்த நிதியளித்தல் தேவைப்பாடுகளைக் குறைத்தல், இதனால் அழுத்தத்தின் கீழுள்ள நீடித்த இடர்நேர்வுகளை முகாமைச் செய்தல், 2027-2032 வரையான எந்தவொரு ஆண்டிலும் 4.5 சதவீதம் கொண்ட மொ.உ.உற்பத்திக்கு குறைவாக மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுச் செலாவணிப் படுகடன் தீர்ப்பனவை வைத்திருத்தல், அத்துடன் இறை மற்றும் நிதியளிப்பு இடைவெளிகள் மூடப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்தல் போன்ற நடவடிக்கைகள் அவசியமாக விளங்குகின்றன.

**முடிவுரை**

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொண்டு, அமைப்பியல்சார் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தலானது அண்மைக்கால உறுதிப்பாட்டை மீளக்கட்டமைப்பது மாத்திரமன்றி பிந்தைய படுகடன் மறுசீரமைப்பில் போதியளவு பாதுகாப்புடனும் மீளெழுச்சியுடனும் தேசத்தை மீளக்கட்டியெழுப்பவதிலும் கவனத்தை செலுத்துகின்றது. மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை நிரந்தரமாக மீட்டெடுப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் மீட்டெடுத்தலுக்கு பின்னரான நடவடிக்கையானது இன்றியமையாததாக காணப்படுகின்றது. இலங்கை அனுபவித்துவரும் தொடர்ச்சியான இரட்டைப் பற்றாக்குறையின் இக்கட்டான சூழ்நிலையானது தொடர்புடைய ஆர்வலர்களுடனான, ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டதும் மாற்றமடைகின்ற அரசியல் முறைமைகளின் செல்வாக்குகளிலிருந்து பாதுகாக்கப்பட்டதுமான அனைத்தையுமுள்ளடக்கிய தேசிய கொள்கைப் பொதியொன்றின் மூலமாக நிலையான அடிப்படையொன்றில் சென்மதி நிலுவை சிக்கல்களைத் தீர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகின்றது. மேலும், படுகடனல்லா வெளிநாட்டுச் செலாவணி உருவாக்க

5

மூலங்கள் ஆராயப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டிய அதேவேளை, வர்த்தக வெளிநாட்டுப் படுகடனிலிருந்து நடைமுறை கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கான தேவையும் குறைக்கப்பட வேண்டும். மேலும், பன்னாட்டு அனுபவங்களின் பிரகாரம், படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதாரத்தின் அடுத்தடுத்த மீட்சிக்குமான விளைவுகளுக்கு சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியை நோக்கிய அதிகாரிகள் ஈடுபாட்டு நிலை முக்கியமானதாக அமைகின்றது. மேலும், படுகடன் மறுசீரமைப்பு, மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பேரண்ட இறைச் சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலாக பொருளாதார சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தற்போதைய முயற்சிகள் முன்னோக்கிச் செல்வதற்கான தேவையான நிபந்தனைகளாகும். இருந்தபோதிலும், அரசாங்க வரவுசெலவுதிட்டப் பற்றாக்குறைகளினதும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளினதும் நிதியளித்தல் கலவையானது எதிர்வரும் காலத்தில் படுகடனல்லாத நிதியளித்தலை அதிகரித்தாலேயன்றி, இத்தகைய முயற்சிகள் மாத்திரம் நாட்டினுடைய ஆழமான அமைப்பியல்சார் பலவீனங்களுக்கும் பேரண்ட பொருளாதார சிக்கல்களுக்கும் நிரந்தரமான தீர்வொன்றாக அமையாது.

உசாத்துணைகள்:

1. Das, U., Papaioannou, M., & Trebesch, C. (2012). 'Sovereign Debt Restructurings 1950-2010: Literature Survey, Data, and Stylized Facts'. IMF Working Paper, IMF.

**குறிப்பிட்ட வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக, 2022இல் குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தது.**

அட்டவணை 5.13 (ஆ)

வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை

ஐ.அ.டொ.மில்லியன் (கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2021(அ) | 2022(ஆ) |
|---|---|---|
| பக்கம் 199 இலிருந்து தொடர்கிறது | | |
| **ஏனைய துறைகள் (இ)** | **6,847** | **4,454** |
| குறுங்காலம் | 1,915 | 1,020 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஈ) | 1,915 | 1,020 |
| நீண்ட காலம் | 4,932 | 3,435 |
| படுகடன் பிணையங்கள் (உ) | 94 | 78 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் சந்தைப் பெறுமதி | | 72 |
| பன்னாட்டு முறிகளின் அட்டுறு வட்டி | | 6 |
| கடன்கள் | 4,838 | 3,357 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 2,293 | 2,372 |
| அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் | 2,545 | 985 |
| **நேரடி முதலீடு: கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஊ)** | **5,334** | **5,944** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **51,775** | **49,678** |
| மொ.உ.உ. சதவீதமாக | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 58.5 | 64.5 |
| குறுங்கால படுகடன் | 9.5 | 9.9 |
| நீண்டகால படுகடன் | 49.0 | 54.6 |
| மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக | | |
| குறுங்கால படுகடன் | 16.3 | 15.4 |
| நீண்டகால படுகடன் | 83.7 | 84.6 |
| **வதிவற்றோர்களுக்கான மொத்த அட்டுறு வட்டி** | | **709** |
| அரசாங்கம் - நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | | 551 |
| அரசாங்கம் - வெளிநாட்டுப் படுகடன்கள் | | 149 |
| மத்திய வங்கி - பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல்கள் | | 3 |
| அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் கூப்பன்கள் | | 6 |
| ஞாபகார்த்த விடயங்கள் | | |
| **வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் படுகடன் பிணையங்கள் - முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **11,400** | **11,622** |
| பொது அரசாங்கம் | 11,225 | 11,447 |
| திறைசேரி உண்டியல்கள் | 1 | 34 |
| திறைசேரி முறிகள் | 9 | 36 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 24 | 27 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 11,191 | 10,800 |
| வதிவற்றோர்களுக்காக செலுத்தவேண்டிய நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் கூப்பன்களின் அட்டுறு வட்டி | | 551 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |
| **நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப்பெறுமதி** | **13,050** | **12,550** |
| வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 11,191 | 10,800 |
| வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (எ) | 1,859 | 1,750 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக
(எ) 2019 திசெம்பரிலிருந்து வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களிலிருந்து நீக்கப்பட்டது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வர்த்தக ரீதியாக கடனீந்தோருக்குச் சேரவேண்டிய இருபுடை வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உட்பட, பல்புடை நிறுவனங்கள் தவிர்ந்த, வதிவற்றோருக்குச் செலுத்தப்பட வேண்டிய மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் மீளச்செலுத்தப்படாதமையே படுகடன் தீர்ப்பனவில் ஏற்பட்ட இக்குறைப்பிற்கு முக்கிய காரணமாகும். இதற்கமைய, மொத்த வெளிநாட்டு தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2021இன் ஐ.அ.டொலர் 4,597 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 2,471 மில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கத்தின் மூலதனக் கொடுப்பனவுகள் 2021இல் ஐ.அ.டொலர் 2,377 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 1,236 மில்லியனாக விளங்கியது. மேலும், 2022இல் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வட்டி மீள்கொடுப்பனவுகள் 2021இன் ஐ.அ.டொலர் 1,187 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 465 மில்லியனாகக் காணப்பட்டது. வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையின் பின்னர் அரசாங்கத்தினால் பல்புடை நிறுவனங்களுக்குச் சேரவேண்டிய வெளிநாட்டுக் கடன்கள் மாத்திரமே மீளச்செலுத்தப்பட்டன. மத்திய வங்கி முன்னைய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்திற்குச் சேர வேண்டியவற்றை தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்தவேளையில் பிராந்திய மத்திய வங்கிகளுடனான தற்போதுள்ள பன்னாட்டு பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளை மீண்டும் பயன்படுத்தத் தொடங்கியது. அதேவேளை, தனியார் துறை வழமை போன்று அவற்றின் வெளிநாட்டுக் கடன் பொறுப்புக்களை மீளச்செலுத்தியது. எனினும், வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ள சில அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வெளிநாட்டுப் பொறுப்புக்களை பகுதியளவில் மீளச்செலுத்தியுள்ளதுடன் அரசாங்கத்தினால் படுகடன் இடைநிறுத்தப்பட்டமையினால் பாதிக்கப்பட்டன. இவ்வரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சாரசபை, இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை விமானநிலையம் மற்றும் வான் போக்குவரத்துப் பணிகளை உள்ளடக்கியிருந்தவேளையில் மீளச்செலுத்தாத அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் படுகடன்களில் சில பிரிவு 5.7.1இல் குறிப்பிடப்பட்டவாறு பொது அரச படுகடனாகக் மீள்வகைப்படுத்தப்பட்டன.

5

## 5.8 செலாவணி வீத அசைவுகள்

**இலங்கை ரூபா, 2022 மேயில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டல் வீச்சைச் சுற்றி நிலைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக உயர் தளம்பலைக் கொண்டிருந்ததுடன் ஐ.அ.டொலருக்கெதிராக வரலாற்றிலேயே பாரிய தேய்வினை 2022இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்தது.** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் தார்மீக ரீதியான கடப்பாடுகள் என்பன 2022இன் தொடக்கப்பகுதியில் இலங்கை ரூபாவினை ஐ.அ.டொலரொன்றிற்கு ரூ.200-203 என்ற வீச்சில் பேணுவதற்கு உதவின. எனினும், உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் திரவத்தன்மையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பற்றாக்குறை, விரிவாக்கப்பட்ட அலுவல்சார் செலாவணி வீதத்திற்கும் "அதிகாரபூர்வமற்ற" வீதத்திற்குமிடையிலான பரவல் மற்றும் மோசமடைந்த உலகளாவிய நிலைமைகள் என்பன செலாவணி வீதத்தின் மீது தொடர்ச்சியாக அழுத்தத்தினைத் தோற்றுவித்தமையானது 2022இன் மாச்சு தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்ட செலாவணி வீதத்தில் அளவிடப்பட்ட சீராக்கத்தினைத் தேவைப்படுத்தியது. எனினும், அதனைத் தொடர்ந்து நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் சந்தை விசைகளினால் செலாவணி வீதம் பாரியளவில் மிகைப்படுத்தப்பட்டமை இலங்கை ரூபா 2022 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 41.4 சதவீதத்தினால் கணிசமாக தேய்வடையக் காரணமாகியது. மிகையான ஊகம் மற்றும் பொருளாதாரத்தின் மீதான இதன் மோசமான கசிந்த தாக்கம் என்பனவற்றின் தூண்டல் காரணமாக ஏற்பட்ட இக்குறிப்பிடத்தக்க தளம்பல்களைக் குறைப்பதற்கு செலாவணி வீதத்தின் ஒரு நாளுக்குள்ளேயான தளம்பல்களை முகாமைப்படுத்துவதற்கான தற்காலிக பொறிமுறையொன்றாக மாறல்களின் வீச்சை மத்திய வங்கி நாளாந்த அடிப்படையில் அறிவித்தது. இது, முன்னொருபோதுமில்லாத சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கிடையில் மிகையான ஊகங்களினால் பெரும்பாலும் தூண்டப்பட்ட செலாவணி வீதத்தின் ஏதேனும் பாரிய தளம்பல்களைக் கட்டுப்படுத்த உதவியது. 2022 மே 13 இலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதிய செலாவணி வீதத்தினை தீர்மானிக்கும் ஏற்பாடுகளுக்கிணங்க, நடுத்தர உடன் செலாவணி வீதத்தில் இருபக்கங்களின் மீதுமான மாறுபடும் அளவுடன் ஐ.அ.டொலர்/ரூபா இலான வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி உடன் சந்தை செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியினால் நடுத்தர செலாவணி வீதமொன்று அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2022 மே 13 இலிருந்து 2022 திசெம்பர் இறுதிவரை இலங்கை ரூபா, ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக சிறிதளவு தேய்வினை மட்டுமே பதிவுசெய்தது. நாட்டின் பொருளாதார நிலைமைகள் பற்றிய சந்தையின் நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக தீவிரமற்ற உடன் சந்தையானது இக்காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் பரந்தளவு உறுதித்தன்மையினையும் விளக்குவதாகக் காணப்பட்டது. இதற்கமைய, ரூபாவின் ஆண்டுத் தேய்வு 2022 காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 44.8 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதேவேளை, மத்திய வங்கி 2022ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு 2021இல் ஐ.அ.டொலர் 747 மில்லியன் கொண்ட தேறிய வழங்கலுடன் ஒப்பிடுகையில் தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 568 மில்லியனை வழங்கியது. குறுக்கு நாணய செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2022 இறுதியில் இலங்கை ரூபா யூரோ (41.4 சதவீதம்), ஸ்ரேலிங்

அட்டவணை 5.14
வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூபா.மில்லியன்

| வகை | 2021 (அ) | 2022 (ஆ) |
|---|---|---|
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **4,597** | **2,471** |
| **1.1 தீர்ப்பனவுகள்** | **3,187** | **1,710** |
| பொது அரசாங்கம் | 2,377 | 1,236 |
| செயற்றிட்டக் கடன்கள் | 1,671 | 845 |
| படுகடன் பிணையங்கள் | 706 | 391 |
| மத்திய வங்கி | 457 | 140 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 57 | 140 |
| பன்னாட்டு பரிஸ்பர பரிமாற்றல்கள் | 400 | - |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 354 | 335 |
| வெளிநாட்டு கடன்கள் | 354 | 335 |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **1,410** | **761** |
| பொது அரசாங்கம் | 1,187 | 465 |
| செயற்றிட்ட கடன்கள் | 394 | 273 |
| படுகடன் பிணையங்கள் | 793 | 192 |
| மத்திய வங்கி | 15 | 58 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 15 | 42 |
| பன்னாட்டு பரிஸ்பர பரிமாற்றல்கள் | 1 | 16 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 197 | 207 |
| வெளிநாட்டு கடன்கள் | 184 | 200 |
| படுகடன் பிணையங்கள் | 12 | 6 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 11 | 31 |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **14,974** | **16,169** |
| **3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள், வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **20,587** | **20,211** |
| **4. படுகடன் பணி விகிதம்** | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 30.7 | 15.3 |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 30.2 | 14.2 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 22.3 | 12.2 |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 22.0 | 11.3 |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 3,564 | 1,701 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 77.5 | 68.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

5

பவுண் (38.1 சதவீதம்), யப்பானிய யென் (36.4 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (38.6 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்தது. மற்றையவற்றிற்கிடையே, அதிகரித்து வருகின்ற வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை, பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடுகளின் இறுதிப்படுத்தல் தொடர்பான சாதகமான அபிவிருத்திகள், குறைவடைந்த நடவடிக்கை மற்றும் இறுக்கமான கொடுகடன் நிலைமைகள் என்பனவற்றிற்கிடையில் இறக்குமதிக் கேள்வி குறிப்பிடத்தக்களவிற்கு மிதமடைந்தமை என்பனவற்றுடன் 2022இன் பிற்பகுதியிலிருந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்யப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் மற்றும் மத்திய வங்கியின் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் சந்தைத் தூண்டல் செலாவணி வீதத்தினை மீண்டும் எய்தும் நோக்கில் மத்திய வங்கி நாளாந்த மாறுபடும் வீச்சின் படிப்படியான தளர்த்தலை ஆரம்பித்தவேளையில் கட்டாய விற்பனை தேவைப்பாடுகளையும் தளர்த்தியது. இதனைத் தொடர்ந்து, மத்திய வங்கி வங்கித்தொழில் முறைமைக்கு அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையினை அனுமதிப்பதற்கான முதல் நடவடிக்கையாக ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பனவற்றிலிருந்தான கட்டாய வெளிநாட்டுச் செலாவணி மாற்றல் தேவைப்பாடுகளை 2023 பெப்புருவரி 27இல் 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்குக் குறைத்ததுடன், அதனைத் தொடர்ந்து செலாவணி வீதத்திற்கான மாறுபடும் வீச்சை படிப்படியாக விரிவாக்கியது. இவ்வழிமுறைகளுடன் பணிகள் துறைக்கான உறுதியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீட்டிற்கான நிதியியல் பாய்ச்சல்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு இறுதிப்படுத்தலுடன் சந்தை நம்பிக்கை மீண்டும் ஏற்பட்டமை என்பன 2023 மாச்சு தொடக்கத்தில் செலாவணி வீதம் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைய வழிவகுத்து 2022 தொடக்கப்பகுதியில் காணப்பட்ட மிகையான செலாவணி வீதம் திருத்தப்பட்டது. எனினும், ஒப்பீட்டளவில் குறுகிய காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க உயர்வான அழுத்தங்களுக்கு மத்தியில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட உயர்வினை அனுமதிக்கும் பொருட்டு மத்திய வங்கி, வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. இதற்கமைய, 2023 மாச்சில் ஒட்டுமொத்த அடிப்படையில் மத்திய வங்கி கொள்வனவு செய்த வெளிநாட்டு செலவாணி ஐ.அ.டொலர் 453 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, மத்திய வங்கி வழிகாட்டல் வீச்சினதும் கட்டாய விற்பனைத் தேவைப்பாட்டினதும் முழுமையாக நீக்கலை 2023 மாச்சு 07ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் அறிவித்தது. இத்தளர்த்தல் வழிமுறைகள் மற்றும் அண்மைக் காலத்தில் மேம்பட்ட வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடுகள் என்பனவற்றின் இணைந்த தாக்கமொன்றாக, 2023 மாச்சு இறுதியளவில் ஐ.அ.டொலரொன்றிற்கு இலங்கை ரூபா. 327.29 இற்கு 10.9 சதவீதத்தினால் படிப்படியாக உயர்வடைந்தது.

**அட்டவணை 5.15**
**செலாவணி வீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2020 | 2021 | 2022 | 2020 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 |
| யூரோ | 229.42 | 226.86 | 386.93 | 212.07 | 235.10 | 339.04 | 1.13 | -41.37 | -9.80 | -30.66 |
| இந்திய ரூபா | 2.55 | 2.69 | 4.39 | 2.50 | 2.69 | 4.11 | -5.33 | -38.67 | -6.96 | -34.56 |
| யப்பானிய யென் | 1.81 | 1.74 | 2.74 | 1.74 | 1.81 | 2.44 | 3.91 | -36.46 | -3.95 | -25.93 |
| ஸ்டேர்லிங் பவுண் | 254.35 | 270.60 | 437.35 | 238.22 | 273.51 | 396.89 | -6.00 | -38.13 | -12.90 | -31.09 |
| ஐ.அ.டொலர் | 186.41 | 200.43 | 363.11 | 185.52 | 198.88 | 324.55 | -7.00 | -44.80 | -6.72 | -38.72 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ.) | 268.48 | 280.53 | 483.24 | 258.61 | 283.18 | 431.91 | -4.29 | -41.95 | -8.68 | -34.43 |
| **தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) (2017=100)** | **ஆண்டிறுதி சுட்டெண்** | | | **ஆண்டுச் சராசரி சுட்டெண்** | | | **முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம்** | | | |
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| | 2020 | 2021 | 2022 | 2020 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 83.12 | 79.65 | 47.32 | 85.93 | 78.64 | 53.99 | -4.18 | -40.59 | -8.48 | -31.34 |
| உ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 88.37 | 83.31 | 46.23 | 91.52 | 83.58 | 54.33 | -5.72 | -44.51 | -8.67 | -35.00 |


(அ) இலங்கை ரூபாவிற்கு சமனான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.14
செலாவணி வீத அசைவுகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வீத உயர்வுக்கு மத்தியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் பலமடைந்தமையுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஐ.அ.டொலருக்கெதிராக மற்றைய முக்கிய நாணயங்களும் தேய்வடைந்தன.** இதற்கமைய, 2022 இறுதியில், யூரோ (5.9 சதவீதம்), யப்பானிய யென் (13.2 சதவீதம்), ஸ்டேர்லிங் பவுண் (10.8 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (10.1 சதவீதம்) என்பன ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தன. பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக 41.9 சதவீதத்தினால் தேய்வடைந்த போதிலும் 2023இன் முதற் காலாண்டுப்பகுதியில் பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா உயர்வடைந்ததுடன் 2023 மாச்சு இறுதியளவில் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக 9.8 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

### 5.8.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**5 நாணயம் மற்றும் 24 நாணயம் இரண்டினதும் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2022ஆம் ஆண்டுப்பகுதியில் கணிசமானளவு கீழ் நோக்கிய சீராக்கத்திற்குட்பட்டன.** குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுடன் சேர்ந்து குறிப்பிட்ட முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா பெயரளவில் தேய்வடைந்தமையினைப் பிரதிபலித்து பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைய, 2022இல் 5 நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 41.1 சதவீதத்தினால் தேய்வடைந்தவேளையில் 24 நாணய சுட்டெண் 40.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை, இலங்கையில் வெளிநாட்டு போட்டித்தன்மையினை எடுத்துக்காட்டுகின்ற 5 நாணயம் மற்றும் 24 நாணயச் சுட்டெண்களினால் அளவிடப்பட்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆண்டுப்பகுதியில் முறையே 13.5 சதவீதத்தினாலும் 44.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பொதுவாக, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்ணெ்கள் 100 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட (2017=100) கீழ் மட்டத்திற்கும் குறிப்பிடத்தக்களவு கீழே தொடர்ந்தும் காணப்பட்டதுடன் செலாவணி வீதம் நாட்டின் வர்த்தக போட்டித்தன்மைக்கு தொடர்ந்தும் ஆதரவாக இருந்தமையினை எடுத்துக்காட்டியது. 2023 மாச்சில் செலாவணி வீதம் அதிகளவிற்கு உயர்வடைந்தமையின் காரணமாக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆகிய இரண்டினதும் சுட்டெண்கள் கணிசமாக அதிகரித்து ஐ.அ.டொலருக்கும் நாணயக் கூடையிலுள்ள ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா பெயரளவில் உயர்வடைந்தமையினைப் பிரதிபலித்தது. இதற்கமைய, 2023 மாச்சு இறுதியில் 5 நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 9.4 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 15.5 சதவீதத்தினால் குறைவடைந்து 24 நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே 10.3 சதவீதத்தினாலும் 10.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன.


### 5.8.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்

**உள்நாட்டுச் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்களின் அளவுகள் 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் மேலும் வீழ்ச்சியடைந்தன.** வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2021இன் ஐ.அ.டொலர் 12,160 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 9,570 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

5

உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021இல் ஐ.அ.டொலர் 5,852 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஐ.அ.டொலர் 5,479 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 57.3 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2021இன் ஐ.அ.டொலர் 6,308 மில்லியனிலிருந்து 2022இல் ஐ.அ.டொலர் 4,091 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2022இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 568 மில்லியன் நிரம்பல் செய்ததன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது. இது, ஐ.அ.டொலர் 2,148 மில்லியன் கொண்ட கொள்வனவு மற்றும் ஐ.அ.டொலர் 2,716 மில்லியன் கொண்ட வழங்கல் என்பன மூலம் ஏற்பட்டது. சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு, முக்கியமாக ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களை மாற்றுவது தொடர்பான வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட கட்டாய விற்பனைகளூடாகப் நடைப்பெற்றவேளையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைகள் அத்தியாவசிய பண்டங்களின் இறக்குமதிகளை

வரைபடம் 5.15
காலாண்டுக்கான வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல் அளவுகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வசதிப்படுத்துவதன் பேரிலானதாக இருந்தது. மத்திய வங்கி, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தும் அதேவேளை செலாவணி வீதத்தில் மிகையான தளம்பலைத் தணிக்கும் பொருட்டு 2023இன் முதற் காலாண்டுப்பகுதியில் தேறிய அடிப்படையொன்றில், ஐ.அ.டொலர் 861 மில்லியன் கொள்வனவு செய்ததன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது.

5